**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** Side போடுவதற்கு எங்களுக்குத் தெரியாது. (சிரிப்பு) ஆனால் மத்திய அரசாங்கம் நிதி உதவி செய்கிறபோது, மாநில அரசாங்கத்தாலே மத்திய அரசாங்க மானியத்துடன் சில நேரங்களிலே இதுபோன்ற திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன. பிறகு மத்திய அரசாங்கம் அந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டால், மாநில அரசாங்கம் அதைச் செயல்படுத்த முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. அதுபோலத்தான், ஆதிதிராவிட, பழங்குடி மக்களுக்கு இருந்த ஒரு திட்டம் இப்போது மத்திய அரசாங்கம் நிதி உதவி அளிக்க முன்வராத காரணத்தினால் நின்று விட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி.

*முற்பகல் 9-55*

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மூலமாக கிராமப்புறங்களில் ஏற்கெனவே போடப்பட்ட ஏராளமான ஆழ்குழாய்க் கிணறுகள் செயல்படாமல், மோட்டார் எரிந்தோ அல்லது

நீர் மட்டம் கீழே சென்றுவிட்டதன் காரணமாகவோ இப்போது அந்த ஆழ்குழாய்க் கிணறுகள் எல்லாம் வேலை செய்யாமல் பயனற்றுப்போய் இருக்கின்றன. எந்த இடங்களிலே ஆழ்குழாய்க் கிணறுகள் இருந்தனவோ அந்த இடங்களில் கிணறுகளை மீண்டும் செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய இந்த வினாவைப் பயன்படுத்திக்கொண்டு வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் அத்தகைய தகவல்களைப் பெற நான் முயற்சி செய்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதியிலே எந்த இடத்திலே ஆழ்குழாய்க் கிணறுகள் அப்படிச் செயல்படாமல் இருக்கின்றன என்ற விவரத்தை அறிந்து எனக்குத் தெரிவிப்பாரேயானால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி என்பது சுற்றுலாத் தலமாக இருக்கிற காரணத்தால் மத்திய சர்க்கார் வேளாண்மைத் துறையின் மூலமாக ஆழ்குழாய்க் கிணறுகள் போடுவதற்குத் தடை விதித்திருக்கிறது. ஆனால், கன்னியாகுமரி நீங்கலாக இருக்கின்ற இதர பகுதிகள், விளவங்கோடு தாலுகாவினுடைய, கிள்ளியூர் தொகுதியினுடைய, குளச்சல் தொகுதியினுடைய ஏ.வி.எம். கால்வாய்க்கு வட பகுதிகளிலே இந்த ஆழ்குழாய்க் கிணறுகள் போட்டால் விவசாயிகள் மட்டும்தான் அதைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். அந்தவகையில் சில மாற்றங்களை ஏற்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, இந்த நிலத்தடி நீரைப்பற்றி ஒரு கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். இப்போது நமக்கும், மத்திய அரசுக்கும் இதிலே ஒரு பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசு சில Blocks-ஐக் குறிப்பிட்டு, Union-ஐக் குறிப்பிட்டு இவை இவையெல்லாம், Black area, Red area, Yellow area என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதாவது உள்ளேயிருக்கிற நிலத்தடி நீரில் 85 சதவிகிதத்திற்குமேலே எடுத்துவிட்டிருந்தால் அந்தப் பகுதிகளிலே ஆழ்குழாய்க் கிணறுகளோ, கிணறு வெட்டுவதோ, Pump set போடுவதோ கூடாது என்று அவர்கள் தெரிவிக்கிறார்கள். ஆனால் அதை நாம் ஒத்துக்கொண்டால் பல பகுதிகளிலே இப்படிப்பட்ட விவசாயிகளுக்கு





பெரிய இடர்ப்பாடு உருவாகும். உதாரணத்திற்கு எடுத்துச் சொன்னால், வடாற்காட்டிலே ஆரணி Union இருக்கிறது. ஆரணி Union-ல் இனிமேல் கிணறே வெட்டக் கூடாது என்று சொன்னால் அங்கேயிருக்கிற விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். அதனால், பலமுறை, பல கருத்தரங்குகளில் நாங்கள் அதை ஏற்க முடியாது என்று எடுத்துத் தெரிவித்திருக்கிறோம். ஆனால் மத்திய அரசு, அவர்களே ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து—ஏனென்றால் மத்திய அரசு எந்த சட்டத்தையும், Concurrent list-லே இருக்கிற காரணத்தால் நிறைவேற்றலாம். ஆனால் பிறகு நாம் சாதாரண ஒரு ஆழ்துளைக் கிணறு போடுவதற்குக்கூட மத்திய அரசாங்கத்திடம் போய், அவர்கள் அனுமதித்தால்தான் போட வேண்டிய ஒரு சூழ்நிலை வந்துவிடும். ஆகவே மத்திய அரசு, இம்மாதம் 30 ஆம் தேதி இதுகுறித்து ஒரு கருத்தரங்கு பிரதமர் தலைமையில் கூட்டவிருக்கிறது; நான் அந்தக் கருத்தரங்கிற்குப் போகவிருக்கிறேன். இதற்கிடையில் நம்முடைய மாநிலத்தினுடைய கொள்கைகளையும் விளக்கங்களையும்—நாம் எப்படி அதை முறைப்படுத்த வேண்டும் என்பதற்கும் தமிழக அரசு ஒரு சட்டமுன்வடிவைத் தயார் செய்து கொண்டிருக்கிறது. அது விரைவில் இந்த மன்றத்தின்முன் வைக்கப்படும். எனவே, இதிலே சாதக பாதகங்கள்—அவர்கள் இதற்கு மேலும் நிலத்தடி நீரை நீங்கள் எடுத்துவிட்டீர்களானால் Ground water re-charge செய்வதற்கு முடியாது என்கிறார்கள். ஆனால் நிலத்தையே நம்பியிருக்கிற ஏழைகள் பாடு கஷ்டமாகப் போய்விடும் என்பது நம்முடைய வாதம். இது மிகப் பெரிய Controversy-யான subject. எனவே 30 ஆம் தேதிக்குப் பிறகு ஒரு நல்ல முடிவு தெரியும் என்று கருதுகிறேன். இதற்கு மக்கள், மாமன்ற உறுப்பினர்களுடைய opinion பெறக்கூடிய அளவிற்கு ஒரு சட்டமுன்வடிவையும் இந்த மாமன்றத்திலே இந்த அரசு முன்மொழிய இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்டுவதற்கு, விவசாயிகளுக்குப் போதுமான அளவிற்கு எந்தப் பகுதியிலே நீர் வளம் இருக்கிறது என்று தெரியாமல் போய்விடுகிறது. எனவே, வேளாண்மைத் துறையின் மூலமாக Mobile ஆராய்ச்சிக் கூடம் ஒன்றை ஏற்பாடு செய்து, அந்த நிலத்தடி நீரை விவசாயிகள் எளிமையாகக் கண்டறிவதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்தித்தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் அமைக்க விண்ணப்பித்து அவர்கள் போடக்கூடிய நிலை ஏற்படுகிறபோது அங்கேயிருக்கின்ற நிலத்தடி நீர் எப்படியிருக்கிறது என்று நிபுணர்களைக் கொண்டு ஆராய்ந்து பார்த்துதான் பிறகு அந்த இடத்திலே அதுபோன்ற ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்படுகின்றன. இல்லாவிட்டாலும்கூட, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலே, பொறியாளர்கள் இருக்கிறார்கள். அவர்களிடத்திலே சொல்லி அவர்களை அழைத்துக்கொண்டு போய் Ground water எப்படி இருக்கிறது, எந்த இடத்திலே water source இருக்கிறது என்று தெரிந்து அந்த இடத்திலே bore போட வேண்டுமென்று சொன்னால். அந்த இடத்திலே போடுகிறார்கள். இப்போது அந்த வாய்ப்பு இருக்கிறது. எனவே இதற்காக தனியாக ஒரு Mobile இயந்திரப் பிரிவை அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 126, திருமதி ஆர். சரஸ்வதி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**126—**

### தடுப்புச் சுவர் கட்டுதல்

***8431—திருமதி ஆர். சரஸ்வதி:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* அமராவதி ஆற்று நீரை சேமிக்க தாராபுரத்தில் ஆற்றின் குறுக்கே தடுப்புச் சுவர் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்ளே,

*(அ)* ஆம்.

*(ஆ)* இத்திட்டம் அரசின் நிதி நிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.



**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதிக்கு ஒரு குளம் என்ற வகையில் குளங்களைத் தூர்வாரி, விவசாயிகள் மனதில் நீங்கா இடம் பெற்ற நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள், தாராபுரம் நகர மக்களின் தீராத குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்துக் கொடுக்க அமராவதி ஆற்றின் குறுக்கே தடுப்புச் சுவர் கட்டித்தர ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு தடுப்புச் சுவர் கட்ட முடியுமா என்பதை முதலில் ஆராய்ந்தோம். அவர்கள் முதல்நிலை அறிக்கை தந்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் 3400 ஏக்கர் புஞ்சை நிலங்கள் நஞ்சை நிலங்களாக மாறக்கூடிய வாய்ப்புண்டு என்ற காரணத்தால் கவுண்டன்வலசு என்கிற ஒரு பகுதியிலே ஒரு தடுப்பணையைக் கட்டி, மூலனூர் பூராம்பட்டி, அதற்குப் பிறகு, மேலப்பாளையம், ஓரத்துப்பாளையம், எல்லப்பாளையம், கரம்பம்பட்டி மற்றும் புள்ளம்பட்டி ஆகிய கிராமங்களுக்குத் தண்ணீர் வசதி செய்து தரலாம் என்று இருக்கிறது. முதல்நிலை அறிக்கையோடு ஓர் அரசு திட்டத்தை எடுத்துவிடாது. இதுகுறித்து detailed report ஒன்று வரவேண்டும். அதற்கு அரசு பணித்திருக்கிறது. அந்தப் பணியும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்த அறிக்கை கிடைத்த பிறகுதான், இதுகுறித்து இறுதி முடிவு எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், பவானி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட அமரபேட்டை ஒன்றியத்தில், அட்டவணைப்புதூரில் அணைக்கட்டு கட்ட வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டது. 4 ஆண்டுகள் தண்ணீர் வரத்தை வைத்துதான் அணை கட்ட முடியும் என்ற அடிப்படையில் 4 சிறிய தடுப்பணைகளாவது சிற்றாற்றின் குறுக்கே கட்டிக்கொடுத்து, அதன்மூலம் பல்லாயிரக் கணக்கான விவசாயிகளுடைய கிணறுகளுக்கு ஊற்று கிடைத்து, பயன் அடையக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று, தாங்கள் ஈரோடு வந்த நேரத்திலே கேட்டபோது, உடனடியாக அனுமதியைக் கொடுத்து, இன்னும் திட்டம் நிறைவேறாமல் இருக்கக்கூடிய சூழ்நிலையில், அதை நிறைவேற்றிக் கொடுப்பீர்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

[1999 மார்ச் 22

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அட்டவணைப்புதூரில், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட இடத்தில் அணை கட்டுவதில் சிரமம் இருக்கிறது என்று எடுத்துக்காட்டி அதற்கு மாற்றாக சிற்றாற்றில் வேறு இடத்தில் தடுப்பணைகளைக் கட்டித் தருகிறோம் என்று சொன்னேன். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொண்டு இருக்கிறது. அது விரைவில் முடிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற ஆறுகளின் குறுக்கே சாத்தியக்கூறு உள்ள இடங்களில் தடுப்புச் சுவர் கட்டக்கூடிய திட்டம் உண்மையிலேயே வரவேற்கத்தகுந்த சிறந்த ஒரு திட்டம். இதனால் நிலத்தடி நீர் உயர்ந்து பல இடங்களில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, இது உதவியாக இருக்கிறது. இந்த அடிப்படையிலே திருத்தங்கல் பகுதிக்கும், விருதுநகர் தொகுதியிலுள்ள பல கிராமங்களுக்கும் குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அர்ச்சுனா நதியின் குறுக்கே திருத்தங்கலுக்கு வடகிழக்குப் பகுதியிலே ஒரு தடுப்புச் சுவர் கட்ட இயலும் என்று அதிகாரிகள் கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் நேரில் வந்தபோதுகூட, அவர்களிடம் இதுபற்றி விண்ணப்பம் கொடுத்திருக்கிறேன். இதற்கு சுமார் 20 அல்லது 25 இலட்ச ரூபாய் மட்டுமே செலவு ஆகும் என்று கூறுகின்றார்கள். தடுப்புச் சுவர் கட்டக்கூடிய அந்தத் திட்டத்தை இந்த ஆண்டு நிறைவேற்றித் தருவார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே பணம் எவ்வளவு என்பது முக்கியமல்ல. ஆனால் பாசனத்திலே, கீழ்ப்பகுதியிலே ஆயக்கட்டுகள் பாதிக்காமல் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட இடங்களில் தடுப்பணை கட்டி அங்கிருக்கிற நிலத்தடி நீரை அதிகரிப்பதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தது, குறிப்பாக குடிநீருக்கு. குடிநீருக்கு என்று ஒரு முன்னுரிமை உண்டு. ஆனால் அர்ச்சுனா நதியின் கீழ் கட்டப்படுகிற அந்த அணையிலிருந்து இருக்கண்குடி ஆற்றுக்குத் தண்ணீர் போகிறது. இருந்தாலும் இது ஒரு பெரிய பிரச்சினை இல்லை. நான் அன்றைக்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்த பிறகு, அங்கிருக்கிற எங்கள் அதிகாரிகளிடம் கொடுத்து இதுகுறித்து உடனடியாக ஓர் ஆய்வறிக்கை எனக்கு அனுப்பும்படியாகக் கேட்டிருக்கிறேன். அது வந்த பிறகு இதுகுறித்து தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.



1999 மார்ச் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அமராவதி ஆற்றில் கவுண்டன்வலசு அருகில் அணை ஒன்று கட்டி, மூலனூர் போன்ற பகுதிகள் பயனடைகிற அளவில் அரசினுடைய செயற்குறிப்பு உள்ளது என்று சொன்னார்கள். அதற்காக என்னுடைய தொகுதி மக்களுடைய சார்பாக நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறேன். மேலும், அந்தத் திட்டத்தை இவ்வாண்டே செயல்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அமராவதி ஆற்றில் 70-வது கிலோ மீட்டரில், என்னுடைய தொகுதியிலேதான் அது கடந்து செல்கிறது. அந்தப் பகுதியிலேகூட அணைப்புதூர் என்ற இடத்தில் பழைய தடுப்பணை ஒன்று இருந்து, அது சரிந்துவிழுந்து பழுதடைந்துள்ளது. அதற்காக விவசாயிகள் பல்வேறு நேரத்திலே கோரிக்கை வைத்துள்ளார்கள். அந்தத் தடுப்புச் சுவரையும் எழுப்பி விவசாயிகளுக்கு உதவுவார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, அணையின் தடுப்புச் சுவர் சரிந்து விழுந்தது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். திருமதி சரஸ்வதி மூலக் கேள்விக்கு துணை வினா கேட்கிறவரை பொறுத்திராமல் அதை என்னிடத்திலே எழுதி கொடுத்திருந்தால் அது எப்பொழுதோ சரி செய்யப்பட்டிருக்கும். மாண்புமிகு உறுப்பினர்கள் அப்படிப்பட்ட பிரச்சினைகளை என்னிடத்திலே எழுதித் தந்துவிடலாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொடர்பு இல்லாத கேள்வி கேட்டுக் கொண்டிருப்பீர்கள். உட்காருங்கள்.

வினா எண் 127, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**127—**

**முத்துப்பேட்டைக்குப் பேருந்துகள் இயக்குதல்**

***7483—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டத் தலைநகர் திருவாரூரிலிருந்து கோட்டூர், மீனம்பநல்லூர், சங்கேந்தி வழியாக முத்துப்பேட்டைக்குப் பேருந்துகள் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குறிப்பிட்ட தடத்தின் சாலையில், வடசங்கந்தி அருகில் மதகு பாலம் ஒன்றும் கடுவெளி அருகில் மதகு பாலம் ஒன்றும் பழுதடைந்து பேருந்து இயக்க இயலாத நிலையில் உள்ளது. பாலங்கள் சீர் செய்யப்பெற்ற பின் பேருந்துகள் இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலங்கள் சரி செய்ததற்குப் பின்னால் பேருந்து இயக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், அதிலே பேருந்து என்று சொல்கிறபோது, எண்ணிக்கை ஒன்று, இரண்டு என்ற அடிப்படையிலே இது கேட்கப்படவில்லை. காரணம், கிட்டத்தட்ட 100 கிராமங்களுக்கு மேல் பயன்படுத்துவதற்கான வாய்ப்புள்ள பகுதியாக அது இருக்கிறது. மாவட்டத் தலைநகர் திருவாரூருக்கும் முத்துப்பேட்டைக்கும் இடையில் இருக்கின்ற அந்தக் குறுக்குப் பகுதியிலே அது செல்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டிய கேள்வி அது. ஆகவே, தேவையான அளவிற்குரிய எண்ணிக்கையிலே பேருந்துகள் இயக்கப்படுவதற்கான முயற்சிகளை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் சாலைகள் சரி செய்யப்பட்டு பேருந்து விடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட பிறகு எண்ணிக்கைபற்றி முடிவு செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 128, திரு. செங்கை சிவம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**128—**

### சிறப்புப் பேருந்துகள் இயக்குதல்

***10461—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம், திருத்தணி, கும்மிடிப்பூண்டி போன்ற பகுதிகளிலிருந்து நேரடியாக கோயம்பேட்டிற்கு சிறப்புப் பேருந்துகள் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?





**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) விழுப்புரத்திலிருந்து கோயம்பேட்டிற்கு 1-4-1997 முதல் தினசரி 5 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) தற்போது திருத்தணியிலிருந்து கோயம்பேட்டிற்கு தட எண்கள் 138 B 105 மற்றும் 97 ஆகியவற்றின் மூலம் தினசரி காலை வேளைகளில் 3 நடைகள் வியாபாரிகள் கோரிக்கையின்படி இயக்கப்படுகின்றன.

அதேபோல், தடம் எண் 112 B-ன் மூலம் காலையில் கும்மிடிப்பூண்டி வழியாக கோயம்பேட்டிற்கு பேருந்து வசதி செய்து கொடுக்கப் பட்டிருக்கிறது.

**திரு. செங்கை சிவம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை கோயம்பேட்டிற்கு இத்தகைய பேருந்து வசதிகளைச் செய்து கொடுத்த அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கின்ற அதே நேரத்தில் கோடைக்காலம் ஆரம்பித்துவிட்டதால், மும்பை, ஹைதராபாத், டெல்லி போன்ற பெரு நகரங்களில் குளிர்சாதன வசதிகளுடன்கூடிய (A.C.) பேருந்துகள் பெருமளவிற்கு விடப்படுகின்றன. அதைப்போல, மக்கள் விருப்பத்திற்கேற்ப சென்னையிலேயும் விடப்படுமா? அதுமட்டுமல்லாமல் Ashok Leyland Company Low Floor Bus என்ற மிகத் தாழ்வான பேருந்துகளைத் தயாரித்து, அதன் மூலம் ஊனமுற்றோர், பெண்கள், குழந்தைகள் ஏறி பிரயாணம் செய்வதற்கு மிக வசதியாக இருக்கிறது. இப்போது ஒரு வண்டி ஓடிக்கொண்டிருக்கிறது, மேலும் அது விரிவுபடுத்தப்படுமா? Volvo Company-ன் பேருந்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூட ஏறிப் பிரயாணம் செய்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கும், அதற்கும் என்ன தொடர்பு? இதுவா துணை வினா? உட்காருங்கள்.

வினா எண் 129, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

[1999 மார்ச் 22

**129—**

**தியாகிகளுக்கு நினைவு மண்டபம் அமைத்தல்**

***15608—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1965 மொழிப் போர்த் தியாகிகளுக்கு நினைவு மண்டபம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மொழிப் போர்த் தியாகிகளுக்கு நினைவு மண்டபம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொழிக்காக உலகத்திலேயே தீக்குளித்து இன்னுயிர் நீத்த ஒரு சமுதாயம் இருக்கிறதென்றால், அது நம்முடைய தமிழ்ச் சமுதாயம்தான். அப்படிப்பட்ட ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மொழிப் போர்த் தியாகிகளுக்கு, இப்போது சாதி உணர்வு, மத உணர்வுகள் மேலோங்கி வருகின்ற காரணத்தினாலே, அதனைக் குறைப்பதற்கும், இந்த மொழி உணர்வை மக்களிடையே விதைப்பதற்கும் இந்த மொழிப் போர்த் தியாகிகளுக்கு நினைவு மண்டபம் அமைப்பது மிக இன்றியமையாத தேவையாக இருக்கின்ற காரணத்தினாலே எதிர்காலத்திலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மொழிப் போர்த் தியாகிகளுக்கு நினைவு மண்டபம் அமைக்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து அரசு கவனத்தில் கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 130, திரு. சக. வெங்கடேசன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.



1999 மார்ச் 22]

**130—**

**கோவில் திருப்பணி மேற்கொள்ளுதல்**

***15947—திரு. ச.க. வெங்கடேசன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் அருள்மிகு கோதண்டராமர் கோவில் திருப்பணியை மேற்கொள்ள அரசு முன்வருமா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் அருள்மிகு கோதண்டராமர் கோவிலில் 1993 ஆம் ஆண்டு திருப்பணிகள் முடிவுற்று, குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. மீண்டும் குடமுழுக்கு 12 ஆண்டுகள் கழித்து, 2005-ல் தான் செய்யப்பட வேண்டும். திருக்குளச் சீரமைப்பு, புட்பக விமானப் பாதுகாப்பு மண்டபம் கட்டுதல், வாகனப் பாதுகாப்பு மண்டபம் கட்டுதல் போன்ற திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

**திரு. ச.க. வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 131, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**131—**

**விவசாயக் கடனை நீண்ட காலக் கடனாக மாற்றுதல்**

***14650—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்கு அளிக்கப்படும் கடனை நீண்டகாலக் கடனாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

[1999 மார்ச் 22

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பயிர் விளைச்சல் 37 பைசாவுக்கும் குறைவு என வருவாய்த் துறையினால் அணாவாரி சான்றிதழ் வழங்கப்பட்டு, நிலவரி மற்றும் இதர பாக்கிகளைத் தள்ளுபடி செய்து அரசு ஆணை பிறப்பிக்கும் பட்சத்தில், முதன்முதலாகப் பயிர்கள் பாதிக்கப்படும்போது குறுகிய காலக் கடன்களை வேளாண் நிலை நிறுத்த நிதியினைப் பயன்படுத்தி NABARD மற்றும் மாநில அரசிடமிருந்து நிதி உதவி பெற்றும், 3 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தக்கூடிய மத்திய காலக் கடனாகவும், தொடர்ந்து இரண்டாவது முறையும் பயிர்கள் பாதிக்கப்பட்டால், ஏற்கெனவே மாற்றியமைக்கப்பட்ட மத்திய காலக் கடன்களை 5 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தக்கூடிய நீட்டிக்கப்பட்ட மத்திய கால மாற்றுக் கடன்களாகவும் மாற்ற இயலும். விவசாயிகளுக்கு அளிக்கப்படும் குறுகிய காலக் கடனை நீண்டகாலக் கடனாக மாற்ற இயலாது.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் 6 மாத குறுகிய காலக் கடன் பெற்று பயிர் செய்கின்றார்கள். சாகுபடி செய்கின்றபோது பெருத்த நஷ்டம் ஏற்பட்டு விவசாயிகள் பெற்ற கடனை திருப்பிச் செலுத்த முடியாமல் அல்லல்பட்டு, அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய 6 மாத குறுகிய காலக் கடனை நீண்ட காலக் கடனாக அறிவிப்பதோடு, அவர்கள் பெறுகின்ற, கடனுக்குக் கூடுதல் வட்டியையும் தள்ளுபடி செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்ற கடன்களை மிகவும் குறைந்த வட்டியிலே வழங்கி வருகின்றோம்; மறுநிதியாக NABARD வங்கியிடமிருந்து பெற்று வழங்கி வருகிறோம். 25 ஆயிரம் ரூபாய் வரை 12 சதவீத வட்டியிலும், 25 ஆயிரத்துக்கு மேல் 15 சதவீத வட்டியிலும் வழங்கி வருகின்றோம். அப்படி குறைந்த வட்டிக்கு NABARD மூலம் பெறுகின்றபோது, அவர்கள் சொல்கின்ற சட்டதிட்டப்படித்தான் நம்மால் நடக்க இயலும். உதாரணமாக, கடந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்திலே பெருவெள்ளம் ஏற்பட்டபோது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளினுடைய கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எண்ணி, NABARD மேலாளர்களோடு தொடர்புகொண்டபோது, அரசாங்கமே நினைத்தாலும் கடனைத் தள்ளுபடி செய்ய இயலாது என்று



1999 மார்ச் 22]

அவர்கள் கூறிவிட்ட காரணத்தால்தான், குறுகிய காலக் கடனை மத்திய காலக் கடனாக மாற்றி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இதிலே மாநில அரசு ஒரு முடிவு எடுக்கும்போது NABARD-ஐ அணுகி, அவர்கள் ஒப்புக்கொண்டால்தான், அதை மாற்ற இயலும். உதாரணத்திற்கு, கடந்த 7 ஆண்டுக் காலமாக கடன்களை எப்படி மாற்றித் தந்திருக்கிறோம் என்ற விவரம் :

1991-92 ஆம் ஆண்டு ஏற்பட்ட வறட்சியின் காரணமாக ரூ. 894.60 இலட்சம் குறுகிய காலக் கடனை நாம் மத்திய காலக் கடனாக மாற்றித் தந்து இருக்கிறோம்;

| | |
|---|---|
| 1992-93-ல் அதேபோல | ரூ.370 இலட்சம் |
| 1993-94-ல் | ரூ.5117 இலட்சம் |
| 1994-95-ல் | ரூ.715 இலட்சம் |
| 1995-96-ல் | ரூ.11211 இலட்சம் |
| 1996-97-ல் | ரூ.149 இலட்சம் |

கடந்த ஆண்டு, 1997-98-ல் ரூ.6234 இலட்சம்

இதை மத்திய காலக் கடனாக மாற்றித் தந்திருக்கிறோம். இதிலே 6 மாதம் குறுகிய காலம் என்றில்லை. அரசாங்கம் அறிவிக்க வேண்டும். இது பாதிக்கப்பட்டு இருக்கிறது; ஒரு ரூபாய்க்கு 36 காசு, 37 காசுக்கும் குறைவாக வருவாய் அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது; அதனால் அவர்களுக்குத் தரலாம் என்று அரசாங்கம் சொன்னால், அதை மாற்றி அமைக்கக்கூடிய தகுதி பெறும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். பொன்முடி.

**திரு. எஸ்.எஸ். பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் ஜவுளிக் கொள்கையின் காரணமாக, விசைத்தறி யாளர்களின் பொருளாதார நிலை கடந்த 3, 4 ஆண்டுகளுக்கு மேலாகப் பாதித்துள்ளது. அவர்கள் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய தவணைப் பாக்கிகள் நிலுவையில் உள்ளன. நிதியாண்டின் கடைசி மாதமாக இருப்பதால் 'தவணைப் பாக்கிகளை மொத்தமாகச்

செலுத்தக்கூடிய சூழ்நிலையில் அவர்கள் இல்லை. கட்டாய வசூல் செய்யப்பட்டால் தொழில் முடங்கக்கூடிய சூழ்நிலை உள்ளது. ஆகவே, பாக்கியுள்ள தவணைகளை வரும் மாதத் தவணைகளோடு சுலபத் தவணை முறையில் செலுத்திடவோ அல்லது மொத்தக் கடனையும் நீண்டகாலக் கடனாக மாற்றி அமைத்து, விசைத்தறியாளர்களின் நிலை மேம்படவும், பாதுகாக்கப்படவும் அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது விவசாயிகளின் கடன் பற்றிய விவரம். விசைத் தறியாளர்களைப் பற்றிய விவரம் என்னிடம் இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கொண்டு செல்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் குறுகிய காலக் கடன்களை நீண்ட காலக் கடன்களாக மாற்றுவதன் மூலம் அந்த விவசாயிகளுக்குத்தான் பளு ஏற்படுகிறது. அந்தப் பளு மேலும் மேலும் உயர்ந்து பிறகு ஜப்தி என்ற நிலைக்கு வந்து விடுகிறது. இந்த நிலையிலே அந்தக் கடனையும் NABARD வங்கி தள்ளுபடி செய்ய முடியாத ஒரு கஷ்டமான சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இழப்பீடுகள் கணக்கின்கீழ் அந்தத் தொகையை அரசே செலுத்தி, விவசாயிகளைக் கடன் தொல்லையிலிருந்து காப்பாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுதான் NABARD வங்கியும் தமிழ்நாடு அரசும் 1994ஆம் ஆண்டு ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தம். அரசே பணத்தைச் செலுத்தினாலும், வங்கியால் ஏற்றுக்கொள்ள இயலாது. விவசாயிகளிடமிருந்துதான் வசூல் செய்ய வேண்டுமென்ற அந்த ஒப்பந்தம் ஏற்பட்ட காரணத்தால்தான் அரசால் கடனைச் செலுத்த இயலவில்லை. இல்லையென்றால் கடந்த ஆண்டே முதலமைச்சர் அவர்கள் அதைச் செய்திருப்பார்கள். இப்போது அதைச் செலுத்த முடியாத காரணத்தால்தான் அதைச் செலுத்த முடியவில்லை. அதனால்தான் வட்டியை ஓராண்டுக் காலம் தள்ளி வைத்தார்கள் முதலமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 132, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

## 132—

### வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குக் கட்டடம் கட்டுதல்

***17167—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 133, திரு. கொ.வீ. நன்னன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

## 133—

### பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தைத் தொடங்குதல்

***19151—திரு. கொ.வீ. நன்னன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, அவ்வராபாத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தைத் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செங்கம் தொகுதி அவ்வராபாத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க வாய்ப்புகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 134, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**134—**

**விசைத்தறிகள் அமைத்தல்**

***17967—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் வகையில் விசைத்தறிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதியில் புதிய விசைத்தறிக்கூடம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 135, திரு. செ. இராமலிங்கம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**135—**

**பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையச் சட்டம்**

***16245—திரு. செ. இராமலிங்கம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கேரள, ஆந்திர மாநிலங்களில் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணைய நடவடிக்கைக்காக சட்டம் இயற்றப்பட்டு நடைமுறையிலுள்ளதைப் போல் தமிழக அரசும் சட்டம் இயற்ற நடவடிக்கை எடுக்குமா?



**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்தின் நடவடிக்கைக்காக சட்டமியற்றுவது குறித்த பொருள் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்சநீதிமன்றம் ஏற்கெனவே பிறப்பித்த தீர்ப்பின் அடிப்படையில் பல மாநிலங்களில் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணைய நடவடிக்கைக்காக சட்டம் இயற்றப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்டோர் நலனில் மிகவும் அக்கறையுள்ள நமது அரசு சட்டம் இயற்றப்பட வேண்டிய அவசியத்தைக் கருத்தில் கொண்டு, இந்தக் கூட்டத் தொடரிலேயே சட்டம் கொண்டு வரப்படுமா? தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணைய நடவடிக்கைக்காக சட்டம் இயற்றப்படுவதில் தற்போதைய நிலை என்ன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஒரு வகுப்பினரையும் பிற்படுத்தப்பட்டோர், அல்லது மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் கூடுதலாகச் சேர்க்கப்பட்டது அல்லது சேர்க்கப்படாமல் விடுபட்டது குறித்த பொருளை ஆய்வு செய்து அரசுக்கு ஆலோசனை வழங்க ஒரு நிரந்தர அமைப்பினை மைய அரசும், மாநில அரசுகளும் ஏற்படுத்த வேண்டுமென்று இட ஒதுக்கீடு தொடர்பான மண்டல் குழு அறிக்கை குறித்த வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிற்கிணங்க தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் ஏற்படுத்தப்பட்டது. இந்த ஆணையத்திற்கு சட்ட பூர்வமான அந்தஸ்து வழங்குவதில் தற்போதைய நிலை, மேல் நடவடிக்கை தொடரும் முன்பாக மற்ற மாநிலங்களிலுள்ள பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையங்கள் எந்த ரீதியில் இயங்குகின்றன என்பதையும், அம்மாநிலங்களிலுள்ள பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையங்களுக்கு சட்டபூர்வ அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளதா என்பதைப் பற்றிய தகவல்கள் பிற மாநிலங்களிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. மேற்சொன்ன தகவல்கள் கிடைக்கப் பெற்றவுடன் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 136, திரு. ரா. ஈஸ்வரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

[1999 மார்ச் 22

முற்பகல் 10-20

**136—**

**சந்தனம் மற்றும் தேக்கு மரம் வளர்த்தல்**

***7744-திரு. ரா. ஈஸ்வரன் :**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் தொகுதி, சிவகிரி-புளியங்குடி வரையிலான மேற்குத் தொடர்ச்சி மலையில் சந்தன மரம் மற்றும் தேக்கு மரக் கன்றுகள் நடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் திருநெல்வேலி மாவட்டத்தில் தேக்கு மற்றும் பல கடின வகை மரங்கள் மட்டும் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதியில், மேற்குத் தொடர்ச்சி மலையில் இருந்த தேக்கு மரங்கள், சந்தன மரங்கள் எல்லாம் அழிந்துவிட்டன. மீண்டும் அந்தப் பகுதியில் உயர்ந்த மரங்களான தேக்கு, சந்தன மரங்களை நடுவதற்கு இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலையில், வாசுதேவநல்லூர், சிவகிரி, புளியங்குடி ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய திருநெல்வேலி மற்றும் குமரி மாவட்டங்களில் கடந்த காலங்களில் தேக்கு மரக் கன்றுகள் நடப்பட்டன. சந்தன மரங்களும் நடப்பட்டன. ஆனால் அவை சரியாக வளராத காரணத்தால் தமிழ்நாடு வன வளர்ச்சித் திட்டத்தின்கீழ், ஆண்டுக்கு 200 கிராமங்கள் வனமும், வனம் சார்ந்த இடங்களும் எடுக்கப்பட்டு இப்பொழுது வனவளம் மேம்படுத்தப்பட இருக்கிறது.

திருநெல்வேலி மாவட்டத்திலே மட்டும் 1997-98 ஆம் ஆண்டில் மேல்மட்டம், திரிகூடபுரம், மத்தளம்பாறை, அண்ணாமலைப் புதூர்,



1999 மார்ச் 22]

நடிப்பாரை போன்ற ஐந்து கிராமங்களில் ரூபாய் 87.35 இலட்சம் செலவிலும், 1998-99 ஆம் ஆண்டில், முத்தூர், ராஜீவ் நகர், தென்குளம், இந்திரா நகர், ஆட்டுவளி, காசிதர்மன், முத்துசுவாமிபுரம், காந்திநகர், இந்திரா காலனி, பனியபுரம் மற்றும் சிந்தாமணிதேரி புதூர் ஆகிய 11 கிராமங்களில் ரூ. 242.82 இலட்சம் செலவிலும், 1999-2000 ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் பார்வதிகுளம், மேல்கிருஷ்ணாபுரம், எம்.ஜி.ஆர். நகர், மேமன்குறிச்சி, அண்ணாநகர், இந்திரா நகர் மற்றும் அய்யனார் குளம் ஆகிய 7 கிராமங்களில் ரூ. 2.5 கோடி செலவிலும் புதிதாக மலை வளத்தை மேம்படுத்த பல்வேறு மரங்கள் நடத் திட்டமிடப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையான களக்காடு, செங்கத்தேரி ஆகிய பகுதிகளில் பல கோடி ரூபாய்க்கான வைரக் கற்கள் இருப்பது அரசுக்குத் தெரியுமா? கடந்த 10 தினங்களுக்கு முன்னால்கூட, அங்கே தவறான முறையிலே வைரம் கேரளாவைச் சேர்ந்தவர்களால் தோண்டி எடுக்கப்பட்டபோது, வன அதிகாரிகளுக்கும், தவறான முறையில் அதை எடுத்தவர்களுக்கும் இடையே துப்பாக்கிச் சூடுவரை அங்கே நடைபெற்றது அரசுக்குத் தெரியுமா? ஆகவே, பல கோடி ரூபாய்க்கான இந்த வைரக் கற்களை முறைப்படி மத்திய அரசினுடைய அனுமதி பெற்று எடுக்க வேண்டுமா அல்லது நாமே எடுக்க முடியுமா என்பதற்கான செயற்குறிப்புகள் அரசிடம் உள்ளதா? அது குறித்து மத்திய அரசுக்கு விவரங்கள் அனுப்பப்பட்டுள்ளதா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, களக்காடு, முண்டந்துறை பகுதிகளில், விலை மதிப்புமிக்க வைரக் கற்கள் அல்ல, நல்ல கற்கள் இருப்பது அரசுக்குத் தெரியும். அந்தக் கற்களை கேரளப் பகுதியிலிருந்து வந்தவர்கள் முன்பு ஏராளமாக எடுத்துக்கொண்டிருந்தார்கள். தற்போது அவை மிகவும் நல்ல முறையிலே பாதுகாக்கப்படுகின்றன. இருந்தாலும்கூட, கடந்த வாரம், கேரள மாநிலத்தில் இருந்து வந்த, ஒரு சிலர் அதை எடுக்க முயன்று, நம்முடைய வனத் துறை அதிகாரிகள் அவர்களைப் பிடித்து, வழக்குப்போட்டு இருக்கிறார்கள். மேற்கொண்டு, விவரங்களை அந்த இடத்தை ஆய்ந்த பின்னால்தான் சொல்ல முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1999 மார்ச் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபகாலமாக திருநெல்வேலி மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையில் சந்தன மரமே இல்லை என்ற அளவுக்கு சந்தன மரங்கள் சில சமூக விரோதிகளால் கடத்திச் செல்லப்படுகின்றன. வனத் துறை நிலத்தில் மட்டுமல்லாமல், தனியாரிடமுள்ள சந்தன மரங்கள்கூட சில சமூக விரோதிகளால் வெட்டி எடுத்துச் செல்லப்படுகின்றன. எனவே, அந்தக் கும்பல்களைப் பிடிக்க சிறப்புப் படை அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு அந்த நிலைமை இருந்தது. ஆனால் இப்பொழுது கடுமையான ஏற்பாடுகள் மூலமாக சந்தன மரங்கள் வெட்டுவது முற்றிலுமாகத் தடுக்கப்பட்டு விட்டது. சந்தன மரங்களைப் பொறுத்தவரையில், குறிப்பாக, சேலம், வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, ஈரோடு போன்ற பகுதிகளில்தான் அதிகமாக வளர்கின்றன. உறுப்பினருடைய பகுதியில் சந்தன மரங்கள் இருந்தாலும்கூட, தன் சந்தனத் தன்மை குறைவாக இருக்கின்றது. மேலும், அதிகமாக சந்தன மரங்கள் இல்லை. இருந்தாலும்கூட, இருக்கின்ற மரங்களைப் பாதுகாப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்தக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன்.

*முற்பகல் 10-25*

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டு என்னுடைய சட்டமன்றத் தொகுதியில் 3 கிராமங்கள் ஜப்பான் உதவித் திட்டத்தின் மூலமாகத் தேர்வு செய்யப்பட்டு ஒரு கிராமத்திற்கு 30 இலட்சத்திலிருந்து 40 இலட்ச ரூபாய்வரை செலவு செய்யப்பட்டது. அதேமாதிரி இந்த ஆண்டும் 2 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. ஒன்று தேங்குபட்டணம், இன்னொன்று டி.எம்.புதுக்குடி. ஒரு கிராமத்திற்கு சுமார் 30 இலட்சத்திலிருந்து 40 இலட்சம் ரூபாய் செலவு செய்தும்கூட அந்தத்திட்டம் சரிவர நிறைவேறுவது இல்லை. நீங்கள், இன்னின்ன கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன, அந்தப் பணிகளை மேற்பார்வையிட வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எழுத்து மூலமாகத் தபால்



1999 மார்ச் 22]

அனுப்பியிருக்கிறீர்கள். நாங்கள் சென்று பார்க்கும்போது அந்த அதிகாரிகள் தவறான வேலைகளில் ஈடுபட்டு, தவறான கணக்குகளை வைத்து அந்த 40 இலட்ச ரூபாய்க்கும் பொய்யான vouchers தயார் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே அந்தப் பணிகளை நீங்கள் நேரடியாகப் பார்வையிட்டு.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அமைச்சருக்குப் பதில் எழுதினீர்களா? (குறுக்கீடு) நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லுங்கள். உங்களுக்கு தபால் மூலமாகத்தானே வந்தது? நீங்கள் ஏன் தபால் எழுதவில்லை திரும்பவும்?

**திரு. ரா. ஈஸ்வரன்:** அமைச்சரிடம் நேரடியாகச் சொல்லியிருக்கிறேன். சென்ற ஆண்டில் ஒரு கிராமத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் அமைச்சரோடு நானும் கலந்து கொண்டேன். அப்போது அமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்குக் கடுமையாகச் சுட்டிக்காட்டி, தவறு செய்த அதிகாரிகள்மீது உரிய நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். மீண்டும் தவறுகள் நடக்காதபடி, இந்த ஆண்டும் அவர்கள் துரிதமாகத் தவறுகளைக் கண்டுபிடித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், ஒரு சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிந்து, அந்தத் தொகுதியில் அந்தக் கிராமங்களைத் தேர்வு செய்வதற்கு நீங்கள் அறிவுரைகள் வழங்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு ஜப்பான் நாட்டிலிருந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 500 கோடி ரூபாயை மென்கடனாகப் பெற்று ஆயிரம் கிராமங்களில், ஆண்டுக்கு 200 கிராமங்கள் என்ற அடிப்படையில் இந்தத் திட்டம் மிகச் சிறப்பான முறையிலே செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டுகூட உறுப்பினருடைய தொகுதியிலே நான் சுற்றுப் பயணம் செய்து அந்தக் கிராமங்களை எல்லாம் பார்வையிட்டு வந்தேன். இந்த ஆண்டுகூட 85 சட்டமன்றத் தொகுதிகளில் அந்த 200 கிராமங்கள் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் தனித்தனியாக நான் கடிதம் எழுதி அந்தத் திட்டங்களை மேற்பார்வையிடுமாறு அறிவுறுத்தியிருக்கிறேன். எனவே, தவறு இருக்குமானால், சுட்டிக்காட்டப்படுமானால் கடுமையான நடவடிக்கைகள் எடுத்து தவறுகள் திருத்தப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1999 மார்ச் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 137, திரு. டி. அமரமூர்த்தி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**137—**

**பறவைகள் சரணாலயம் அமைத்தல்**

***17710—திரு. டி. அமரமூர்த்தி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் தொகுதியில் வேட்டக்குடி ஏரியில் பறவைகள் சரணாலயம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் வட்டத்திலுள்ள வேட்டக்குடி கரைவெட்டி ஏரியைப் பறவைகள் சரணாலயமாக மாற்ற அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 138, திரு. தி.ப. ஆறுமுகம், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.

**138—**

**சாலைகள் மேம்பாடு**

***4909—திரு. தி.ப. ஆறுமுகம்:**

மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செங்கோடு நகரப் போக்குவரத்து (புறச்சாலைகள் அமைத்து இணைத்தல்) மற்றும் சாலைகள் மேம்பாடு பற்றி அறிக்கை அளிக்க பல்லவன் போக்குவரத்துக் கழக Consultancy Service-ஐ நியமித்து அரசு உத்தரவிட்டதன்பேரில் அவர்களது அறிக்கை கிடைக்கப்பெற்றதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இறுதி அறிக்கை இன்னும் பெறப்படவில்லை.



1999 மார்ச் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 139, திரு. எஸ்.வி. கிருஷ்ணன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**139—**

**சுடுகாடு அமைத்தல்**

***8284—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, செண்பகராமநல்லூர் செவன்குளத்திற்கு சுடுகாடு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி வட்டம், செண்பகராமநல்லூர் கிராமம் செவன்குளம் குக்கிராமத்தில் வசிக்கும் இந்து ஆதிதிராவிடர்களுக்கு மேற்படி கிராமப் புல எண் 660/2ஏ-ல் 0.10.5 ஹெக்டேர் நிலத்தில் மயானம் ஏற்கெனவே உள்ளது. இவ்விடம் போதுமானதாக அமைந்துள்ளது. மேற்படி மயானத்திற்குச் செல்ல பாதை வசதி செய்து கொடுப்பதைப் பொறுத்தவரை, தற்போது நில எடுப்பு நடவடிக்கையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 140, திரு. சி. வேலாயுதன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**140—**

**சுற்றுலாத் துறைப் பேருந்து இயக்குதல்**

***9354—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்துச் சுற்றுலாத் தலங்களையும் பார்வையிட சுற்றுலாத் துறைப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அது நடைமுறைப்படுத்தப்படும்?

[1999 மார்ச் 22

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பத்மநாபபுரம், திற்பரப்பு, பேச்சிப்பாறை போன்ற சுற்றுலா இடங்களுக்குக் கன்னியாகுமரியிலிருந்து தனித் தனியாகத் தமிழ்நாடு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. தனியாகச் சுற்றுலாப் பேருந்துகள் கடந்த ஆண்டுகளில் இயக்கும்போது சுற்றுலாப் பயணிகளால் சரியாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதால் சுற்றுலாப் பேருந்துகள் இயக்கம் நிறுத்தப்பட்டது. இருப்பினும், தேவை ஏற்படும்பட்சத்தில் மேற்குறிப்பிட்ட இடங்களை இணைத்து சுற்றுலாப் பேருந்துகள் இயக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

*முற்பகல் 10-30*

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக நாடுகளிலிருந்து கன்னியாகுமரிக்கு ஏராளமாக சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். அது மட்டுமல்ல, நம்முடைய நாட்டினுடைய பண்பாடு, இந்த நாட்டைத் தாய்நாடாக, தெய்வமாக பாவிக்கக்கூடிய பண்பாட்டின் அடிப்படையில் வட மாநிலங்களிலிருந்து வரக்கூடியவர்கள் கன்னியாகுமரியைப் புனிதம் என்று கருதி, ஏராளமான வட மாநில மக்கள் வருகின்றார்கள். அவர்கள் கன்னியாகுமரியை மட்டும் பார்த்துவிட்டுச் செல்லக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய மற்ற புண்ணிய ஆலயங்கள், திற்பரப்பு, பேச்சிப்பாறை, பெருஞ்சாணி போன்ற அணைக்கட்டுகள் மற்றும் இவைபோன்ற இடங்களையும் பார்க்கக்கூடிய, அதாவது, ஒரே நாளில் சுற்றிப் பார்த்து வரக்கூடிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்துவோம் என்று சொன்னால், அது சுற்றுலாத் துறையின் மூலமாக அதிக வருமானத்தை அரசுக்கு ஈட்டித் தருவது மட்டுமல்ல, தமிழகத்தினுடைய, குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய பெருமையை உலகிற்குப் பறைசாற்றக்கூடிய வகையில், அது ஒரு வாய்ப்பாக அமையும். எனவே, அரசு இதில் முதலில் இலாபத்தைக் கருதாமல், தொடர்ந்து இயக்கக்கூடிய சூழ்நிலையைச் செய்தோம் என்று சொன்னால், அதிகமான வருமானத்தை



1999 மார்ச் 22]

ஈட்டித் தரும். அது சிறந்தமுறையில் இயங்க வாய்ப்பு ஏற்படும். எனவே, அதைக் காலதாமதப்படுத்தாமல், பரிசீலித்து, உடனே சுற்றுலாத் தலங்களை இணைக்கக்கூடிய வகையில் பேருந்துகளை இயக்க அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சுற்றுலாத் தலங்களைப் பார்ப்பதற்காக தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாகவும், அதுமட்டுமின்றி, தனியார் மூலமாகவும் வசதிகள் இருந்து கொண்டிருக்கின்றன. மேலும் தேவைப்படுகிறபட்சத்தில், நிச்சயமாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. திரு. பி.ஆர். சுந்தரம் பேரவைப் பணிகளினின்று நீக்கி வைக்கப்பெற்ற நாட்களைக் குறைக்கக் கோருதல்

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது சட்டமன்ற உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்களுக்கு ஒரு வார தண்டனை கொடுத்தீர்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் என்னுடைய அறையிலே வந்து என்னைப் பார்த்துக் கேட்டார். 'நீங்கள் சொல்லி நான் செய்ய முடியாது; சுந்தரம் அவர்கள் வந்து என்னை அறையிலே பார்க்க வேண்டும்' என்று சொல்லிவிட்டேன். அதற்குமேல் நீங்கள் இதை தினமும் இங்கே வந்து பேசி, ஒரு நாடகம் ஆக்க வேண்டாம் என்று சொல்லுகின்றேன். (குறுக்கீடு) நான்தான் சொல்லிவிட்டேனே, சுந்தரம் வந்து என்னைப் பார்க்க வேண்டும். நீங்கள் சொல்லி நான் செய்ய மாட்டேன். பல கட்சித் தலைவர்கள் இந்தக் கோரிக்கையை

வைத்திருக்கிறார்கள். என் அறையிலே மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் வந்து வருத்தம் தெரிவித்தால், நிச்சயம் செய்யப்படும், இல்லாவிட்டால் செய்ய முடியாது.

**திரு. இரா. தாமரைக்கனி:** தண்டனை அதிகபட்சமாக இருக்கிறது. அதைக் குறையுங்கள் என்றுதான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை நீங்கள் கேட்டுக்கொண்டே இருங்கள். நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டேன். நீங்கள் அறையிலே வந்து என்னைக் கேட்டீர்கள். சுந்தரம் வந்து என்னைப் பார்த்தால்தான் செய்ய முடியும் என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) அது முடியாது. இன்றைக்கே நான் அனுமதி கொடுக்கிறேன்; இன்றைக்கே அவரை உள்ளே வர அனுமதிக்கிறேன். நான் உங்களிடம் அன்றைக்கே சொல்லிவிட்டேன். நீங்கள் எல்லோரும் சொல்கிற வருத்தம்—அவர் பத்திரிகையிலேயும் வருத்தம் தெரிவித்திருக்கிறார். என்னை வந்து பார்த்துச் சொல்வதிலே என்ன இருக்கிறது? எனக்கு ஒன்றும் தனி மரியாதை கிடையாது. இது அவையினுடைய தீர்மானம்.

**திரு. இரா. தாமரைக்கனி:** இருக்கிறதே மூன்று சட்டமன்ற உறுப்பினர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடு) அதை முப்பது ஆக்குங்கள் (குறுக்கீடு) அந்த மூன்றை முப்பது ஆக்குவதற்கு எனக்கு அதிகாரம் இருக்கிறதா?

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகையில் என்று நீங்கள் சொன்னீர்கள். அந்தப் பத்திரிகையிலேகூட, நீங்கள் அளித்தத் தீர்ப்பு சரியானதல்ல என்று விமர்சித்துத்தான் அவர் பதில் சொல்லியிருக்கிறார். இந்த அவையிலே எதிர்க்கட்சித் தலைவர் உட்பட மற்ற கட்சித் தலைவர்கள் அனைவரும் வந்து சொன்னார்கள். நீங்கள் ஒருமுறை ஒரு தீர்ப்பு வழங்கிவிட்டீர்கள். 'என்னை அறையிலே வந்து பார்த்து, அதற்காக வருத்தம் தெரிவித்தால் பரிசீலிக்கிறேன்' என்று சொல்லியிருக்கிறீர்கள். இவ்வளவு சொன்ன பிறகும், அந்த உறுப்பினர் வராமல், இவர் இங்கே பிரச்சினையை எழுப்புவது, அவர் வரட்டும், வரட்டும் என்று நீங்களே அழைப்பு விடுப்பது என்றால், இது எல்லோருக்கும் ஒரு வழிகாட்டுதலாக அமைந்துவிடும். ஆகவே, இந்த நடைமுறையைப் பின்பற்ற வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அழைப்பு கொடுக்கவில்லை. நான் ஒரு கருத்தைச் சொன்னேன். இன்னொன்றும் சொல்கிறேன். அவர் தவறான தகவலை அந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறார். திரு. தாமரைக்கனி, நான் என்ன சொன்னேன் உங்களிடம்? உங்களிடமும் சொன்னேன்; அவரிடமும் சொன்னேன். ஜனநாயக மரபுப்படி நீங்கள் பேசிவிட்டுச் செல்லுங்கள் என்று சொன்னேன். நீங்கள் ஒத்துக் கொண்டுதான் போனீர்கள். அவர், "நீங்கள் என்ன சொல்வது, நான் என்ன கேட்பது" என்று சொல்லி, கருப்புத் துணியைக் காண்பித்தார்; Budget-ஐக் கிழித்துப் போட்டார். இதற்குத்தான் தண்டனை. பேசியவர்களுக்கெல்லாம் நான் தண்டனை கொடுக்கவில்லை. அவர் என்னுடைய அறைக்கு வந்து வருத்தம் தெரிவித்தால், நிச்சயமாக இன்றைக்கே நான் அனுமதிக்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இதற்கு மேலும் பேசிப் பிரயோசனம் இல்லை, நேரத்தை வீணாக்காதீர்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** அவர் எதிர்ப்பைக் காட்டிவிட்டுத்தான் போனாரேயொழிய, வேறொன்றும் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் ஒன்றும் கிடையாது. ஜனநாயக முறைப்படி உங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துவிட்டுச் செல்லுங்கள் என்று சொன்னேன். (குறுக்கீடு) அப்படியென்றால், உங்களுக்கும் தண்டனை கொடுத்திருக்கலாமே? நீங்கள் அதுமாதிரிதானே அன்றைக்குச் செய்தீர்கள். உங்களைத் தண்டித்தேனா? நான் உங்களுக்குச் சொன்னேன். நீங்கள் ஏற்றுக்கொண்டு போய்விட்டீர்கள். அவர் Budget-ஐக் கிழித்துப் போட்டார்; கருப்புத் துணியைக் காண்பித்தார்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது தேவையில்லாத பேச்சு. தாமரைக்கனி சொல்கிற குற்றச்சாட்டு அவைக்குறிப்பிலே இடம்பெறாது. வெட்டி விவகாரத்தை விலைக்கு வாங்காதீர்கள். அன்றைக்கே திரு. ஞானசேகரன், ஏன் காலதாமதம் பண்ணினீர்கள் என்று கேட்டார். Budget அன்றைக்குச் செய்ய முடியாது. அடுத்த நாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வே. ஆல்பன் அவர்களின் மறைவிற்கு மரியாதை

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

செலுத்துகிற தீர்மானம் கொண்டு வந்தோம், அதனால் செய்யவில்லை. அதற்கு அடுத்த நாள் செய்தேன். அதனாலே** முறைகேடாகப் பேசுகிறீர்கள். அதற்கே நான் நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) இதோடு பிரச்சினை முடிந்தது.

*முற்பகல் 10-35*

## 3. அறிவிப்புகள்

### (அ) பேரவை அலுவல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஏற்கெனவே அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவுகளில் சில மாற்றங்கள். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வே. ஆல்பன் அவர்களின் எதிர்பாராத மறைவின் காரணமாக, ஒரு நாள் பேரவை ஒத்திவைக்கப்பட்டதன் காரணமாக, நிகழ்ச்சி நிரல் கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப்படுகிறது:

| | |
|---|---|
| *22-3-1999*<br>*(திங்கட்கிழமை)*<br>*23-3-1999*<br>*(செவ்வாய்க்கிழமை)*<br>*24-3-1999*<br>*(புதன்கிழமை)*<br>*25-3-1999*<br>*(வியாழக்கிழமை)*<br>*26-3-1999*<br>*(வெள்ளிக்கிழமை)* | 1999-2000ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம் |
| .. | (1) 1999-2000 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்— பேரவை முன் வைத்தல்<br>(2) 1998-99 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான இறுதித் துணை நிதிநிலை அறிக்கை— பேரவைக்கு அளித்தல் |

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது



| | |
|---|---|
| *26-3-1999*<br>*(வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி* | (3) 1999-2000 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதத்திற்குப் பதிலுரை |
| *27-3-1999*<br>*(சனிக்கிழமை)* | .. விடுமுறை |
| *28-3-1999*<br>*(ஞாயிற்றுக்கிழமை)* | .. விடுமுறை |
| *29-3-1999*<br>*(திங்கட்கிழமை)* | .. பக்ரீத்/மகாவீர் ஜெயந்தி - விடுமுறை |
| *30-3-1999*<br>*(செவ்வாய்க்கிழமை)* | .. (1) 1999-2000 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு (விவாதமின்றி)<br>(2) 1999-2000 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கை களுக்கான நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு— அறிமுகம் செய்தல்<br>(3) 1999-2000 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கை களுக்கான நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு—ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும் (விவாதமின்றி)<br>(4) 1998-99 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான இறுதித் துணை நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள துணை மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் |

| | | |
|---|---|---|
| 30-3-1999 (செவ்வாய்க்கிழமை)-தொடர்ச்சி | (5) | 1998-99 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான இறுதித் துணை நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள துணை மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல் |
| | (6) | 1998-99 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான இறுதித் துணை நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள துணை மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு—ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும் (விவாதமின்றி) |
| 31-3-1999 (புதன்கிழமை) | .. | 17—கல்வி |
| 01-04-1999 (வியாழக்கிழமை) | .. | 17—கல்வி |
| 02-04-1999 (வெள்ளிக்கிழமை) | .. | தூய வெள்ளிக்கிழமை - விடுமுறை |
| 03-04-1999 (சனிக்கிழமை) | .. | விடுமுறை |
| 04-04-1999 (ஞாயிற்றுக்கிழமை) | .. | விடுமுறை |
| 05-04-1999 (திங்கட்கிழமை) | .. | 20-வேளாண்மை |
| | .. | 52-வேளாண்மை குறித்த மூலதனச் செலவு |
| 06-04-1999 (செவ்வாய்க்கிழமை) | .. | 1-நில வருவாய்த் துறை |
| | .. | 40-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு |
| | | 45-இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் |



| | | |
|---|---|---|
| 07-04-1999 (புதன்கிழமை) | .. | 35-பாசனம் |
| | | 36-பொதுப்பணிகள்-கட்டடங்கள் |
| | | 54-பாசனம் குறித்த மூலதனச் செலவு |
| | | 55-பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு |
| 08-04-1999 (வியாழக்கிழமை) | .. | 3-இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் |
| | | 39-சாலைப் போக்குவரத்துப் பணிகளும், கப்பல் போக்குவரத்தும் |
| | | 57-சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு |
| 09-04-1999 (வெள்ளிக்கிழமை) | .. | 4-பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம் |
| | | 9-மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் |
| | | 11-மாவட்ட நிருவாகம் |
| 10-04-1999 (சனிக்கிழமை) | .. | விடுமுறை |
| 11-04-1999 (ஞாயிற்றுக்கிழமை) | .. | விடுமுறை |
| 12-04-1999 (திங்கட்கிழமை) | .. | 38-சாலைகளும், பாலங்களும் |
| | | 56-சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு |

[1999 மார்ச் 22

## 4. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் என நிர்ணயிக்கக் கோரி விவசாயிகள் நடத்தும் போராட்டம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, சிறப்புக் கவன ஈர்ப்பு. கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூபாய் 1000 என நிர்ணயிக்கக் கோரி விவசாயிகள் போராடி வருவது குறித்து திரு. சி. ஞானசேகரன், திரு. ஐ. கணேசன், திரு. ஜி.கே. மணி, திரு. டி. மணி, திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன் ஆகியோர் சிறப்புக் கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். முதலில் திரு. சி. ஞானசேகரன் அவர்களைப் பேசுமாறு அழைக்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இன்றிருக்கக்கூடிய விவசாயிகளெல்லாம் உற்பத்திச் செலவு மிக அதிகமாக ஆகிற காரணத்தினால் தங்கள் கரும்பின் விலை டன் ஒன்றுக்கு ரூ.1000/- என்று நிர்ணயிக்கப்பட வேண்டும், அதேபோல, வெட்டுக் கூலியை அரசே ஏற்க வேண்டும், லாரி வாடகை முழுவதையும் அரசே ஏற்க வேண்டும் என்று கோரிக்கைகளை வைத்துப் பல்வேறு போராட்டங்களை நடத்திக் கொண்டு வருகிறார்கள். இன்றல்ல, நேற்றல்ல, பல ஆண்டுகளாக இதுபோன்ற கோரிக்கைகளை வைத்து வறுமைக் கோட்டிற்குக் கீழே வாடிக் கொண்டிருக்கிற, கடனிலே மூழ்கித் தத்தளித்துக் கொண்டிருக்கிற விவசாயப் பெருமக்கள் கேட்டுக்கொண்டிருக்கிற இந்தப் பிரச்சினையில் நன்றாக ஆராய்ந்து திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது திருச்சியிலே மாநாட்டைக் கூட்டி, கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.1000/- கொடுக்க வேண்டும் என்று நீங்களும் அன்று வலியுறுத்தினீர்கள். இதே அவையில் பலமுறை நாங்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பியபோதும்கூட நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்களை 5 ஆண்டு காலம் ஆள விடுங்கள், நாங்கள் தருகிறோம் என்று சொன்னார்கள். இப்போது 3 ஆண்டு காலம் முடிந்துவிட்டது. ஏனென்று சொன்னால் எத்தனை ஆண்டுகள் நாம் ஆளப்போகிறோம் என்பது பெரிதல்ல. விவசாயிகளுடைய நிலைமையை இந்த அரசு புரிந்திருந்த காரணத்தினாலேதான் நீங்கள் எதிர்க்கட்சியாக இருக்கின்றபோது ஒரு தீர்மானத்தைப் போட்டு இருக்கிறீர்கள். ஆகவே, நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், இந்த அரசு விவசாயிகளுடைய வறுமை நிலையையும், உற்பத்திச் செலவையும் கணக்கில் கொண்டு உடனடியாகக் கரும்பிற்கு டன் ஒன்றுக்கு 1000 ரூபாய் என்று அறிவிக்க வேண்டும். ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேர்தல் அறிக்கையிலே நாங்கள் இதைச் சொல்லவில்லை என்று



இந்த மன்றத்திலேயே ஒரு நாள் குறிப்பிட்டார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேர்தல் அறிக்கை புத்தகத்தைக்கூட கொண்டு வந்து படித்துக் காட்டியிருக்கிறார். எனவே அந்தப் பதிலை இங்கே சொல்ல வேண்டாம். ஏற்கெனவே உங்களுடைய திருச்சி தீர்மானம் அப்படியே இருக்கிறது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அமைச்சர் என்ன பதில் சொல்ல வேண்டும், சொல்ல வேண்டாம் என்று நீங்கள் என்ன சொல்வது? நீங்கள் உங்களுடைய பேச்சை முடித்துக்கொள்ளுங்கள். அமைச்சர் இதைச் சொல்லலாம், அதைச் சொல்லலாம் என்று நீங்களே சொல்லிவிட்டீர்கள் என்றால் எப்படி? 5 வருடத்திற்குள் செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள், உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அந்தத் தேர்தல் அறிக்கை புத்தகத்தைப் படித்துக் கொண்டிருக்கிறார். எனவே, நாங்கள் சொல்லவில்லை என்ற பதிலைச் சொல்லிவிடாதீர்கள் என்பதற்காகத்தான் நான் முதலிலே அதை எடுத்துக்காட்டுகிறேன். அதேபோல, Stay இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நாள் இங்கே சொன்னார்கள். அந்த Stay-யைக் கூட அவர் vacate செய்து . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அமைச்சர் பதிலையே நீங்கள் பேசிவிட்டால், பிறகு அமைச்சர் எதற்கு? அமைச்சர் இதைச் சொல்லப் போகிறார், அதைச் சொல்லப் போகிறார். தேர்தல் அறிக்கையைப் படிக்கப் போகிறார், stay இருக்கிறது என்று சொல்லப் போகிறார் என்று நீங்களே சொல்லிக் கொண்டிருந்தால் எப்படி? நீங்கள் உங்கள் கருத்தைச் சொல்லுங்கள், அமைச்சர் பதிலைச் சொல்வார்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்களே சிறந்த வழக்கறிஞர், ஆக நீங்களும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சிறந்த வழக்கறிஞர் அல்ல, நீங்கள் தான் சிறந்த வழக்கறிஞர்.

முற்பகல் 10-40

**திரு. சி. ஞானசேகரன்:** நம்முடைய அரசு எப்படியாவது stay இருந்தாலும்கூட அதை vacate செய்து, உடனடியாக இந்த Budget கூட்டத் தொடர் முடிவதற்குள்ளாகவே, கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு, டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் என்று அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆரணியிலே கரும்பு விலையை உயர்த்தக்கோரி போராட்டத்தை நடத்திய விவசாயிகள் 72 பேர் கைது செய்யப்பட்டு, இப்போது வேலூர் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்று அவையிலே இல்லை. அவர் உடல்நலம் சரியில்லாத காரணத்தினால் வராவிட்டாலும்கூட, இந்தக் குறிப்பைப் படித்துவிட்டு, அவர்கள் தயவுசெய்து, ஆரணியில் ஏற்கெனவே கைது செய்யப்பட்டு, சிறையிலே வாடிக் கொண்டிருக்கக்கூடிய அந்த 72 விவசாயிகள்மீது போடப்பட்டிருக்கிற வழக்கை வாபஸ் செய்து, அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று பணிவன்போடு நான் கேட்டுக்கொண்டு, கரும்பு விலை டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் என்று உடனடியாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆரணி சட்டமன்ற உறுப்பினர், என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், விவசாயிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். விவசாயிகளை காவலர்கள், அவர்கள் சும்மா இருந்தபோது, கைது செய்யவில்லை. அவர்கள் தாறுமாறாகக் கடைகள்மீது கல்லை அடித்ததுடன், போகிற வருகிறவர்களை மடக்கி சாலை மறியலை 5 மணி நேரம் நடத்தினார்கள். அதிகாரிகள் அங்கே வந்துதான் பேசவேண்டும் என்று சொன்னார்கள். அதிகாரிகளுக்கு அழைப்பை அனுப்பி, அவர்கள் வருவார்கள், வருவார்கள் என்று சொல்லி, 10 நிமிடத்திற்குள் அங்கு வந்துவிடுவார்கள் என்று சொன்ன பிறகும்கூட, அவர்கள் பொறுமையாக இருந்து பேச்சுவார்த்தையில் ஈடுபடாமல், வேண்டுமென்றே கலாட்டா செய்வதற்காக ஒரு கும்பலாகப் புறப்பட்டு தாறுமாறாக நடந்ததன் காரணமாகக் காவலர்கள் அவர்களைத் தடை செய்து, கைது செய்தார்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர். அவர் சொல்கிறார்; நீங்கள் உட்காருங்கள்.

**THIRU C. GNANASEKARAN:** Hon. Speaker, Sir, Point of clarification. I know the facts. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் English-இல் பேசினால் மாத்திரம் அனுமதிப்பேனா?





**THIRU C. GNANASEKARAN:** I know the facts. It is my duty and I have my liberty. ஒரே ஒரு நிமிடம்.

**HON.SPEAKER:** As an M.L.A. of the Constituency, he says his opinion. You differ. You please sit down.

**திரு. சி. ஞானசேகரன்:** ஆரணி மட்டுமல்ல ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள்தானே ஆரணி என்று சொன்னீர்கள்?

**திரு. சி. ஞானசேகரன்:** ஆரணி தொகுதி மக்கள் மட்டுமல்ல; ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், நீங்கள் உட்காருங்கள். அடுத்து. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசு, ஏழை எளிய பாட்டாளி வர்க்கம், ஓராண்டு காலமாக நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டு, உற்பத்தி செய்யக்கூடிய கரும்புக்கு ஆயிரம் ரூபாய் அளிக்கும் என்று மிகப் பொறுமையோடு, ஆவலோடு, ஆர்வத்தோடு இந்த அரசை நோக்கி இருந்த நேரத்திலே, மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பொங்கலிலே இனிப்பான செய்தி விவசாயிகளுக்கு அளிக்கப்படும் என்று ஒரு தெள்ளத் தெளிவான அறிக்கையைப் பொங்கலுக்கு முன்னால் அறிவித்தார்கள். இதே அவையிலே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையின்போது, நான் நம்முடையை முதலமைச்சரைப் பார்த்துக் கேட்டேன். ஏழை எளிய விவசாயிகள், அவர்களுடைய அண்டா குண்டாக்களெல்லாம் பறிபோகக் கூடிய நிலையில் இருக்கிறார்கள்; முதல்வர் அவர்களே, இந்த ஏழை விவசாயிகள் உற்பத்தி செய்யும் கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் அளியுங்கள் என்று மன்றாடிக் கேட்ட நேரத்திலே, முதல்வர் அவர்கள் இந்த அவையில் தெள்ளத் தெளிவாகச் சொன்னார்கள். சொன்னதைச் செய்யக்கூடிய நம்முடைய முதல்வர் அவர்கள், ஏனோ இந்த ஒரு விஷயத்திலே மட்டும் பின்வாங்குகிறார்கள் என்பதை நான் ஆணித்தரமாகச் சொல்ல முடியும். சென்ற ஆண்டு கேட்டபோது, ஐந்தாண்டுக் காலம் இந்த ஆட்சி ஆளப்போகிறது; படிப்படியாக உயர்த்துவேன்; படிப்படியாக ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படும் என்று இதே அவையிலே முதல்வர் அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். ஆனால் என்ன காரணத்தினாலோ தெரியவில்லை, இந்த ஆண்டு ஆளுநர் உரையிலே, நாங்கள் கேட்டதற்கிணங்க முதல்வர் சொன்ன பதில்தான், இனிப்பான கரும்புக்கு கசப்பான விளக்கமாகிவிட்டது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ஐ. கணேசன்] [1999 மார்ச் 22

நாங்கள் தேர்தல் அறிக்கையிலே இதுபோல் சொல்லவில்லை என்று சொன்னார். உடனே மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். 'ஐயா, தேர்தல் அறிக்கையிலே சொல்லவில்லை; திருச்சி மாநாட்டிலே சொன்னீர்கள்; அதை நாட்டு மக்கள் நம்பினார்கள்; ஆகவே, டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் அளியுங்கள்' என்று இதே அவையிலே உங்களுடைய கூட்டணி, தோழமைக் கட்சி உறுப்பினர் மிகத் தெள்ளத் தெளிவாகச் சொன்னார்கள்.

*முற்பகல் 10-45*

நல்ல பதில் வரும் என்று நானும் நாட்டு மக்களும், விவசாயிகளும் ஏங்கிக் கொண்டிருக்கும்போது முதல்வர் அவர்கள் அந்த இடத்திலேதான் ஒரு படி கீழே இறக்கி, "கணேசா வெந்த புண்ணில் வேல் பாய்ச்சாதே, அப்பா" என்று இந்த அவையிலே சொன்னார். நல்லவேளை பத்திரிகைகள் அதை எல்லாம் போடவில்லை. நாங்கள் பேசினால் மட்டும் "மற்றும் சிலர்" என்றுதான் குறிப்பிடுவார்கள். அதைப்போல, "மற்றும் சிலராக" எண்ணியதால் விவசாயிகளுக்கு இந்த உண்மை தெரியாமல் சென்றுவிட்டது. எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சி, மிகத் தெள்ளத் தெளிவாக மூன்று ஆண்டுக் காலமாகக் கேட்டு வருகிறோம். கரும்புக்கு டன் ஒன்றுக்கு 1000 ரூபாய் அளிக்க வேண்டும், லாரி வாடகை, வெட்டுக் கூலி அரசாங்கம் கொடுக்க வேண்டுமென்று தெள்ளத் தெளிவாகச் சொன்னோம். அதை அறிவிப்பார்களா என்று நாங்கள் எதிர்பார்த்தோம், ஏமாந்தோம். இந்த முறை நம்முடைய தலைவர் அவர்களுடைய பெரு முயற்சியால் இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பு வந்திருக்கிறது. அமைச்சர் அவர்கள் ஒரு விவசாயக் குடும்பத்திலே பிறந்தவர் என்பதால் என்னைவிட அவர்களுக்கு இது பற்றி நன்றாகத் தெரியும். விவசாயிகள் இன்று வட்டி கட்ட முடியாமல் பல தொல்லைகளிலே இருக்கிறார்கள். ஆகையால், விவசாயிகள்மீது கருணை கொண்டு, இந்த தி.மு.க. அரசு இன்று இந்த அவையிலே, 'ஆயிரம் ரூபாய்' என்று அறிவித்து விவசாயிகள் வயிற்றிலே பால் வார்க்க வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு விவசாயிகளுடைய உற்பத்திச் செலவு என்பது அதிகமானதன் காரணமாகவும், மத்திய அரசாங்கம் சமீபத்திலே டீசல் விலையை உயர்த்தியதால், லாரி வாடகை உயர்ந்ததன் காரணமாகவும், கரும்பினுடைய விற்பனையிலே இன்று கிடைக்கின்ற பணம் என்பது



1999 மார்ச் 22] [திரு. டி. மணி]

சாதாரணமாக விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக்கூடிய ஒரு நிலை இல்லாத காரணத்தாலும், அவர்களுக்குக் குறைந்தபட்சம் ஒரு டன் கரும்புக்கு ஆயிரம் ரூபாய் கிடைத்தால்தான், இன்று கட்டுப்படியாகின்ற ஒரு நிலை உருவாக்கப்படும் என்பதன் விளைவாகத்தான் இந்தப் பிரச்சினையில் இந்த மாமன்றத்தின் மூலமாக ஒரு நல்ல முடிவை ஏற்படுத்த வேண்டுமென்று இந்தக் கோரிக்கையை முன் வைக்கின்றோம்.

அதே நேரத்தில் சில இடங்களில், அதாவது ஆரணியிலே ஏற்பட்டிருக்கின்ற அந்தப் போராட்டம் என்பது ஏதோ அவர்கள் வேண்டுமென்று செய்த போராட்டம் என்று நாம் சொல்லிவிட முடியாது. ஏற்கெனவே பாதிக்கப்பட்ட விவசாயிகள் சற்று ஆத்திரப்பட்டு, சில நடவடிக்கைகளிலே ஈடுபட்டு இருந்தாலும்கூட, எத்தனையோ காரியங்களிலே கைது செய்கின்ற சாதாரண விவசாயிகளை மற்றும் தொழிலாளர்களையெல்லாம் விடுதலை செய்கின்ற ஒரு தன்மையுடைய அரசு என்ற காரணத்தாலே, அதை நாம் பெரிய அளவிலே எடுத்துக்கொள்ளாமல் கைது செய்திருக்கின்ற அந்த விவசாயிகளைக்கூட விடுதலை செய்ய வேண்டுமென்று கூறி, இந்தக் கரும்பு விவசாயிகளுக்கு டன்னுக்கு ஆயிரம் ரூபாய் கிடைக்கக்கூடிய வகையில் இந்த அரசு நல்ல முடிவை எடுக்க வேண்டுமென்று கேட்டு முடிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு பயிரிடுகின்ற விவசாயிகள் தங்களுடைய கரும்புக்கு ஒரு பக்கம் உற்பத்திச் செலவை ஈடுகட்டக்கூடிய அளவிற்குப் பெறவில்லையே என்கின்ற ஆதங்கம், ஆத்திரம், ஏக்கம் இருக்கிறது. இன்னொரு பக்கம், அவர்கள் பயிரிடக்கூடிய அந்தக் கரும்புகளை ஆலைக்கு எடுத்துச்செல்வதற்கு, வெட்டு அனுமதி பெறுவதற்கு 10, 12 மாதங்களிலே தருவதற்குப் பதிலாக 18 மாதங்கள் வரையிலே இழுத்தடிக்கின்ற காரணத்தினாலே அந்தக் கரும்புகள் எல்லாம் காய்ந்து, அதனுடைய எடை குறைந்து, அந்த விவசாயிகள் மேலும், மேலும் பாதிப்பிற்கும் சோதனைக்கும் ஆளாகிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் இங்கே கொண்டுவர விரும்புகிறேன். எனவே, கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் தரப்பட வேண்டுமென்பது இலக்காக இருந்தாலும்கூட, அந்த இலக்கை, இன்னல்பட்டுக் கொண்டிருக்கின்ற விவசாயிகளுக்கு இந்த நேரத்திலே இந்த அரசு அறிவிக்குமேயானால் உண்மையிலேயே பசித்த வயிற்றுக்குப்

பால் வார்ப்பதுபோல, விவசாயிகளுக்கு ஒரு நன்மை செய்ததாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

அதுபோல விவசாய விளைபொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்கின்ற அதிகாரம் என்பது, அது நெல்லானாலும், கரும்பானாலும் மத்திய அரசாங்கத்திற்குத்தான் இருக்கிறது. இங்கே ஆவேசத்தோடு பேசுகின்ற, மத்திய ஆட்சியிலே அங்கம் வகிக்கின்ற அரசியல் கட்சிகள், தாங்கள் அங்கம் வகிக்கின்ற மத்திய அரசை கரும்புக்கு டன்னுக்கு ஆயிரம் ரூபாய் தாருங்கள் என்று இதுவரை வலியுறுத்தியிருக்கிறார்களா, வலியுறுத்தவில்லையா? வலியுறுத்தவில்லை யென்று சொன்னால் எதிர்காலத்திலாவது அவர்கள் அங்கம் வகிக்கின்ற மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி அப்படிப்பட்ட வசதிகளை கரும்பு விவசாயிகளுக்கோ அல்லது ஏனைய விவசாயிகளுக்குகோ பெற்றுத்தர முயன்றால் அது உண்மையிலேயே நன்றிக்குரியதாக இருக்கும் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, கரும்பு விவசாயிகளுக்கு இருக்கின்ற இந்தச் சங்கடங்களை அரசு ஆழ்ந்து பரிசீலித்து, கரும்பு விலையை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆரணியிலே விவசாயிகள் நடத்திய போராட்டத்தைப் பற்றிக்கூட மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்கள் இங்கே சொன்னார்கள். ஆனால், எங்களுக்கு வந்திருக்கிற புகார்கள், தகவல்கள் எல்லாம் வேறுவிதமாக இருக்கின்றன. எது எப்படியிருந்தாலும், ஆரணியில் கரும்புக்கு விலை உயர்வு கேட்டுப் போராடிய அந்த விவசாயிகள்மீதுள்ள வழக்குகளையெல்லாம் திரும்பப் பெற்று அவர்களை உடனடியாக விடுதலை செய்ய இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. ஐ. கணேசன், திரு. டி. மணி, பேராசிரியர் தீரன் ஆகியோர் கரும்புக்கு, ஒரு மெட்ரிக் டன்னுக்கு 1,000 ரூபாய் விலை கொடுக்க வேண்டுமென்று ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பை இந்த அவையிலே கொண்டு வந்து, அவர்களுடைய கருத்துகளை இங்கே





எடுத்துவைத்திருக்கின்றார்கள். அதைப்பற்றி நம்முடைய முதலமைச்சர் அவர்கள், கடந்த 23-2-1999 ஆம் நாள் ஆளுநர் உரைக்குப் பதில் அளித்துப் பேசுகிறபோது, கரும்புக்கு விலை நிர்ணயிப்பது பற்றியும், மற்ற மாநிலங்களிலே உள்ள விலை விவரங்களையும், இந்தக் கரும்பு ஆலைகள் எந்த அளவிலே, தமிழகத்திலே, கடந்த ஆட்சிக் காலத்திலே நசிந்துபோய் இருந்தன என்பதையும் விவரமாகச் சுட்டிக்காட்டி, மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் பதிலளித்திருக்கின்றார்கள்.

அந்தப் பதிலிலேயே, இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்புக்கான முழு விளக்கங்கள் இருந்தாலும், இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துகளை எடுத்து வைத்திருக்கிறார்கள். அதைப்பற்றி ஒன்றிரண்டு கருத்துகளை அரசின் சார்பில் சொல்வது என்னுடைய கடமையாக நான் கருதுகிறேன். உண்மைக்கு மாறான ஒரு தகவலை திரும்பத் திரும்ப பத்து முறை சொன்னால், அந்த உண்மைக்கு மாறான தகவலையேகூட, உண்மை என்று மற்றவர்கள் பேசக்கூடிய நிலை ஏற்பட்டுவிடும்.

அதைப்போல, தோழமைக் கட்சியிலே இருப்பவர்களானாலும் சரி, எதிர் வரிசையிலே, எதிர்க்கட்சிகளாக இருப்பவர்களானாலும், தொடர்ந்து நீங்கள் தேர்தல் அறிக்கையிலே ஒரு மெட்ரிக் டன்னுக்கு 1,000 ரூபாய் தருவோம் என்று சொன்னீர்களே, ஏன் செய்யவில்லை என்று இதே அவையிலேயும் பேசியிருக்கின்றார்கள், வெளியிலே மேடைகளிலும் முழங்கியிருக்கின்றார்கள். அறிக்கைவிட்டும் இருக்கின்றார்கள். இன்னும் சொல்லப்போனால், கரும்பு உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்கான சங்கங்கள் வைத்திருக்கக்கூடிய விவசாய சங்கத் தலைவர்கள் எல்லாம்கூட, அந்தக் கருத்தைச் சொல்லி, அது பத்திரிகையிலே வந்திருப்பதை மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் எல்லாம் நன்றாக அறிவார்கள்.

கடந்த 23 ஆம் தேதி, ஆளுநர் உரைக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் அளித்த பதிலில், தேர்தல் அறிக்கையில் அப்படிப்பட்ட வாக்குறுதியை நாங்கள் தரவில்லை என்று சொன்னபிறகுதான், இதே அவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி எழுந்து, 'இல்லை, இல்லை, திருச்சியிலே நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கட்சி மாநாட்டிலே, 1996 ஜனவரியிலே நடைபெற்ற எட்டாவது மாநிலச் சிறப்பு மாநாட்டிலே, அப்படி ஒரு தீர்மானம் போட்டிருக்கிறீர்கள்' என்று சொன்னார்கள்.

முற்பகல் 10-55

ஓர் அரசியல் கட்சி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, ஆளும் கட்சியானாலும் சரி அப்படி மாநாடு நடத்தினால் அரசுக்குச் சில கோரிக்கைகளை எடுத்து வைப்பது தார்மீகக் கடமை. மக்களுடைய எண்ணத்தை வெளிப்படுத்த, அரசினுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்வது அதனுடைய கடமை. அந்தவகையிலேதான் அந்த மாநாட்டிலே தீர்மானமாகப் போடப்பட்டது. அந்தத் தீர்மான எண் 23. அந்தத் தீர்மானத்திலே உள்ள வாசகம், "ஜெயலலிதா அரசு நடப்பு ஆண்டிற்கான கரும்பு கொள்முதல் விலையை 8.5 சதவிகிதச் சர்க்கரைச் சத்துள்ள கரும்பு, மெட்ரிக் டன்னுக்கு ரூ.560/- வழங்கப்படும் என அறிவித்துள்ளது. கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு உர விலை ஏற்றம், நில வரி ஏற்றம், வெட்டுக் கூலி ஏற்றம், லாரி வாடகை உயர்வு ஆகியவற்றால் உற்பத்திச் செலவு கூடியிருக்கின்ற நிலையில், கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளைப் பெரிதும் பாதிப்பிற்கும், ஏமாற்றத்திற்கும் ஆளாக்கி உள்ளது. ஆகவே, அரசு 8.5 சதவிகிதச் சர்க்கரைச் சத்துள்ள கரும்புக்கு மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ. 1,000/- வீதம் வழங்கிட வேண்டுமென இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறது" இந்த மாநாடு என்று அப்போது இருந்த அரசைக் கேட்டுக்கொண்டு நாங்கள் ஒரு தீர்மானம் போட்டோம். அதை மறுக்கவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில் 1996 சட்டமன்றத் தேர்தல் அறிக்கையில் கரும்புக்கு உரிய விலை கொடுக்கப்படவில்லை என்று கரும்பு பயிரிடும் விவசாயிகள், திரு. கணேசன் சொன்னதைப் போல வெகு காலமாகக் குறைபட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதுகுறித்து 1992-93 ஆம் ஆண்டு, 1993-94 ஆம் ஆண்டு அரவைப் பருவங்களுக்கு சர்க்கரை உற்பத்திச் செலவு குறித்த விவரங்களை மத்திய அரசுக்கு அளிக்காமல் ஜெயலலிதா அரசு கரும்பு விவசாயிகளை ஏமாற்றி வந்திருக்கிறது. கரும்பு விலையை உயர்த்தி நிர்ணயிக்கும் விதத்தில் முத்தரப்புக் கூட்டம் கூட்டி, உரிய முடிவு எடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். முத்தரப்புக் கூட்டம் கூட்டி—அந்த முத்தரப்புக் கூட்டம் என்பது கரும்பு உற்பத்தி செய்யக் கூடிய விவசாயிகள், கூட்டுறவுத் துறை, பொதுத் துறை அதிகாரிகள், அதிலே பணியாற்றக்கூடிய தனி அலுவலர்கள், அதைப்போல தனியார் ஆலைகளை நடத்தக்கூடிய உரிமையாளர்கள் இவர்களை யெல்லாம் அழைத்துப் பேசுவதுதான் முத்தரப்புக் கூட்டம் என்பது. அவர்களையெல்லாம் அழைத்துப் பேசி, ஒரு முடிவு எடுப்பேன் என்ற அந்தச் செய்தியைத் தந்திருக்கிறார்கள். இப்போது நம்முடைய மாண்புமிகு





உறுப்பினர்கள் எல்லாம் எப்படித் தேர்தல் அறிக்கையிலே இல்லை—நீங்கள் மாநாட்டிலே தீர்மானம் போட்டீர்கள்—என்று சொல்லுகின்றார்கள்.

சமீபத்திலே சென்னையிலேகூட விவசாயிகளின் சார்பில் பெரிய ஊர்வலம் ஒன்று நடத்தினார்கள். அந்த ஊர்வலத்தின் இறுதியில் நம்முடைய விவசாயச் சங்கப் பிரதிநிதிகள் எல்லாம்—முதலமைச்சரின் சார்பாக, முதலமைச்சர் அனுப்பி வைத்து என்னை வந்து பார்த்தார்கள். அந்த விவசாயச் சங்கக் கூட்டமைப்பின் சார்பாக நடைபெற்ற அந்த ஊர்வலத்திலே டாக்டர் சிவசாமி கலந்து கொண்டார். அதைப்போல தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் இருக்கின்ற விவசாயச் சங்கப் பிரதிநிதிகள் 25 பேர் வந்து என்னைப் பார்த்து கரும்பு விலை குறித்தும், நெல்லுக்கு இன்னும் கூடுதலாக விலை தர வேண்டும் என்ற அந்தக் கோரிக்கையையும் என்னிடத்திலே எடுத்துச் சொன்னபோது, கரும்பு விலை நிர்ணயிப்பதைப் பற்றியும், இன்று உயர் நீதிமன்றத்திலே தடை இருப்பதைப் பற்றியும், நெல்லுக்கு விலை நிர்ணயம் மத்திய அரசால் நிர்ணயிக்கப்படுகிறது என்றும், நம்முடைய மாநில அரசாங்கம் எந்த அளவிற்கு ஊக்கத்தொகை என்ற பெயரால் விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக்கூடிய ஒரு விலையை வழங்குகின்றது என்பதையும் எடுத்துச் சொன்னபோது, டாக்டர் சிவசாமி அவர்களே என்னிடத்தில் இந்த நிலையில் நாங்கள் மாநில அரசாங்கத்தின்மீது ஒன்றும் குறை சொல்லவில்லை என்று சொன்னார்கள். நம்முடைய ஞானசேகரன் அவர்கள் சொன்னதைப்போல, உயர் நீதிமன்றத்திலே இருக்கின்ற தடையாணையை நீக்குவதற்கு நீங்கள் உடனடியாக ஒரு முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அதைச் செய்தால் பிறகு நீங்கள் நியாயமான அடிப்படையிலே ஒரு தீர்வு காண்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது என்று அவரே என்னிடத்திலே அந்தப் பதிலைத் தந்து சென்றார்கள், மகிழ்ச்சியோடு. ஆகவே, இந்த அரசைப் பொறுத்தவரை கரும்பு உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு, கட்டுப்படி ஆகக்கூடிய விலையைக் கொடுக்க வேண்டும் என்பதில் இந்த அரசுக்கோ நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுக்கோ எந்தவிதமான தயக்கமும் இல்லை.

முற்பகல் 11-00

இங்கே திரு. கணேசன் அவர்கள் 'முதலமைச்சர் ஏன் பின் வாங்குகிறார் இந்த விஷயத்திலே என்று கேட்டார். அவருடைய பரம்பரையிலேயே பின்வாங்குகின்ற நிலை என்றைக்கும் இருந்தது இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஐ. கணேசன்:** இந்த அவையிலே படிப்படியாக ஆயிரம் ரூபாய் கொடுப்பேன் என்று முதல்வர் அவர்கள் ....

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** அதற்கு நான் விளக்கம் சொல்கிறேன். அவர் என்ன சொன்னார் என்றால் கரும்புக்கு மெட்ரிக் டன்னுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்று நாங்கள் அப்படியொரு தீர்மானம் போட்டு முந்தைய அரசை வலியுறுத்தியது உண்மை. முத்தரப்பு மாநாடு கூட்டி இதை நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பரிசீலிப்போம் என்று சொன்னதும் உண்மை. இப்போது 2 ஆண்டுக்காலம் கடந்திருக்கிறது. நாங்கள் இன்னும் 3 ஆண்டுக்காலம் ஆட்சியில் இருக்கப் போகிறோம். அந்தக் காலத்திற்குள் நாங்கள் சொன்னதை நிச்சயமாக நிறைவேற்றுவோம் என்று அப்படித்தான் பதிலைச் சொன்னாரே தவிர, உடனே, நாளையே நான் ஆயிரம் ரூபாய் கொடுக்கிறேன் என்று இங்கே பதில் சொல்லவில்லை, அதுதான் அவையின் குறிப்பிலும் இருப்பது. நம்முடைய முதலமைச்சரைப் பொறுத்தவரைக்கும் சொன்னதைச் செய்யக்கூடியவர் என்பது நாடறிந்த ஒன்று.

இன்றைக்குக் கூட்டுறவு ஆலைகளின் நிலை என்ன? கடந்த ஆட்சிக் காலத்தில் கூட்டுறவு, பொதுத் துறையில் உள்ள 19 ஆலைகளையும் விரிவாக்கம் செய்கிறோம் என்று, 2500 மெட்ரிக் டன் என்பதை 3500 மெட்ரிக் டன் ஒரு நாளைக்கு அரவை செய்யக்கூடிய சக்தி உள்ளதாக ஆக்கப்போகிறோம், விரிவாக்கம் செய்யப் போகிறோம் என்று திட்டம் இடப்பட்டு, அதற்கான கருவிகளெல்லாம் வாங்கப்பட்டு உரிய காலத்திலே அந்தப் பணிகள் முடிக்கப்படாமல் வாங்கிய கருவிகள்கூடத் தரம் இல்லாதவையாக இருந்து, விரிவாக்கம் செய்ய பொருத்தப்பட்ட கருவிகளாலேகூட 2500 மெட்ரிக் டன்னையே கூட அரவை செய்ய முடியாமல் 1000 மெட்ரிக் டன் 800 மெட்ரிக் டன் என்று அரவை செய்யக்கூடிய சக்தியுள்ள நிலைக்குச் சென்றது. அதனாலே ஏற்பட்ட நஷ்டம், முதலமைச்சர் இதே அவையிலே ஆளுநர் உரைக்குப் பதில் சொன்னதைப்போல, 364 கோடி ரூபாய்க்கு மேல் பெருத்த நஷ்டத்திலே இன்றைக்கும் அந்த ஆலைகள் இருக்கின்றன. இது கூட்டுறவு, பொதுத் துறை ஆலைகளினுடைய நிலை.

தனியார் ஆலைகளை இன்றைக்கும் இலாபத்திலே அவர்கள் நடத்துகிறார்கள். அவர்கள் பணியாளர்கள் நியமிப்பதை ஓர் அளவோடு வைத்திருக்கிறார்கள். தனியார் ஆலைகள், அவர்கள் ஒரு நாளைக்கு எத்தனை ஆயிரம் மெட்ரிக் டன் அரவை செய்ய வேண்டும் என்று நிர்ணயித்திருக்கிறார்களோ, அந்த அளவுக்கு உரிய, தகுதி வாய்ந்த





Machine-களைப் பொருத்தி அந்த அளவுக்கு Crushing—அரவை செய்கிறார்கள். அவர்களுக்கு நஷ்டம் ஏற்படுவதற்கான வாய்ப்பு இல்லை. ஆனால், கூட்டுறவு, பொதுத் துறையிலே இருந்த நம்முடைய ஆலைகள் நசிந்து போனதற்கு கடந்த கால ஆட்சி காரணம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் நன்றாக அறிவார்கள். இப்போதும் சொல்கிறார்கள், ஏன் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று. அது குறித்து ஒரு விசாரணை தனியாக நடந்து கொண்டிருக்கிறது. விசாரணை நடந்தால், குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தால் உடனே விசாரணைக்கு சாட்சிகள் கூண்டிலே ஏறி சொல்வதற்கும், பிறகு நீதிபதி தீர்ப்பு வழங்கக்கூடிய வரையிலே, இன்றைக்கு யார் விடுகிறார்கள்? உங்களுக்குத் தெரியாதது அல்ல. அதைப்போல, ஒரு விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. இந்த அரசு விட்டுவிடவில்லை. யார் தவறு செய்திருந்தாலும் சரி, அது அதிகாரிகள் செய்திருந்தாலும் சரி, பொதுமக்களுடைய பிரதிநிதிகள் தலையிட்டு தவறு செய்திருந்தாலும் சரி, சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதிலே இந்த அரசு உறுதியாக இருந்து, அந்தக், கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலே, பொதுத் துறை சர்க்கரை ஆலைகளிலே ஏற்பட்ட தவறுகளைக் கண்டறிவதற்கான விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 11-05*

அதைப்போல இங்கு தமிழகத்திலே 16 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும், 3 பொதுத் துறை சர்க்கரை ஆலைகளும் மற்றும் 16 தனியார் ஆலைகளும் செயல்பட்டு வருகின்றன. இந்த ஆலைகளின் மொத்த அரவைத் திறன் 140 இலட்சம் மெட்ரிக் டன்கள் ஆகும். இந்தக் கரும்பு உற்பத்தியை அடைய சுமார் 2.5 முதல் 3.00 இலட்சம் Hectare பரப்பில் கரும்பு பயிரிடப்பட்டு வருகிறது. ஒவ்வோர் ஆண்டும் மத்திய அரசு கரும்புக்கு விலை நிர்ணயம் செய்யும்முன் மாநில அரசுகளின் கருத்துகளைக் கேட்டுப் பெறுகின்றார்கள். அதன்பேரில் மாநில அரசு சார்பாக கரும்பு உற்பத்தி செய்ய ஏற்படும் செலவுகளைக் கணக்கிட்டு விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலையை நிர்ணயம் செய்யுமாறு மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்கிறது. அனைத்து மாநில அரசுகளிடமும் இதேபோல் கருத்துக்களைக் கேட்டபின் 8.5 சதவீதம் கட்டுமானக் கரும்பிற்கு சட்டபூர்வமான, குறைந்தபட்ச விலையை நிர்ணயிக்கிற அதிகாரம் மத்திய அரசாங்கத்திற்குத்தான் இருப்பதனாலே, அவர்கள் நிர்ணயம் செய்கிறார்கள். அப்படி மத்திய அரசால் நிர்ணயித்த

விலை, கரும்பு உற்பத்தியாளர்களுக்குக் கட்டுப்படியாகாது என்பதைக் கருத்தில் கொண்டு மாநில அரசு, கரும்பு விவசாயிகள், ஆலை அதிபர்கள், கூட்டுறவு மற்றும் பொதுத் துறை அலுவலர்கள் அடங்கிய முத்தரப்புக் கூட்டத்தைக் கூட்டி அவர்களின் கருத்தைக் கேட்டறிந்து மத்திய அரசு அறிவித்த சட்டப்பூர்வமான குறைந்தபட்ச விலையோடு, (S.M.P.) மாநில அரசின் பரிந்துரை விலையாகக் (S.A.P.) கரும்பு விவசாயிகளுக்கு விலை கூடுதலாகக் கிடைக்க தமிழக அரசு பரிந்துரை செய்து வந்தது. இதனை ஆலை அதிபர்களும், கரும்பு விவசாயிகளும் ஏற்றுள்ளனர். நான் 10 ஆண்டுக்காலம் வரையிலான அந்த நிலை பற்றிய விவரம் எல்லாம் வைத்திருக்கிறேன். நேரத்தின் அருமையைக் கருதி சுருக்கிக்கொள்கிறேன்.

1995-96 ஆம் ஆண்டு, கடந்த அ.இ.அ.தி.மு.க.,—ஆட்சிக் காலத்தில் மாநில அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்த விலை 475 ரூபாய், 8.5 சதவீதம் கட்டுமானத்திற்குக் கொடுக்க வேண்டும் என்பது மத்திய அரசினுடைய சட்டப்பூர்வ விலை. ஆனால், மைய அரசு பரிந்துரை செய்தது 391 ரூபாய்தான்.

மாநில அரசாங்கம் தொடர்ந்து 15 ஆண்டுகாலமாக, மாநில அரசாங்கத்தினுடைய பரிந்துரை விலை எல்லாம் சேர்த்து படிப்படியாக ஒவ்வோர் ஆண்டும் 20 ரூபாய், 10 ரூபாய், 15 ரூபாய் என்று கொடுத்துக்கொண்டு வந்த அந்த அடிப்படையில் 135 ரூபாயையும் சேர்த்து 560 ரூபாயாக முந்தைய ஆட்சிக் காலத்தில் மத்திய அரசு, மாநில அரசு இரண்டு பரிந்துரை விலைகளையும் சேர்த்து 560 ரூபாய்தான் 8.5 சதவீதம் கட்டுமானத்திற்கு கரும்புக்கு விலை வழங்கப்பட்டது.

1996-ல் மீண்டும் அதே அந்த ஆட்சியிலேயே 500 ரூபாய் பரிந்துரை செய்தார்கள் மத்திய அரசாங்கத்திற்கு. மத்திய அரசாங்கம் அறிவித்த விலை 459 ரூபாய்தான். அதைத்தான் பரிந்துரை செய்தார்கள், மாநில அரசாங்கத்தினுடைய பரிந்துரை விலையையும் சேர்த்து ரூபாய் 599, இது நம்முடைய கழக ஆட்சிக் காலத்திலே, அந்த இடைக்காலத்திலே நாம் நிர்ணயம் செய்தது. அது அல்லாமல் additional cane price என்று 10 ரூபாய் மெட்ரிக் டன்னுக்கு மாநில அரசாங்கமான, நாம் கொடுத்தோம்.

1997-98-ல் கழக அரசில் மீண்டும் 8.5 சதவீதம் கட்டுமானத்திற்கு 633 ரூபாய் விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசாங்கம் பரிந்துரை விலை செய்யலாம் என்பது நம்முடைய சிபாரிசு. ஆனால், மத்திய அரசாங்கம் அனுமதித்தது 484 ரூபாய் 50 காசு, நம்முடைய மாநில அரசாங்கம் ரூபாய் 175. 50 காசு சேர்த்து, 660 ரூபாய்,





8.5 சதவீதம் கட்டுமானத்திற்கு நாம் பரிந்துரை விலையாக - மத்திய அரசாங்கத்திற்கு மாநில அரசாங்கத்தினுடைய பரிந்துரை விலையாக 660 ரூபாய் என்று நிர்ணயம் செய்தோம். 1998-99-இல் அதைப்போல நாம் பரிந்துரை செய்தோம். ஆனால், மத்திய அரசாங்கம் அந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ளாமல் இந்த ஆண்டு 42 ரூபாய் 50 காசு கூடுதலாக்கியிருக்கிறார்கள். அதைச் சென்ற ஆண்டு 484 ரூபாய் 50 காசோடு சேர்த்தால் 527 ரூபாய் ஒரு மெட்ரிக் டன்னுக்கு, 8.5 கட்டுமானத்திற்கு மத்திய அரசாங்கத்து விலையாக இருக்கிறது. நம்முடைய மாநில அரசாங்கம் பரிந்துரை விலை செய்வதற்காக முத்தரப்புக் கூட்டத்தைக் கூட்டி நாம் முடிவு செய்ய வேண்டும். இதுதான் பிரச்சினை.

இப்பொழுது இருக்கின்ற பிரச்சினை, 1997-98 ஆம் ஆண்டின் அரவைப் பருவத்திற்கு 8.5 சதவிகித சர்க்கரை கட்டுமான, ஒரு மெட்ரிக் டன் கரும்பிற்குச் சட்டபூர்வ குறைந்தபட்ச விலையாக (S.M.P.) மத்திய அரசாங்கம் ரூபாய் 484.50 என அறிவித்தது. நடப்பு ஆண்டான 1998-99 ஆம் ஆண்டில் சென்ற ஆண்டு S.M.P. விலையைவிடக் கூடுதலாக ரூ. 42.50-ஐக் கூட்டி 8.5 சத கட்டுமான, ஒரு மெட்ரிக் டன் கரும்பிற்கு ரூபாய் 527 என அறிவித்துள்ளது.

மைய அரசு சட்டபூர்வக் குறைந்தபட்ச விலையை அறிவித்த பின்பு மாநில அரசு பரிந்துரை விலை நிர்ணயம் செய்ய வேண்டி சர்க்கரை ஆலை அதிபர்கள் மற்றும் கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளின் கூட்டத்தைக் கூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி ஆலை அதிபர்கள் கூட்டத்தை 22-12-1998 அன்றும், கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளின் கூட்டத்தை 26-12-1998 அன்றும் கூட்ட முடிவு செய்யப்பட்டு அழைப்பு தரப்பட்டது. முதலமைச்சர் உடனடியாக முத்தரப்புக் கூட்டத்தைக் கூட்டி, இதற்கு முடிவு காணுங்கள், காண வேண்டும் என்று கேட்டுக்கொண்டதற்கிணங்க, இந்தக் கூட்டம் முதலமைச்சருடைய ஆலோசனையின் பேரில்தான் கூட்ட முடிவு செய்யப்பட்டு அழைப்பு தரப்பட்டது.

இதற்கிடையே தென்னிந்திய சர்க்கரை ஆலை அதிபர்கள் சங்கமான S.I.S.M.A. அரசு அழைத்த கூட்டத்தில் கலந்து கொள்ள இயலாது எனத் தெரிவித்ததுடன் கரும்புக்கு மாநில அரசு பரிந்துரை விலை நிர்ணயம் செய்ய சட்டப்படி இயலாது என உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து தடை ஆணை பெற்றதோடு, கூட்டத்திலும் அவர்கள் கலந்து கொள்ளவில்லை. உயர் நீதிமன்றத்திலே நீதிபதியே சொல்லி, கூட்டத்திலே நீங்கள் கலந்து கொள்ளலாம், உங்களுடைய கருத்தைத்தானே

கேட்கிறார்கள்? அதுவரை கருத்தைக் கேட்கலாம், மாநில அரசாங்கம் - நாங்கள் தீர்ப்புச் சொல்லுகின்றவரை விலை நிர்ணயம் செய்ய வேண்டாமென்று நம்முடைய அரசு வழக்கறிஞருக்குச் சொல்லிவிட்டு, அவர்களையும் கலந்து கொள்ளச் சொன்னார் நீதிபதி. ஆனால் அவர்கள் கலந்துகொள்ளவில்லை.

பிறகு நடந்த வாய்தாவிலே தடை ஆணையை விதித்து விட்டார்கள். தடை விதித்து விட்ட பிறகு, இந்த அரசு உடனடியாக அந்தத் தடையை நீக்குவதற்கு urgent petition போட்டு number செய்து, கொண்டு வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கையெடுத்து, இப்பொழுது உயர்நீதிமன்றத்திலே தேதி நிர்ணயிக்க இருக்கின்றார்கள். ஆகவே, இந்த அரசு விலை பரிந்துரை செய்ய தடை ஆணை வாங்கிவிட்டார்கள். ஆலை அதிபர்கள் சார்பிலே, S.I.S.M.A. இனிமேல் நம்முடைய கையை விட்டுப் போய்விட்டது என்று விவசாயிகளுக்குச் சொல்லிவிடலாம், கேள்வி கேட்பவர்களுக்குச் சொல்லி விடலாம் என்று கருதி பேசாமல் இருக்கவில்லை. இதைப்பற்றி நாள்தோறும் நம்முடைய முதலமைச்சர் என்ன ஆயிற்று, வழக்கு என்றைக்கு வருகிறது என்று கேட்டுக்கொண்டே இருப்பார். நாங்களும் உடனே உயர்நீதிமன்றத்திலுள்ள அரசு வழக்கறிஞர்களோடுத் தொடர்பு கொண்டு அவர்கள் தருகின்ற பதிலை முதலமைச்சருக்கு நான் சொல்லிக்கொண்டே இருப்பேன். ஆகவே, அந்த அளவுக்கு ஆர்வத்துடன் முதல்வர் உள்ளார். தடை ஆணை நீக்கப்பட்ட பிறகுதான் மாநில அரசாங்கத்தினுடைய பரிந்துரை விலை நிர்ணயிக்கப்பட முடியும்.

இந்த நிலையில் ஒவ்வோராண்டும் 8.5 சத கட்டுமானக் கரும்பிற்கு மாநில அரசின் பரிந்துரை விலை நிர்ணயம் செய்யும்போது மத்திய அரசு விலையைவிடக் கூடுதலாகவே விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. ஒவ்வோராண்டும் கரும்புக்கு முதல் விலை அளிக்கும்பொழுது நடப்பாண்டில் சர்க்கரை கட்டுமானத்தில் 8.5 சதவீதத்திற்குக் குறைந்தாலும், முந்தைய ஆண்டின் உச்சக் கட்ட சராசரி கட்டுமானத்தின் அடிப்படையிலேயே கரும்பு விலைக்குப் பணம் கொடுக்க வேண்டும் என்பது நடைமுறையில் இருந்து வருகிறது. 1996-97-இலே 9 சொச்சம் கட்டுமானத்திற்கு கரும்பு விலை இப்படி ஓர் ஆலை கொடுக்கிறது என்றால், 1997-98-இலே கட்டுமானம் குறைந்தாலும்கூட குறைத்துக் கொடுக்கக் கூடாது; முந்தைய ஆண்டு அதிகபட்சம் கரும்பு விலையாக, விவசாயிக்கு எதைக் கொடுத்தார்களோ அந்தப் பணத்தைத்தான் கொடுக்க வேண்டும் என்று நாம் சொல்லி, நடைமுறையிலே இப்போது அமல்படுத்திக் கொண்டு இருக்கிறோம். அந்த அடிப்படையிலே அந்தப் பணம் குறையாமல் முந்தைய



ஆண்டில் உச்சகட்ட சராசரி கட்டுமானத்தின் அடிப்படையிலேயே கரும்புக்கு விலை கொடுக்கப்பட வேண்டுமென்று நடைமுறையில் இருந்துவருகிறது. இது மரபாகவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதால், சென்ற ஆண்டு அளித்த தொகையைவிட நடப்பு நிதியாண்டில் மாநில அரசின் பரிந்துரை விலையை முடிவு செய்யும்வரை முந்தைய ஆண்டின் விலை குறையாமல் கொடுத்து வர வேண்டுமென்று ஆலைகளுக்குத் தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

*முற்பகல் 11-15*

1996 ஆவது ஆண்டில் மீண்டும் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றபோது 8.5 சதவீதம் சர்க்கரைக் கட்டுமானம் உள்ள ஒரு மெட்ரிக் டன் கரும்புக்கு மாநில அரசின் பரிந்துரை விலை ரூ.560 ஆக இருந்தது, 1996-97 ஆம் ஆண்டில் மத்திய, மாநில அரசுகளின் பரிந்துரை விலை, 8.5 சதவீதம் சர்க்கரைக் கட்டுமானம் உள்ள ஒரு மெட்ரிக் டன்னுக்கு ரூ.599 ஆகவும், 1997-98-வது ஆண்டில் மத்திய மாநில அரசுகளின் பரிந்துரை விலை 8.5 சதவீதம் சர்க்கரைக் கட்டுமானம் உள்ள ஒரு மெட்ரிக் டன் கரும்புக்கு ரூ.660 ஆகவும் அறிவிக்கப்பட்டது. முந்தைய ஆட்சியில் 1995-96 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட மத்திய மாநில அரசுகளின் பரிந்துரை விலையான ரூ.560/-ஐ விட, 1997-98-ல் இந்த அரசு அறிவித்த மத்திய, மாநில பரிந்துரை விலையான ரூ. 660 என்பது கடந்த இரண்டாண்டுகளில் 8.5 சதவீதம் சர்க்கரைக் கட்டுமானம் உள்ள ஒரு மெட்ரிக் டன் கரும்புக்கு ரூ.100 கூடுதலாகும். இத்துடன், 20 கிலோமீட்டர் வரையிலான வாகன வாடகையை விவசாயிகள் ஏற்க வேண்டும் என்று இருந்தது, 10 கிலோமீட்டராகக் குறைக்கப்பட்டதும் இந்த அரசிலேதான். நான் சொன்னதைப்போல, முந்தையஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட நஷ்டம்தான் 364 கோடி ரூபாய். அவர்கள் இந்த அவையில் எடுத்துச் சொன்னதைப் போல 1996-97 ஆம் ஆண்டு சர்க்கரை ஆலைகள் கரும்பு விவசாயிகளுக்கான கரும்புப் பணத்தைக் கொடுக்கமுடியாத நிலை ஏற்பட்டபோது, விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, அவர்களுக்கு உடனடியாக நிலுவைத் தொகை கொடுக்க தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கிகளின் மூலம் ஏற்பாடு செய்ய, 86 கோடி ரூபாயைக் கூட்டுறவு, பொதுத் துறை ஆலைகள் விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தை வழங்கியதை மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் எல்லாம் அறிவீர்கள். கரும்பு விவசாயப் பெருமக்கள் நன்றி உணர்வோடு இதைப் பாராட்டி இருக்கிறார்கள்.

[திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்] [1999 மார்ச் 22

அதைப்போலவே, 1997-98 ஆம் ஆண்டிலும், ஆலைகள் விவசாயிகளுக்கு உரிய காலத்தில் 82 கோடி ரூபாய் பணம் கொடுக்கமுடியாத நிலை ஏற்பட்டபோது, அதிலே 6 கோடி ரூபாயை வங்கிக் கடனாக அந்த ஆலைகளே பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தியதுபோக, 76 கோடி ரூபாயை இந்த அரசு ஆலைகளுக்குக் கடனாக வழங்கியது. அந்தத் தொகை பொங்கலுக்கு முன்னதாகவே அந்த விவசாயிகளுக்குப் போய்ச் சேர வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு—ஏனென்றால், பொங்கல் திருநாளிலே பணம் இல்லை என்று அவர்கள் சிரமத்திற்கு ஆளாகக் கூடாது என்று எண்ணி—பொங்கலுக்கு முன்னதாகவே அந்தப் பணம் வழங்கப்பட்டதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். கடந்த ஆண்டு 8.5 சதவீதம் சர்க்கரைக் கட்டுமானம் உள்ள ஒரு மெட்ரிக் டன் கரும்புக்கு மத்திய அரசின் சட்டபூர்வ விலை மற்றும் மாநில அரசின் பரிந்துரை விலையைச் சேர்த்து . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எப்போது பதிலை முடிக்கப் போகிறீர்கள்?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** முடித்துவிடுகிறேன். மத்திய அரசின் சட்டபூர்வ விலை மற்றும் மாநில அரசின் பரிந்துரை விலையைச் சேர்த்து ரூ. 660 என அறிவிக்கப்பட்டபோது, கூட்டுறவு மற்றும் பொதுத்துறை ஆலைகளும், தனியார் ஆலைகளும் அதிகபட்சமாக ஒரு மெட்ரிக் டன் கரும்புக்கு 1997-98 ஆம் ஆண்டின் உச்சகட்ட கட்டுமான அடிப்படையில் கரும்புக்குக் கீழ்க்கண்டவாறு பணம் கொடுக்கப் பட்டுள்ளது:-

| | | சென்ற ஆண்டு கொடுத்த பணம் ஒரு மெட்ரிக் டன்னுக்கு |
|---|---|---|
| ஆம்பூர் சர்க்கரை ஆலை | .. | ரூ.846.40 |
| தர்மபுரி சர்க்கரை ஆலை | .. | ரூ.815.30 |
| வேலூர் சர்க்கரை ஆலை | .. | ரூ.807.50 |

அதைப்போல தனியார் துறை சர்க்கரை ஆலைகளை எடுத்துக் கொண்டால்—

| | | |
|---|---|---|
| ராஜஸ்ரீ சர்க்கரை ஆலை | .. | ரூ.815.30 |
| பொன்னி சர்க்கரை ஆலை | .. | ரூ.792.00 |
| காவேரி சர்க்கரை ஆலை | .. | ரூ.776.50 |



1999 மார்ச் 22] [திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்]

அதைப்போல பொதுவாக மொத்தமுள்ள 36 சர்க்கரை ஆலைகளில், ரூ.800.00-க்கு மேல் 4 ஆலைகளும், ரூ.750 முதல் 800 வரை 9 ஆலைகளும், ரூ.700 முதல் 750 வரை 13 ஆலைகளும், ஒரு மெட்ரிக் டன் கரும்புக்கு மொத்த விலையாக வழங்கியுள்ளன.

*முற்பகல் 11-20*

இதைப்போல, பிற மாநிலங்களிலிருந்து பெறப்பட்ட தகவலின்படி, ஆந்திர மாநிலம், கர்நாடக மாநிலம், ஹரியானா மாநிலம், உத்திரப்பிரதேச மாநிலம் இங்கெல்லாம் மாநில அரசாங்கம் பரிந்துரை விலை செய்யக்கூடாது என்று அவர்களும் உயர்நீதிமன்றத்திலே தடை வாங்கி இருக்கக்கூடிய காரணத்தினாலே flat rate-ஆக அவர்கள் ஒரு விலையை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அந்த விலையையும் ஒப்பிட்டுப்பார்த்தால், ஆந்திரப் பிரதேசத்திலே 9.2 சதவீதம் சராசரி சர்க்கரைக் கட்டுமானத்தின் அடிப்படையில் ஒரு மெட்ரிக் டன் கரும்புக்குக் கொடுக்கும் மொத்த விலை ரூ. 706.25 ஆகும். கர்நாடகத்தில் 10.54 சதவீதம் சராசரி சர்க்கரைக் கட்டுமானத்தின் அடிப்படையில் ஒரு மெட்ரிக் டன் கரும்புக்கு மொத்த விலை ரூ.700 முதல் 860 வரை ஆகும். ஒவ்வொரு ஆலைக்கும் இது வேறுபடுகிறது. மராட்டியத்தைப் பொறுத்தவரை 11.11 சதவீதம் சராசரி சர்க்கரைக் கட்டுமானத்தின் அடிப்படையில் அதிகபட்சமாக ஒரு மெட்ரிக் டன் கரும்புக்கு மொத்த விலையாக ரூ.731.90 அளிக்கப்படுகிறது. ஆனால், நம்முடைய மாநிலத்தில் சென்ற ஆண்டு உச்சகட்ட சராசரி 8.5 சதவீதக் கட்டுமானத்திற்கு, ஆம்பூர் சர்க்கரை ஆலையால் ஒரு மெட்ரிக் டன் கரும்புக்குக் கொடுத்திருக்கின்ற பணம் ரூ.846.40. மற்ற மாநிலங்களிலே flat rate ஆக நிர்ணயம் செய்திருப்பதைவிட, நாம் கூடுதலாகத்தான் தருகிறோம். ஆகவே, 1000 ரூபாய் கொடுக்க வேண்டும், விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலை கொடுக்க வேண்டும் என்பதில் மாநில அரசாங்கத்திற்கு மாறுபாடான கருத்து இல்லை. ஆனால், இன்றைக்கு இருக்கக்கூடிய நிலை, ஆலைகளையும் பாதுகாத்தால்தான், கரும்பு உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள் பயன்பெற முடியும். கரும்பு, ஆலைக்குச் செல்லும்; ஆலை ஓடும்; அவர்களுக்கு உரிய அளவுக்குப் பணம் போய்ச் சேரும். அதுவே இன்றைக்கு முடியாத நிலையில், அரசாங்கம் உதவி செய்யக்கூடிய நிலை இருக்கிறது. உயர்நீதிமன்றத் தீர்ப்பு வந்ததும், இந்த மாநில அரசாங்கத்தினுடைய பரிந்துரை விலையை எந்த அளவுக்கு இந்த ஆண்டு கொடுக்க முடியும் என்று மாநில அரசாங்கம் முடிவு செய்யும்.

அதிலே தயக்கம் இல்லை. உடனடியாக அறிவிக்கும். இல்லாவிட்டால், மாநில அரசாங்கம் flat rate—ஆக அறிவிப்பது என்றாலும் முதலமைச்சர் விரைவிலே முடிவு எடுத்து அதற்கான அறிவிப்புச் செய்வார் என்பதை எடுத்துச்சொல்லி, இந்த அரசு பின்வாங்கக் கூடிய அரசு அல்ல, விவசாயிகளுடைய அரசு என்பதை எடுத்துச்சொல்லி முடிக்கிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றே ஒன்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் ஒரு மணி நேரம் விளக்கம் கொடுத்திருக்கிறார், மீண்டும் அதிலே என்ன கேள்வி?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது இந்த அரசு பின்வாங்காத அரசு என்று சொன்னார்கள், நன்றி. பின்வாங்காத அரசு stay-யை vacate செய்த பிறகு வேண்டுமானால் 1000 ரூபாயை உடனே அறிவியுங்கள். ஆனால், இப்போது வெட்டுக் கூலியையும், லாரி வாடகையை மட்டும் முழுமையாக நம்முடைய அரசு ஏற்கும் என்று அறிவித்தால், நிச்சயமாக விவசாயிகள் வயிற்றில் பால் வார்த்தது மாதிரி இருக்கும். அதையாவது கொஞ்சம் ஏற்றுக்கொள்ளுங்கள் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** கரும்புக்கு விலை நிர்ணயம் செய்வதைப் பொறுத்தவரை மத்திய அரசாங்கத்திற்குத்தான் முழுமையான அதிகாரம் இருக்கிறது. மாநில அரசாங்கத்திற்கு இல்லை என்றுதான் அவர்கள் உச்சநீதிமன்றத்திலே வழக்குப் போட்டு தடையாணை பெற்றிருக்கிறார்கள். இப்போதும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன் இங்கே கேட்டார்கள். அவர்கள், மத்தியிலே ஆளக்கூடிய ஆட்சியிலே ஓர் அங்கம். அந்தக் கட்சியின் சார்பில் அல்லது அந்த ஆட்சியின் சார்பில் மாநில அரசாங்கம் பரிந்துரை செய்கிற விலையை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம், சட்டப்பூர்வ விலையாக அறிவிக்கிறோம் என்று மத்திய அரசாங்கம் ஒப்புக்கொண்டால், நாங்கள் 1000 ரூபாய் கொடுப்பதற்கு, மத்திய அரசிற்குப் பரிந்துரை செய்ய இப்போதே தயார். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே எந்தவிதமான தயக்கமும் இல்லை. வேண்டுமானால், மாண்புமிகு உறுப்பினர் மூலமாக அவர்களுடைய





கட்சியின் தலைமைக்குச் சொல்லி, மத்திய அரசாங்கத்திற்கு அப்படிப்பட்ட கோரிக்கையை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு நிர்ணயித்த விலையில்தான், ஏற்கெனவே கரும்புக்கு நீங்கள் விலை நிர்ணயித்து விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கிறீர்களா? அதற்கும் கூடுதலாகக் கொடுத்திருக்கிறீர்கள்.

முற்பகல் *11-25*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வோர் ஆண்டும் மாநில அரசாங்கம் ஒரு விலையை மத்திய அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்கின்றது. ஒரு டன் கரும்புக்கு இந்த அளவுக்கு விவசாயிகளுக்குக் கொடுத்தால்தான் கட்டுப்படியாகும் என்று நாம் பரிந்துரை செய்கிறோம். ஆனால் மத்திய அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்வதில்லை. அவர்கள் ஒரு விலையை நிர்ணயிக்கிறார்கள். அந்த விலையைக்கூட இந்த மாநிலத்திலே இருக்கக்கூடிய கரும்பு விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகாது என்று கருதித்தான் மாநில அரசாங்கம் ஒரு பரிந்துரை விலையைத்தான் செய்கிறது. சட்டபூர்வ விலையாகச் செய்ய முடியாது. அப்படி பரிந்துரை விலையை நாம் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம். அப்படிச் செய்வதற்கு மாநில அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லை என்று ஆலை அதிபர்கள் நீதிமன்றத்திலே தடை வாங்கியிருக்கிறார்கள். தடை நீக்கப்பட்டால் மாநில அரசாங்கத்தினுடைய பரிந்துரை விலை நிச்சயமாக இருக்கும்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்;** இன்னும் என்ன கேட்கப்போகிறீர்கள்? 1½ மணி நேரம் ஆயிற்று, விடாமல் நீங்கள் பேசினால் எப்படி? திரு. பழனிசாமி, உட்காருங்கள், (குறுக்கீடு) தடை உத்தரவை எடுத்த பிறகுதான் மாநாடு, உட்காருங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாநில அரசு, மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கலாம் அல்லவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்குத்தான் தடை உத்தரவு என்று சொன்னார், உட்காருங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** அப்படியிருந்தால் தமிழ்நாட்டினுடைய விவசாயிகள் கிளர்ச்சி நடத்துவதற்கு அவசியமே கிடையாது. அமைச்சர்

[திரு. ஜி. பழனிசாமி] [1999 மார்ச் 22

அவர்கள் சொல்லுவதுமாதிரி நாம் எடுத்துக்கொண்டோம் என்று சொன்னால், அதற்கு ஒரு முத்தரப்பு மாநாடு நடத்தி விவசாயிகளுக்கும் இந்த விளக்கத்தைத் தந்திருந்தால் இந்தக் கிளர்ச்சிகள் ஆங்காங்கு நடத்துவதற்கான வாய்ப்பு இருக்காது. இதில் மத்திய அரசுதான் முழுமையான காரணம் என்று சொல்வதற்கும் மாநில அரசு இந்த ஆயிரம் ரூபாயைக் கொடுப்பதற்குத் தயார் என்று சொல்வதையும் அந்த விவசாயிகள் உணர்வார்கள். அந்தவகையில் வலியுறுத்தலாம் அல்லவா? முத்தரப்பு மாநாட்டை நடத்தலாம் அல்லவா? அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முத்தரப்பு மாநாடு நடத்துவதற்குத்தான் தடை வாங்கியிருக்கிறார்கள் என்று உங்களிடம் இவ்வளவு நேரம் சொன்னார். அதை நீங்கள் கவனிக்கவில்லையா? மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன் மத்திய ஆட்சியை நடத்துகிறார், அவரே ஆயிரம் ரூபாயை வாங்கித் தரலாம் என்று சொல்கிறார்.

**திரு. ஐ. கணேசன்:** நாங்கள் மத்திய அரசில் ஓர் அங்கம்.

## 5. தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மாணவர்கள் பிரச்சினையை ஆராயக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 20 ஆம் தேதி அன்று இந்த மன்றத்தில், பயிற்சிப் பள்ளி மாணவர்களாக இருந்து, பாதிக்கப்பட்டவர்களுக்காக அரசு என்ன செய்ய முடியும் என்பதை ஆய்வதற்கு ஒரு குழு நியமிக்கப்படும் என்று நான் தெரிவித்தேன். அந்தக் குழு, நியமிக்கப்படுவது குறித்து இந்த அறிக்கையை நான் அவையில் தங்கள் மூலமாக வழங்குகிறேன்.

கடந்த ஆட்சிக் காலத்தில் அனுமதிக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் உயர்நீதிமன்றத் தீர்ப்பால் இரத்து செய்யப்பட்டதனுடைய விளைவாக பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் கோரிக்கை அடிப்படையில் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சட்டப்படி செய்யக்கூடிய வழிவகையைக் கண்டறிந்து அரசுக்கு அறிவித்திட மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்களைத் தலைவராகவும், குழுவைச் செயல்படுத்துபவராகவும்



1999 மார்ச் 22] [பேராசிரியர் க. அன்பழகன்]

(Convener) கொண்டு கீழ்வரும் உறுப்பினர்களையும் கொண்டதாகக் குழு அமைக்கப்படுகிறது :

| | | |
|---|---|---|
| திரு. சோ. பாலகிருஷ்ணன் | - | தலைவர் (Convener) |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| திரு. கே. சுப்பராயன் | - | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி |
| திரு. ம. அப்துல் லத்தீப் | - | இந்திய தேசிய லீக் |
| திரு. ஜி. கே. மணி | - | பாட்டாளி மக்கள் கட்சி |
| திரு. எஸ். திருநாவுக்கரசு | - | எம்.ஜி.ஆர். அ.தி.மு.க |
| திரு. கௌரி சங்கர், ஐ.ஏ.எஸ். | - | செயலர், பள்ளிக் கல்வித் துறை. |
| திரு. கே. பார்த்தசாரதி | - | செயலர், சட்டத் துறை. |

## 4. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### (ஆ) தென்னையைத் தாக்கும் சிலந்தி நோயைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த சிறப்புக் கவன ஈர்ப்பு, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கோரிக்கை. நம்முடைய நாட்டில் தென்னைக்கு ஏற்பட்டிருக்கிற மிகப் பயங்கரமான ஒரு நோயைப் பற்றி இங்கே அவையில் தெரிவித்து, நம்முடைய அரசாங்கத்தினுடைய கவனத்தை ஈர்க்க நான் விரும்புகிறேன்.

தென்னை வளர்த்தல் என்பது இப்போது, தமிழ்நாட்டில் மிகப் பெரிய பொருளாதார அடிப்படையில் விவசாயிகளுக்கு நல்ல வருமானம் மிக்க ஒரு தொழிலாக இருக்கின்ற இந்தநேரத்தில் அதனை ஈரியோபைட், சிலந்தி, நத்தைப் பூச்சி மற்றும் இலைப்புள்ளி போன்ற பூச்சிகள் தாக்கி விவசாயிகள் எல்லாம் இப்போது மிகுந்த துயரத்தில், துன்பத்தில் ஆழ்ந்து இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்தப் பூச்சி 1965 ஆம் ஆண்டு மெக்சிகோ நாட்டில் தொடங்கி 1984 ஆம் ஆண்டு ஸ்ரீவில்லிபுத்தூரில் கண்டெடுக்கப்பட்டு, அதன்பிறகு கேரளாவில் பரவி, இப்போது தமிழ்நாட்டில், குறிப்பாக கோயம்புத்தூர் மாவட்டத்தில் மிகப் பெரிய அளவில் பரவி இருக்கிறது என்பதை இங்கே விவசாயிகள் எல்லாம் நம்முடைய அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அதுசம்பந்தமான ஒரு முழுமையான அறிக்கை என்னிடமிருக்கிறது. அதை நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு நான் சமர்ப்பிக்கிறேன்.

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [1999 மார்ச் 22

முற்பகல் 11-30

அதிலிருந்து நம்முடைய விவசாயிகளைக் காப்பாற்றுகின்ற வகையில் chemical முறையில் எடுக்கின்ற treatment-க்குப் பதிலாக Biological Control முறையில் செய்ய வேண்டுமென்று விவசாய நிபுணர்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு 144 இலட்சம் ரூபாய் தேவைப்படும் என்று Joint Director of Agriculture, Coimbatore அவர்கள்கூட நம்முடைய அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். இதையெல்லாம் நம்முடைய அரசு பரிசீலனை செய்து விரைவில், போர்க்கால அடிப்படையில் இந்தத் தென்னை மரங்களைக் காப்பாற்ற வேண்டுமென்று நம்முடைய அரசை நான் கேட்டுக்கொண்டு, இந்த அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குச் சமர்ப்பிக்கிறேன்.

(குறிப்புகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடம் கொடுத்தார்).

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதுகுறித்து ஏற்கெனவே ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர், பதில் சொல்கிறீர்களா?

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இதுகுறித்து ஓர் அறிவிப்பு கொடுத்திருக்கிறேன். அந்த அடிப்படையிலே இப்போது எடுக்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அப்படி எடுக்கவில்லை. திடீரென்று அனுமதி கேட்டார், ஏதோ பேச வேண்டுமென்று கேட்டார். முக்கியமான சமாச்சாரம் பேச வேண்டுமென்று சொன்னார். நீங்களும் அறிவிப்புக் கொடுத்திருப்பதால், உங்கள் பெயரையும் சேர்த்துக் கொள்கிறேன். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களும் ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பை அரசுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். தென்னையைத் தாக்கக்கூடிய ஈரியோபைட் சிலந்தி பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். என்னிடத்திலே எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மாண்புமிகு திரு. வி.கே. இலட்சுமணன் அவர்கள், புதிதாக தென்னை மரத்திலே ஓலைகளில் நத்தைப்பூச்சி என்று



1999 மார்ச் 22] [திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்]

ஒன்று தாக்கி, அதன் காரணத்தாலே தென்னை ஓலைகள் எல்லாம் காய்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது என்று ஒரு படத்தைக் காண்பித்தார்கள். அதுபோல மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள்கூட, வேளாண்மைத் துறை மூலம் போடப்பட்ட ஒரு படம்—அந்தப் பூச்சிக்கு எந்த மருந்து அடிக்கலாம், எப்படிக் கட்டுப்படுத்தலாம் என்று பொள்ளாச்சிப் பகுதியில் இருக்கக்கூடிய வேளாண்மை உதவி இயக்குநர் அவர்களால் போடப்பட்ட குறிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். இது இப்போதுதான் இந்த அவையில் எழுப்பப்பட்டு, எடுத்துக்கொண்டிருந்தாலும், இந்த 'ஈரியோபைட்' சிலந்தியைப் பற்றி ஏற்கெனவே நான் அறிந்திருக்கிறேன் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது—இந்த தென்னை காய்களைச் சேதப்படுத்தக்கூடிய ஈரியோபைட் சிலந்தி, 'அசரியா ஈரியோபைட்' 'க்குரோனிஸ்' (குடும்பம்-ஈரியோபைடே) முதன்முதலில் மெக்சிகோ நாட்டில் க்குரோ என்னும் மாநிலத்திலுள்ள செர்காகொயூகா என்ற ஊரில் 1965-இல் இந்த நோய் ஆரம்பித்து, அதன்பிறகு கேரளப் பகுதி வழியாக வந்து நம்முடைய கோவை மாவட்டம், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, ஈரோடு, அதைப்போல திண்டுக்கல் போன்ற மாவட்டங்களில் பாளை வெடித்தவுடன் குரும்பையிலேயே இந்தப் பூச்சி தாக்கக்கூடிய காரணத்தாலே, சுருங்கி, காய் பெருக்காமல் உள்ளேயே காய்ந்துவிடுகிறது. பிறகு குரும்பை விழுந்துவிடுகிறது, சேதம் ஏற்படுகிறது. இதை அரசினுடைய கவனத்திற்கு கிணத்துக்கடவு தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் அவர்களும், உறுப்பினர் திரு. சுப்பராயன் போன்றவர்களும்கூட, ஏற்கெனவே அந்தப் பகுதியினுடைய விவசாயிகள் சார்பாகக் கொண்டுவந்தார்கள். உடனடியாக வேளாண்மைத் துறை அலுவலர்களை அனுப்பி வைத்து, இதைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கச் சொல்லி, வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்குத் தகவல் கொடுத்து, விஞ்ஞானிகளையும் அனுப்பி வைத்து, இதற்கு உரிய மருந்து அடிப்பதற்கான முறைகளையெல்லாம் கடைப்பிடிக்க வேண்டுமென்று அறிவுரை வழங்கப்பட்டது. நானேகூட அந்தப் பகுதிக்கு நேரிலே சென்றேன். விவசாயிகள், பாதிக்கப்பட்டிருந்த காய்களை எல்லாம் கொண்டு வந்து காண்பித்தார்கள். அப்படிக் காண்பித்தபோது, அதை அறிந்துகொண்டு, வேளண்மைத் துறையிலே ஒரு விரிவான ஆய்வு நடத்த வேண்டுமென்று சொன்ன அடிப்படையிலே ஒன்று, spray பண்ணலாம் என்பது.

முற்பகல் 11-35

Spray பண்ணுவது மரத்திலே ஏறித்தான் பண்ண வேண்டும். ஏனென்றால் கீழேயிருந்து பண்ணினால் மட்டையில்தான்

போய்ப் படுகிறது. அந்தக் குலையில் படமாட்டேன் என்கிறது. காய்ப் பகுதியில் படமாட்டேன் என்கிறது. அதனால் அது பயன் இருக்காது, மரத்தின் மேல் ஏறி spray பண்ண வேண்டும் என்றார்கள். அதற்கு என்ன செலவாகும் என்று ஒரு கணக்கு எடுக்கப்பட்டது. ஒரு மரத்திற்கு இரண்டுமுறை மருந்து அடிக்க வேண்டும். அதற்கு ஒரு மதிப்பீடு தயாரித்து எனக்குக் கொடுக்கப்பட்டது. பிறகு root feeding, வேர் மூலம் மருந்து கொடுப்பதுதான் உடனடியாகக் கட்டுப்படுத்தும் என்று வேளாண்மை விஞ்ஞானிகள் எனக்குச் சொன்னார்கள்.

இதிலே என்னிடத்திலே அப்போது சொன்னது—helicopter மூலம் மருந்து அடிக்க முடியுமா இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கு—ஒவ்வொரு மரமாக ஏறி ஏறி நாம் spray பண்ணுவதைவிட helicopter மூலம் செய்ய முடியுமா என்று கேட்டேன். அப்போது, தரையிலே இருக்கக்கூடிய பயிர்களாக இருந்தால் கடலை, உளுந்து, நெல் போன்ற பயிர்களாக இருந்தால் helicopter மூலம் அடிக்கலாம். மரத்தின்மேல் குலையில் இருப்பதற்கு அடித்தால் ஓலையின் மேல்தான்படும். ஆகவே, ஓலையில்பட்டு அது காய்க்குப் போவது என்றால் அது முடியாது. மரத்தில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கும். அது ஒரு ஆபத்தாகவும் இருக்கும். அதனால் பயன் இருக்காது என்று விஞ்ஞானிகள் எல்லாம் அந்த முடிவுகளைச் சொல்லிவிட்டு, root feeding மூலம் மருந்து கொடுப்பதுதான் சிறந்ததாக இருக்கும், இரண்டுமுறை அத்தகைய மருந்து கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு Monochrotophos 36 W.S.C. 15 ml. - Rs.3.60 Monochrotophos 36 W.S.C. 10 ml. - Rs.2.40 மருந்து தெளிக்க ஓர் ஆள் கூலி ஒரு நாளைக்கு ரூ.100-லிருந்து 150 ரூபாய். ஒரு நாளில் சுமார் 20 மரங்களுக்கு மருந்து தெளிக்கலாம் அல்லது 25 மரங்களுக்குமேல் வேர் மூலம் செலுத்தலாம் என்று ஓர் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். பல இலட்சக்கணக்கான மரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அதற்கு எவ்வளவு செலவாகும் என்று கணக்குப் போட்டால் 2 கோடி, 2½ கோடி ரூபாய்க்கு மேல் ஆகும் என்று ஓர் அறிக்கை வேளாண்மைத் துறையிலிருந்து வாங்கப்பட்டது. உடனடியாக, கொச்சியில் உள்ள Coconut Board அவர்களுக்கு எழுதி, அவர்கள் இப்போது 25 இலட்சம் ரூபாய் தந்திருக்கிறார்கள். உடனடியாக, மத்திய அரசாங்கத்திற்கும் எழுதப்பட்டு, மத்திய அரசாங்கத்தில் பரிசீலனையில் இருப்பதாக அரசுக்குக் கடிதம் வந்திருக்கிறது இதற்கிடையிலே மாநில அரசாங்கம் எந்த அளவுக்கு நிதியுதவி செய்ய இடம் தருகிறதோ அந்த அளவுக்குச் செய்யவேண்டும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறேன். முதலமைச்சர் அவர்கள் அதைப்பற்றி ஆய்ந்து பார்த்து,





நிதிநிலைமைக்கேற்ப அதிலே ஒரு முடிவு எடுக்க இருக்கின்றார்கள். அதைப்போல, இப்போது புதியதாக தென்னை மட்டைக்கு வந்திருக்கின்ற இந்த நோயைக் கட்டுப்படுத்த helicopter மூலம் மருந்து அடிக்க முடியுமா என்பதை வேளாண்மைத் துறை அலுவலர்களோடு, வேளாண்மைப் பல்கலைக்கழகத்தோடு கலந்துபேசி, அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். இல்லாவிட்டாலும்கூட, இந்த வியாதியைக் கட்டுப்படுத்துவதற்கு, மருந்து அடிப்பதற்கு மாநில அரசாங்கம் வேளாண்மைத் துறை மூலமாக உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நத்தைப் பூச்சி வியாதியானது, பொள்ளாச்சியில் இருக்கின்ற சுமார் 30 ஆயிரம் ஏக்கரில் தென்னைமரங்களைப் பாதித்திருக்கிறது. இன்னும் கொஞ்ச நாட்களில் அந்த ஓலையில் இருக்கின்ற பச்சை இலை எல்லாம் தின்னப்பட்டு வெறும் குச்சியாகத்தான் அது இருக்குமென்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகையினால், ஒரு விவசாயி, 5 ஏக்கர், 10 ஏக்கர் வைத்திருக்கிறவர்கள், அவர்கள் மருந்து அடித்தால் அந்தப் பூச்சி, பக்கத்திலேயிருக்கின்ற இன்னொரு தோப்பிற்குச் சென்று அந்தத் தோப்பைத் தாக்குகிறது. ஆகையினாலே ஏககாலத்திலே எல்லாத் தென்னந்தோப்புகளுக்கும் மருந்து அடித்து இந்த வியாதியைக் கட்டுப்படுத்த வேண்டும். அதற்கு helicopter மூலமாக aerial spray செய்வதுதான் ஒரே வழியாக இருக்க முடியுமென்று கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது ஓலையைத் தாக்குகின்ற வியாதி. அதனால் ஓலை மேல்தான் அந்த மருந்து பட வேண்டும். எனவே, ஓலை மீதும் மருந்து படுகின்ற அளவிற்கு helicopter மூலமாக aerial spray செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-40

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓராண்டுக்கு முன்பு, முதலில் ஈரோட்டுப் பகுதியிலேகூட இதுபோல ஓலையைப் பூச்சி தாக்கி, ஓலைகள் எல்லாம் காய்ந்தது. அப்போது helicopter அந்தப் பகுதியிலே பயன்படுத்தப் படவில்லை. கீழே இருந்து spray பண்ணி ஓலையில் மருந்து அடித்து பூச்சியைக் கட்டுப்படுத்தினோம். ஆனால் இப்போது helicopter மூலம்தான் அதை மருந்து அடித்துக் கட்டுப்படுத்த முடியும் என்று நம்முடைய எதிர்கட்சித் துணைத் தலைவர் சொல்கிறார். இது சாத்தியமா என்பதை முதலில் அரசு பரிசீலிக்கும். எங்களுக்கு அந்தத் தகவல் இல்லை.

ஏற்கெனவே சிலந்திப் பூச்சி பற்றி நான் கேட்டபோது, முடியாது என்று சொல்லி விட்டார்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்வதை சாத்தியமா என்று பரிசீலிக்க வேண்டும். இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு வேளாண்மைத் துறை மூலம் உரிய நடவடிக்கையை விரைவிலே எடுக்கும்; இன்றே அந்தப் பணியைத் தொடங்க உரிய அதிகாரிகளோடு பேசி—ஏனென்றால் இப்போதுதான் பேரவை மூலம் இது கவனத்திற்கு வந்து இருக்கிறது—உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தென்னையைத் தாக்குகிற சிலந்தி நோயைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ப. மோகன் கந்தசாமி, திரு. அழகிரி, திரு. கே. சுப்பராயன், திரு. ம. சண்முகம் ஆகியோர் தீர்மானம் கொடுத்து இருந்தார்கள். (குறுக்கீடு)..

**திரு. ப. மோகன் கந்தசாமி:** இந்தப் பூச்சியைக் கட்டுப்படுத்துவதற்கு ஒரு யோசனை இருக்கிறது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுபற்றி நீங்கள் தனியாக அமைச்சரைப் பார்த்துச் சொல்லுங்கள்.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** ஒரே ஒரு நிமிடத்தில் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பூச்சியை கட்டுப்படுத்துவது மிகவும் கடினம் என்று காலையிலேகூட அமைச்சர் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயம் செய்கின்ற முதியவர்கள் எல்லாம் சொல்கிறார்கள். அதாவது, தென்னை மரத்திலே பதனீர் இறக்கினால், அப்போது மரம் ஏறக்கூடியவர்கள் பாளையை சீவும்போது அந்தப் பூச்சியையும் சேர்த்து சீவிவிட முடியும். ஆகவே, தற்காலிக நிவாரணமாக அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய தொழிலாளிகளை வைத்து அந்தப் பதனீரை இறக்கினால்—பதனீர் இறக்குவது என்பது நம்முடைய காந்தியார் கண்ட வழியில்; அந்தப் பதனீரும், அதைப்போல கருப்பட்டியும் மக்களுக்குப் பயன்படக் கூடியது; உடல் நலத்துக்கும் உகந்தது; எனவே, மீண்டும் பதனீர் இறக்குவதற்கு அரசு ஆவன செய்தால்—நிச்சயமாக அதைக் கட்டுப்படுத்த முடியும் என்று பெரியவர்கள் சொல்கிறார்கள். அரசு அதைச் செய்ய முடியுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெளிவு இறக்குவது பற்றிச் சொல்கிறார். தெளிவு என்ற பெயராலே கள்ளை இறக்கிவிடுவார்கள். அந்த ஓர் ஆபத்தும் இருக்கிறது. அதைப் பற்றி அரசு பரிசீலித்துத்தான் ஒரு முடிவுக்கு வர வேண்டும்.

## 6. வரவு-செலவுத் திட்டம், 1999-2000, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம். திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் உங்கள் மத்தியிலே கருத்துக்களைக் கூறுவதற்கு இந்த வாய்ப்பைத் தந்தமைக்கு முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

இந்த வரவு-செலவுத் திட்டத்திலே சிறப்பாக நல்ல அம்சங்கள் நிறைய இருப்பதை நான் பார்க்கின்றேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 50 இலட்சம் ரூபாய் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்குக் கொடுக்கப்படும் என்றும், உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிகமான அதிகாரங்கள் கொடுக்கப்படும் என்றும், வறுமைக் கோட்டுக்குக்கீழ் உள்ள மக்களின் எண்ணிக்கை மிக அதிகமாக வீழ்ச்சி அடைந்துள்ளது என்றும், இந்த ஆண்டும் 300 ஆரம்பப் பள்ளிகள் ஆரம்பிக்கப்படும் என்கின்ற நல்ல செய்திகளும், இன்னும் பல நல்ல செய்திகளும் இந்த வரவு-செலவுத் திட்டத்திலே கூறப்பட்டு இருக்கின்றன. இருந்தபோதிலும், இப்போது போக்குவரத்துக் கழகங்கள் மிக மோசமான நிலையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. போக்குவரத்துக் கழகங்களிலே கடந்த 3 ஆண்டுக் காலத்தில் 7309 பேருந்துகள் வாங்கப்பட்டதாக நிதிநிலை அறிக்கையிலே கூறப்பட்டு இருக்கின்றது. 3-3-1999 அன்று அரசுச் செய்தியிலே கூறும்போது, மேலும் 6026 பேருந்துகள் புதிதாக வாங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டு, அனைத்து இடங்களுக்கும் விளம்பரப்படுத்தப்பட்டு இருந்தது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் “புதுப்பிக்கப்பட்டதுதானே தவிர, புதிய பேருந்துகள் அல்ல; அச்சுப் பிழை” என்று சொன்னார்கள். அதற்கு நன்றி தெரிவிப்பதோடு, 482 கோடி ரூபாயில் 6,026 பேருந்துகள் புதுப்பிக்கப்பட்டால், கிட்டத்தட்ட ஒரு பேருந்துக்கு 8 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டால்,

[திரு. மு. அப்பாவு] [1999 மார்ச் 22

அப்படியானால், அதற்குப் பதிலாக புதிய பேருந்துகளை வாங்கி இருக்கலாம் என்று நான் எண்ணிப் பார்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

(முற்பகல் 11-45

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்று அதிலே நான் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தேன். 13,000 பேருந்துகள் புதிதாக என்று இருந்தால் தவறு என்று சொன்னேன். அதைப்பற்றி குறிப்பிட்டிருப்பதிலே 'இதில்' என்ற வார்த்தை இருந்திருக்க வேண்டும். 7,000-க்கும் மேற்பட்ட பேருந்துகள் புதிதாக வாங்கி விடப்பட்டிருக்கின்றன. அதிலே replacement என்ற ஒன்று உண்டு. பழைய பேருந்துகளுக்குப் பதிலாக விடப்பட்ட பேருந்துகள் கிட்டத்தட்ட 6,000. 'இதில்' என்ற ஒரு வார்த்தை இருந்தால் சரியாக இருக்கும். அந்த 7,309 பேருந்துகளிலேதான் 484 கோடி ரூபாய்க்கு 6,026 பேருந்துகள் replacement செய்யப்பட்ட புதிய பேருந்துகள். மீதி புதிய வழித் தடங்களில் விடப்பட்ட பேருந்துகள். தயவுசெய்து புரிந்துகொள்ளுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** 7,309 பேருந்துகளுக்கு அறுநூற்று சில்லரை கோடி. அந்த அரசுச் செய்தியில் கூறப்பட்டிருக்கிறது. 482 கோடி ரூபாயிலே 6,026 புதிய பேருந்துகள். ஆக மொத்தம் 13,335 பேருந்துகளுக்குக் கிட்டத்தட்ட 1,000 கோடி ரூபாய்க்கு மேலே செலவழிக்கப்பட்டதாக அரசுச் செய்தியில் கூறப்பட்டிருக்கிறது. அரசுச் செய்தியாக விளம்பரப்படுத்தப் பட்டிருப்பது முற்றிலும் தவறு என்று சொன்னால் நீங்கள் சொல்வது சரி.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிதாக விடப்பட்ட பேருந்துகள் 7,309 'இதில்' என்கிற வார்த்தை இருந்திருந்தால் தவறு இல்லை. அதில் 6,026 பேருந்துகள் replacement. மீதியிருக்கிற 1,283 பேருந்துகள் புதிய வழித்தடங்களில் விடப்பட்ட பேருந்துகள். அப்படித்தான் போட்டிருக்க வேண்டும் (குறுக்கீடு) 6,026 பேருந்துகள் மொத்த செலவு 580 கோடி ரூபாய். அதிலே 480 கோடி ரூபாயிலே 6,026 பேருந்துகள் replacement- ஆயிரம் கோடி ரூபாய் கிடையாது. மொத்தம் 580 கோடி ரூபாய் செலவில் விடப்பட்ட பேருந்துகள் 7,309. இதில் 6,026 பேருந்துகள் replacement-க்காக விடப்பட்ட பேருந்துகள். மற்ற பேருந்துகள் புதிய வழித்தடங்களிலே விடப்பட்ட புதிய பேருந்துகள். அதுதான் அதற்கு விளக்கம்.



1999 மார்ச் 22]

**திரு. மு. அப்பாவு:** அந்த அரசுச் செய்தி முற்றிலும் தவறானதுதானா எனக் கேட்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** முற்றிலும் தவறு இல்லை. 'இதில்' என்ற வார்த்தை இருந்திருக்குமானால் அது சரியாக இருக்கும். முற்றிலும் தவறு அல்ல. 'இதில்' என்ற வார்த்தை விடப்பட்டிருக்கிறது.

**திரு. மு. அப்பாவு:** அடுத்து, 20 சதவீதத்திற்கும் மேற்பட்ட பேருந்துகள் கிட்டத்தட்ட எல்லாப் பணிமனைகளிலும் ஓரம் கட்டப்பட்டுவிட்டன. சென்னையை எடுத்துக்கொண்டால்கூட, சனி, ஞாயிறு நாட்களில் 25 சதவீதம் பேருந்துகள் இயங்கவில்லை. அதை இயக்குகிற ஓட்டுநரும், நடத்துநரும் அங்கே செல்லும்போது, அவர்களைக் காக்க வைத்து, காலை சென்றவர்களை மதியம் சென்ற பிறகும், உங்களுக்கு இன்று வேலை இல்லை என்று சொல்லி, absent என்றே குறிப்பிட்டுவிடுகிறார்கள். இப்படி தவறுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

தொழிலாளர்களுக்கு புதிய பணப் பையே கொடுப்பதில்லை. அத்துடன் ஆண்டுக்கு இரண்டு சீருடை வழங்குவது என்பதும் முழுமையாக வழங்கப்படுவதில்லை. ஆகவே இந்தப் போக்குவரத்துக் கழகங்களுக்காக 100 கோடி ரூபாய் வரவு-செலவுத் திட்டத்திலே ஒதுக்கி இருப்பதும், மேலும் 80 கோடி ரூபாய் குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல இலவசப் பேருந்துப் பயண அட்டை வழங்கியதற்கான ஈட்டுத்தொகை வழங்கியிருப்பதும் இந்தப் போக்குவரத்துத் துறையை நிச்சயமாகக் காப்பாற்றிவிட முடியாது என்பது என்னுடைய கருத்து. ஆகவே, இதற்கு நீங்கள் ஒரு சரியான முடிவெடுத்து இந்தப் போக்குவரத்துக் கழகங்களைக் காப்பாற்ற வேண்டும். நீங்கள்தான் தனியார் பேருந்துகளை முழுமையாக நிறுத்திவிட்டு, அரசுப் போக்குவரத்துக் கழகங்களை ஏற்படுத்தினீர்கள். அதைச் செய்தது நம்முடைய கழக ஆட்சிதான். இன்று அதனுடைய கடைசி எல்லையில் வந்து நிற்கிறது. மீண்டும், காங்கிரஸ் ஆட்சியிலே நடைபெற்ற தனியார் துறைக்கே செல்வதைத் துரிதமாக ஒரு முடிவெடுத்து, ஏதாவது ஒரு நல்ல வழியைக் காட்ட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கல்வித் துறையை எடுத்துக்கொண்டால்—இதற்கு முன்னால் நடைபெற்ற ஆட்சி ஒரு பெரிய கரும்புள்ளி என்று நான் ஆணித்தரமாக கூற முடியும். அந்த அளவுக்கு இதற்கு முந்தைய ஆட்சியாளர்கள் மிக மோசமாக, பல திட்டங்களையெல்லாம் எடுத்து, கல்வித் துறையை நாசம் பண்ணி, அழித்துவிட்டார்கள் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்

கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும் தற்போது ஆரம்பக் கல்வியை எடுத்துக் கொண்டால், 1998-99 ஆம் ஆண்டில் 16,000 இடைநிலை ஆசிரியர்கள் ஓய்வு பெற்றிருக்கிறார்கள். இந்த ஆண்டு 20,000 ஆசிரியர்கள் ஓய்வு பெற இருக்கிறார்கள். அரசில் 1,80,016 இடைநிலை ஆசிரியர்கள் ஏற்கெனவே நிதித் துறையின் ஒப்புதலோடு பணியாற்றுகிறார்கள். இப்போது படித்து வேலையில்லாமல் மொத்தம் 35,000 பேர்தான் இடைநிலை ஆசிரியர்கள் இருக்கிறார்கள். கடந்த ஆண்டு, இந்த அரசு 7,613 புதிய இடைநிலை ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று 7-6-1998 அன்று அறிவித்தது. ஆனால் 4-12-1998 அன்று 5,771 இடைநிலை ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று அறிவித்தது. ஆனால் அரசு ஆணையின்படி 10-11-1998 அன்று 1,495 இடைநிலை ஆசிரியர்களை மட்டுமே நியமித்தது. அதோடு , தமிழகத்தில் ஓராசிரியர் பள்ளியே இல்லை என்ற ஒரு தவறான தகவலை மத்திய அரசுக்கு எழுதி அனுப்பியிருக்கிறது. 1,200 ஓராசிரியர் பள்ளிகள் தமிழகத்தில் இருக்கின்றன. ஆனால் ஓராசிரியர் பள்ளியே இல்லை என்று கூறி, மத்திய அரசிடமிருந்து 3 ஆசிரியர் பள்ளிகளை உருவாக்குவதற்காக, 4,28' ஆசிரியர் பணியிடங்களைப் பெற்று, மொத்தத்தில் 5,000 சொச்சம் பணியிடங்கள்தான் நிரப்பப்பட்டு இருக்கின்றன. 16 ஆயிரம் பேர் ஓய்வு பெற்றதில், deployment என்று சொல்லி, அதாவது கடந்தகால ஆட்சியில் 340 எண் கொண்ட அரசு ஆணை போடப்பட்டு, 50 ஆசிரியர்களுக்கு ஒரு மாணவர் என்று இருந்ததைப் பெருந்தலைவர் காமராசருடைய ஆட்சிக் காலத்தில் 20 மாணவ, மாணவிகளுக்கு...

முற்பகல் 11-50

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவர் அவர்களே, 50 ஆசிரியர்களுக்கு ஒரு மாணவர் என்று இருக்கமாட்டார். 50 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்று இருப்பார்.

**திரு. மு. அப்பாவு:** சரிதான். 50 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்று கடந்தகால ஆட்சியிலே அரசு ஆணைப்படி கூறியது. அதை நாம் கண்டித்தோம் அன்று. 1995 ஜூலை மாதம் 21 ஆம் தேதி முரசொலியில் இரண்டு பக்கத்திலே, 340 அரசு ஆணையையும், 371 அரசு ஆணையையும் இப்போது அரசை நடத்தும் கட்சி கண்டித்தது. ஆனால் நாம் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பின்பு, 340 அரசு ஆணை 525 அரசு ஆணையாகத்தான் மாறியதே தவிர, 40 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற நிலைதான் இன்றும் இருந்து கொண்டிருக்கிறது. அது மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு வந்தபோது, சற்று நிறுத்தி வைக்கச் சொன்னார். ஆனால், தொடக்கக் கல்வித் துறையில் மீண்டும் deployment என்ற முறையிலே





6,000 ஆசிரியர்களை, ஏற்கெனவே பணியாற்றி வந்தவர்களை, மறுபணிக்கே அனுப்பியிருக்கிறார்கள்.

தமிழ், தமிழ் என்று சொல்லிக் கொண்டிருக்கிற நம்முடைய அரசு, தமிழ் மொழிப் போர்த் தியாகிகளுக்குக்கூட இப்போது ஊதியம் வழங்கிக் கொண்டிருக்கிற இந்த அரசு, தமிழகத்திலே இந்தியை மறைமுகமாக மிக அதிகமாகப் புகுத்திக் கொண்டிருக்கிறது என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தமிழகத்தில் கிட்டத்தட்ட... (மணியடிக்கப்பெற்றது) ஐந்து நிமிடம் கூடஆகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஐந்து நிமிடம்கூட ஆகவில்லை என்று நீங்கள் எப்படிச் சொல்லலாம்? நான் correct ஆக பார்த்துக் கொண்டிருக்கிறேன். 9 நிமிடங்கள் ஆகிவிட்டன. பேரவைத் தலைவர் 8 நிமிடங்கள்தான் என்று சொன்னார், இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு ஏதோ இந்தியை மறைமுகமாகத் தமிழகத்தில் திணித்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னார். எந்த இடத்தில் எப்படித் திணிக்கிறது என்று சொன்னால் கொஞ்சம் வசதியாக இருக்கும்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது 2,100 Nursery பள்ளிகளுக்கு இந்த அரசு அங்கீகாரம் வழங்கியிருக்கிறது. 6,7,8 வகுப்புகளுக்கு 5 ஆயிரம் பள்ளிகளுக்கு இந்த அரசு அனுமதி அளித்திருக்கிறது. தமிழகத்தில் இருக்கிற ஆரம்பப் பள்ளிகளில் கிட்டத்தட்ட ¼ பங்கு பள்ளிகளில் மாணவ, மாணவிகள் முழுமையாக இந்தி படிக்கிறார்கள். ஏழை, பாதிக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, ஆதிதிராவிட மாணவர்களைத் தவிர, நடுத்தர மக்களும், அதற்கு மேற்பட்ட மக்களும், தமிழகத்திலே முழுமையாக இந்தி தெரிந்த மாணவர்களாக இருக்கின்றார்கள் என்பதை உங்களுடைய கவனத்திற்கு நான் எடுத்துச் சொல்ல....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தவறான தகவலை உறுப்பினர் தந்து கொண்டிருக்கிறார். L.K.G.-யிலிருந்து பள்ளிகளைத் தனியார் தொடங்க வேண்டுமானால் அவர்கள் எப்படித் தொடங்க வேண்டுமென்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், கல்வி அமைச்சர் அவர்களும் கலந்து பேசி, ஓர் அறிவிப்பே செய்திருக்கிறார்கள். கட்டாயமாக தமிழ்நாட்டில் தனியார் பள்ளிகள், Nursery பள்ளிகள் தொடங்கக்கூடியவர்கள் அரசு அனுமதி

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1999 மார்ச் 22

பெற வேண்டுமென்று சொன்னால், தமிழைக் கட்டாயப் பாடமாகச் சொல்லித் தர வேண்டும். அதோடு, கணக்கு, விஞ்ஞானம் போன்ற பாடங்களைத் தமிழிலேயே படிப்பதற்கான அந்த உத்தரவாதம் தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அப்படி இருந்தால்தான் அனுமதி தரப்படும். இந்தி படிப்பது என்பது தனியார் பள்ளிகளில் விருப்பப் பாடமே தவிர, கட்டாயப் பாடம் அல்ல.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தி, அனைத்துப் பள்ளிகளில்...

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தமிழ்நாட்டில் ஆரம்பப் பள்ளிகளில் இந்தியைக் கற்றுக் கொடுக்கக் கூடாது என்பதில் அக்கறை காட்டுவதற்காக முதலில் நான் அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் கொள்கைக்காகவாவது காங்கிரஸ் நாம் பெருமைப்படத்தக்கது. ஆனால் அவருக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம், அவர் குறிப்பிட்டதைப்போல, தனியார் பள்ளிகள் நடக்கும்போது, அவர்கள் கொடுத்த எண்ணிக்கையில் எந்த இடத்திலும் இந்தி சொல்லிக் கொடுப்பதில்லை. நானும் ஒரு பள்ளிக்கூடத்தை நடத்துபவன் என்ற முறையிலும், அதில் தொடர்புடையவன் என்ற முறையிலும் திட்டவட்டமாக அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தவறான தகவலை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டாமென்று அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவாதத்திற்காகச் சொல்லவில்லை. உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தனியார் பள்ளிகளில், 7,100 பள்ளிகளில் இந்தி கற்றுக்கொடுக்கப்படுகிறது. உங்களுடைய பள்ளியில் வேண்டுமானால் நீங்கள் கற்றுக் கொடுக்காமல் இருக்கலாம். ஆனால் இந்தி கற்றுக் கொடுக்காத Nursery பள்ளிகளே இல்லை என்று கூறிக்கொள்வதோடு தமிழகத்தில்....

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பெ.சு. திருவேங்கடம்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஒவ்வொருவருக்கும் 8 நிமிடங்கள்தான் ஒதுக்க



1999 மார்ச் 22]

வேண்டுமென்று சொல்லிவிட்டுச் சென்றார்கள். நீங்கள் 13 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். உட்காருங்கள். திரு. பெ.சு. திருவேங்கடம்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டின் நிதிநிலை அறிக்கையை நம்முடைய மாண்புமிகு முதல்வர், முத்தமிழ் அறிஞர், மூதறிஞர், மாண்புமிகு கலைஞர் அவர்கள் அளித்துள்ளார்கள், இதனை வரவேற்று நான் ஒருசில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

இந்த அறிக்கையில், நடுத்தர மக்கள், ஏழை எளிய மக்கள், ஆதிதிராவிட மக்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற மக்கள் பயன்பெறுகின்ற வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். அதிலே ஒன்றிரண்டை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

பள்ளி மாணவர்களுக்குச் சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் ஆகியவற்றைப் பாடசாலைகளிலேயே பெற்றுத் தருவது, நகர்ப்புறங்களிலும் நமக்கு நாமே திட்டத்தைக் கொண்டு வருவது, சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியை உயர்த்தியுள்ளது, மக்கள் நலப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு அளித்தது, தரிசு நில மேம்பாட்டு ஆணையம் உருவாக்கியது, 10 புதிய கால்நடை மருந்தகங்களைத் தமிழகத்திலே இந்த ஆண்டு திறப்பது, கிராமப்புறங்களுக்கு இணைப்புச் சாலைகள் வழங்குவது, + 2 பள்ளிகளிலே கணினிப் பாடத்தை விருப்பப் பாடமாகக் கொண்டுவருவது, சமத்துவபுரத்திற்கு தந்தை பெரியார் பெயரைச் சூட்டியது, மனிதக் கழிவை மனிதனே அகற்றக்கூடாது என்கிற திட்டத்தைச் செயல்படுத்துவது, நம்முடைய புதிய பாசனத்திற்கு பல்வேறு அணைகளைக் கட்டுவது, 'Mini-Bus' திட்டத்தைச் செம்மையாகச் செயல்படுத்துவது போன்ற பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். அவற்றை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பாசனத்தைப் பொறுத்தமட்டில் இந்த ஆட்சியில், 1996-க்குப் பிறகு பல்வேறு இடங்களில், பல்வேறு மாவட்டங்களில் 665 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 53 நீர்ப்பாசனத் திட்டங்களைச் செயல்படுத்துவது வரவேற்க வேண்டிய ஒன்றாகும். இது விவசாயத்திற்கு மெத்தவும் தேவை. இந்த ஆண்டு பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள என்னுடைய கலசப்பாக்கம் தொகுதியில் மிருகண்டா நதியில் 16.79 கோடி ரூபாயில் ஒரு புதிய அணையைக் கட்டுவதாக அறிவித்திருக்கிறார்கள். இதற்காக அரசுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், ஆரம்பத்திலிருந்தே இந்தத் திட்டத்தைக் கலசப்பாக்கம்

[திரு. பெ.சு. திருவேங்கடம்] [1999 மார்ச் 22

தொகுதியில் செயல்படுத்த வேண்டும் என்பதற்காக, மெத்த அக்கறையோடு இரண்டு ஆண்டு காலமாகப் பாடுப்பட்ட மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களுக்கும் என்னுடைய இதயமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் இந்தநேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழுகின்றவர்களுடைய எண்ணிக்கை நம்முடைய அரசு கடந்த 3 ஆண்டுகளில் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாகக் குறைந்திருப்பதைக் கண்டு உள்ளபடியே நான் அரசைப் பாராட்டவும், முதல்வர் அவர்களைப் பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசின் மொத்த வருமானத்தில் 19 சதவிகிதத்தை ஒதுக்கீடு செய்து கிராமப் பஞ்சாயத்துகள் நிதி நெருக்கடியில் கஷ்டப்படாமல் இருக்கும் வகையில் உதவி செய்திருக்கிற நம்முடைய அரசையும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' 'நமக்கு நாமே திட்டம்', 'சமத்துவபுரத் , திட்டம்' இவற்றிற்கெல்லாம் அதிக நிதியை ஒதுக்கித் தந்திருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்தநேரத்தில் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, வேளாண்மையைப் பொறுத்தவரையில், விவசாயிகள் பாதிக்கப்படக்கூடாது என்று விவசாயிகளுடைய உற்ற தோழனாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நேரங்களில், அவர் ஆட்சியில் இருந்த காலங்களில் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இரண்டொரு உதாரணங்களுடன் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் விவசாயிகள் இலவச மின்சாரத்தைப் பெற்று, அவர்கள் நல்ல முறையில் விவசாயம் செய்ய வேண்டும் என்று அறிவித்தவர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்.

*நண்பகல் 12-00*

அதே நேரத்தில், சென்ற ஆண்டு இந்த அவையிலேயே, ஆலைகளிலே விவசாயிகளுடைய கரும்பு எடுக்கப்படவில்லை என்று சொன்னால், அதை வெல்லம் காய்ச்சுவதற்கு அல்லது வெல்லம் ஆடுவதற்குக் கரும்பாலைகளுக்கு இலவச மின்சாரத்தை deposit வேண்டாம்; கட்டணம் வேண்டாம் என்று—தந்து, விவசாயிகளின் மனதிலே ஓர் உற்சாகத்தை



1999 மார்ச் 22] [திரு. பெ.சு. திருவேங்கடம்]

ஏற்படுத்தியவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். இங்கே நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கத்தைத் தந்தார்கள். ஏதோ கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூ. 1,000 அளிக்கின்ற அதிகாரம் கலைஞரிடத்திலே இருப்பதாகவும், அதை கலைஞர் அவர்கள் ஏதோ அறிவிக்காமல், விவசாயிகள் ஏமாற்றப்படுகிறார்கள் என்பது போன்ற ஒரு நிலையை இன்றையதினம் சிலபேர், தெரிந்தோ, தெரியாமலோ உருவாக்க நினைக்கிறார்கள். ஆனால், விவசாயிகள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை நான் இந்தநேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனால், அதேநேரத்தில், நான் அரசாங்கத்திற்கு ஒரு பணிவன்பான வேண்டுகோளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, தனியார் முதலாளிகள் ஆனாலும் சரி, அரசு ஆலைகளானாலும் சரி, விவசாயிகளிடமிருந்து கரும்பைப் பெற்றால், குறிப்பிட்ட நாட்களுக்குள் அதற்கான பணத்தை அவர்களுக்குத் தர வேண்டும். அப்படித் தரப்படவில்லையென்றால், அதற்கான வட்டியை அந்த ஆலைகள் தருவதற்குண்டான ஒரு நிலையை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும் என்று நான் இந்தநேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். காரணம், நீண்ட நாட்களாக அவர்கள் பணம் தராத காரணத்தால், விவசாயிகள் அவர்கள் பெற்ற கடனுக்கு வட்டி செலுத்துகின்ற ஒரு தண்டனை கூடுகிறது. அதை நீங்கள் செய்ய வேண்டுமென்று நான் இந்தநேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். இங்கே நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியதுபோல, நீதிமன்றத்தினுடைய தடையாணை விலகியதற்குப் பிறகு, அவர்கள் தலைமையிலேயே, இங்கே இருக்கின்ற அனைத்துக் கட்சிக் குழுவை அழைத்துச் சென்று மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி, டன் ஒன்றுக்கு ரூ. 1,000/- மத்திய அரசாங்கம் தர வேண்டும் என்கிற ஒரு நிலையை, நம்முடைய விவசாயிகளுடைய கோரிக்கையை மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று நான் மாநில அரசை இந்தநேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, சாலைகளைப் பொறுத்தவரையில், நான் இந்த அவையிலே ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன், காரணம், என்னுடைய திருவண்ணாமலை மாவட்டம், O.D.R. என்று சொல்லப்படுகின்ற அதிகமான மாவட்ட சாலைகள் நிரம்பிய மாவட்டமாகும். 1997-98-ல் இந்த மாவட்டத்திற்கு நம்முடைய அரசு 10.54 கோடி ரூபாய் ஒதுக்கியது. ஆனால், Letter of credit வழங்கியது ரூ.6.24 கோடிக்குத்தான். அதனால் நிலுவை 4.30 கோடி ரூபாய் இன்றும் அந்த நெடுஞ்சாலைத் துறையிலே வழங்கப்பட வேண்டிய ஒரு நிலையிலே அந்த மாவட்டம் பாதிக்கப்பட்டிருக்கிறது. சமீபத்திலே நான் முதலமைச்சரிடத்திலும், அந்தத்

[திரு. பெ.சு. திருவேங்கடம்] [1999 மார்ச் 22

துறையினுடைய அமைச்சர், தலைமைப் பொறியாளர் ஆகியோரைச் சந்தித்த நேரத்திலும், இப்போது 1.50 கோடி ரூபாய் வழங்கியிருக்கிறார்கள், ஆனால், நிலுவையில் இன்னும் சுமார் 2.80 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கப்பட வேண்டியிருக்கிறது, அதை வழங்க வேண்டுமென்று கேட்டிருந்தேன். அதை வழங்க வேண்டுமென்று மீண்டும் அரசாங்கத்தையும், துறையின் அமைச்சர் அவர்களையும் இந்தநேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எந்தத் திட்டமானாலும் அதை நிறைவாகச் செய்யக்கூடியவர்கள் என்பதை நாடு அறியும்; இந்த அவையும் அறியும். முதியோர் உதவித் தொகை வழங்க ஒரு காலத்தில் ஒரு குறிப்பிட்ட அளவு நிதியைத்தான் ஒதுக்குவார்கள். ஆனால், இப்பொழுது அதிகாரிகளுக்குப் போட்டிருக்கின்ற ஆணையே, எவ்வளவு பேர் தகுதி வாய்ந்தவர்கள் இருந்தாலும், அவ்வளவு பேர்களுக்கும் முதியோர் உதவித் தொகையை வழங்குங்கள்; அதேபோல, திருமண உதவித் திட்டத்தை வழங்குங்கள்; அதேபோல, கணவனால் கைவிடப்பட்ட பெண்களாக இருந்தாலும் அவர்களுக்கு வழங்குங்கள் என்று இப்படி பல்வேறு திட்டங்களுக்கு ஏராளமான நிதியை ஒதுக்கி, பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தர வேண்டும் என்பதிலே, மெத்த அக்கறையோடு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள். அதேபோல, தமிழகத்திலே இருக்கிற எல்லா பட்டி தொட்டிகளுக்கும், இரண்டாண்டுக் காலத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் தொட்டி கட்டித்தரப்பட வேண்டுமென்று ஆணையிட்டு, அதன்படி அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள். அதேபோல, மூன்று ஆண்டுக் காலத்தில், தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களும் சொந்தக் கட்டடங்கள் பெறுகின்ற வகையிலே, நிதியொதுக்கித் தந்திருக்கிறார்கள்.

அதேபோல, மனிதக் கழிவை மனிதன் அகற்றக்கூடாது என்பதிலே மெத்த அக்கறை எடுத்துக்கொண்டு, இப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். நான் இந்தநேரத்தில் இன்னொன்றையும் சொல்வேன்; வெளியிலே மட்டுமல்ல; 1967-க்குமுன் தமிழகத்திலே இருக்கின்ற சிறைச்சாலைகளுக்குச் சென்றவர்களுக்குத் தெரியும். சிறைச்சாலைகளிலேகூட மனிதக் கழிவை மனிதன்தான் தூக்கிக் கொண்டிருந்தான். ஆனால் நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்கள், முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் சிறைச்சாலைகளிலே கூட மனிதனுடைய கழிவை இன்னொரு மனிதன் சுமக்கக் கூடாது என்கிற நிலையை ஏற்படுத்தி, அதற்காக flush out கட்டித் தந்த முதலமைச்சர்



1999 மார்ச் 22] [திரு. பெ.சு. திருவேங்கடம்]

நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இவர் ஒரு முன்னுதாரணமான முதலமைச்சர் என்று நான் சென்ற ஆண்டுகூட சொன்னேன்.

பிற்பகல் 12-05

ஒரு காலத்தில் அன்னை இந்திரா காந்தி அவர்கள் 20 அம்சத் திட்டத்தை இந்தியாவிலே அறிமுகப்படுத்தினார்கள். அந்த 20 அம்சத் திட்டத்திலே சொல்லப்பட்டிருந்த பல்வேறு அம்சங்களை, அவர்கள் சொல்வதற்கு முன்பாகவே தமிழகத்தில் நமது மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றிக் காட்டினார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல நான் சென்ற ஆண்டுகூட, சொன்னேன். இந்தியாவில் இருக்கிற எல்லா மாநில முதலமைச்சர்களிலேயும் நமது முதலமைச்சர் Super Star ஆக விளங்குகிறார் என்று நான் சொன்னேன். அவர் Super Star மட்டுமல்ல, Supreme Star ஆகவும் விளங்கிக் கொண்டிருக்கிறார் என்பதை நான் இந்தநேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன் (மணியடிக்கப்பெற்றது).

ஒரே ஒரு நிமிடம். சமீபத்திலே ஒரு நிகழ்ச்சியில் கவிஞர் சுரதா அவர்கள், "தமிழகத்திலே ஒரு தமிழ் மகன் நோபல் பரிசு பெறத் தகுதியுடையவர் இருக்கிறாரா என்று நான் ஆய்ந்து பார்த்தேன். இருக்கிறார், அவர் யார் என்று பார்த்தால், தமிழகத்தினுடைய இன்றைய முதல்வர் மாண்புமிகு கலைஞர்" என்று சொன்னார்கள். அதனால் எதிர்காலத்தில் நம்முடைய முதல்வர் அவர்கள் நோபல் பரிசையும் பெற்று, சிறந்த தமிழ்மகனாக, சிறந்த நிர்வாகியாக விளங்குவார்கள், விளங்க வேண்டும் என்று இந்தநேரத்திலே நான் கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி முடிக்கின்றேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மா. இராமச்சந்திரன்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான்காவது முறையாக முதலமைச்சர் பொறுப்பு வகிக்கிற நம்முடைய முதலமைச்சர் அளித்திருக்கும் 12-வது நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையிலே முன்னுரையாகச் சொல்லியுள்ளவாறு, மாநிலங்களுக்குச் சுயாட்சி வேண்டும், மத்தியிலே தமிழ் ஆட்சி மொழியாக என்றைக்கு ஆகிறதோ, அன்றைக்குத்தான், அந்த நாள்தான், தன்னுடைய பொன் நாளாகக் கருதுகிற அந்த வாய்ப்பு என்பதைச் சொல்லி, இந்த நிதிநிலை

[திரு. மா. இராமச்சந்திரன்] [1999 மார்ச் 22

அறிக்கையிலே முன்னுரையாக இதை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அது மட்டுமல்ல, இந்தியாவிலே இருக்கிற முதலமைச்சர்களிலே, அத்தனை முதலமைச்சர்களும் சுதந்திர நாளிலே கொடியேற்றுகிற ஓர் உரிமையைப் பெற்றுத் தந்த பெருமை நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு உண்டு.

அதேபோல, மத்தியிலே இன்றைக்கு ஆட்சியில் இருக்கிறவர்கள், மாநிலங்களுக்கு எப்படிப் பணியாற்ற வேண்டும், நிதியை ஒதுக்கித் தர வேண்டும் என்பதிலே கவனமாக இருந்து, இன்றைக்கு மேல்வரியாகப் போட்டிருக்கிற 3,000 கோடி ரூபாயிலிருந்து மாநிலங்களுக்குப் பிரித்துத் தரவேண்டும் என்று கோருகிற அந்த நடைமுறையை ஒவ்வொரு மாநில முதலமைச்சரும் பின்பற்ற வேண்டும் என்கிற வகையிலே சொல்லி, அத்தனை மாநில முதலமைச்சர்களும் அதைக் கவனமாகப் பார்க்க வேண்டும் என்று சொல்லி, அதைச் செயல்படுத்துகின்ற முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சர் என்பதிலே நாம் எல்லாம் பெருமைப்படத்தக்க வகையிலே இருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு ஒவ்வொன்றாக நிதிநிலை அறிக்கையைப் பற்றிச் சொல்கிறபோது, ஊரக வளர்ச்சிதான் மிக அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த எங்களுடைய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு 2,029 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார். சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய தொகுதிகளுக்குச் சென்று மக்களுடைய குறைகளைக் கேட்டு, அவர்கள் அதைச் சொல்கிறபோது அவர்களுக்குச் செய்ய வேண்டிய காரியங்கள் என்ன என்பதைப் புரிந்து தன்னுடைய கொள்கையாக முதலமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்டபோது இருக்க இடம், நடக்க பாதை, குடிக்க நீர், பார்க்க வெளிச்சம், படிக்க பள்ளி, மனிதன் வாழ்வதற்கு ஏற்ற சுகாதாரம் ஆகியவற்றைத் தாரக மந்திரமாகக் கொண்டு செயல்படுகிறார்கள். எங்களுடைய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சாலைகளைச் செப்பனிட்டு, இப்போது எங்கு பார்த்தாலும் நாடு முழுவதும் சாலைகள் சீர்செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. பள்ளிகள் இருக்கின்றன. இவை எல்லாம் இருக்கிறபோது, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் குறைகள் கேட்கிறபோது நாட்டு மக்கள் எல்லாம் அதை வரவேற்கிற ஒரு பாங்கை இப்போது நாம் பார்க்கிறோம். மக்கள் எழுச்சியோடு இந்த முதலமைச்சர் தான் இந்தக் காரியங்களைச் செய்ய முடியும் என்று சொல்வதை நாம் எல்லாம் பார்க்கிறோம்.



1999 மார்ச் 22] [திரு. மா. இராமச்சந்திரன்]

அதற்கு அடுத்தபடியாக 450 கோடி ரூபாயிலே குடிநீர். கிராமங்களில் குடிநீர்த் தட்டுப்பாடே இல்லை என்ற நிலையை உருவாக்க வேண்டும் என்று சொல்லி 450 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். இப்போது ஒவ்வொரு கிராமத்திலும் கோபுரங்கள் இருக்கலாம், கோபுர தரிசனங்கள் வேண்டும் என்று ஆன்மீகவாதிகள் விரும்பலாம். ஆனால் இப்போது ஒவ்வோர் ஊரிலும் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இருப்பதைப் பார்க்கிறோம். அந்த மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிதான் மக்களுக்குப் பாதுகாக்கப்பட்டக் குடிநீரை வழங்குகிறது. ஆகவேதான் இதைத் தான் தொழவேண்டும் என்ற நிலையை உருவாக்கித் தந்திருக்கிற முதலமைச்சர், இந்த நாட்டிலே, நம்முடைய தமிழகத்திலே, இந்தியாவிலேயே சிறந்த முதலமைச்சர் என்பதை யாரும் மறுக்க முடியாது.

பிற்பகல் 12-10

இங்கே பேசியவர்களில் சிலர் விவசாயிகளுக்கு ஒன்றுமே செய்யவில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். விவசாயிகளுக்குச் செய்வது எப்படிப்பட்ட வகையில் என்பது எல்லாம் வரையறுக்கப்பட வில்லை. பொதுப்பணித் துறை என்பது, விவசாயிகளுக்காக செயல்படுகிற துறைதான். மின்சாரத் துறை என்பதும் விவசாயிகளுக்காக செயல்படுகிற துறைதான். விவசாய இலாகா என்பதும் விவசாயிகளுக்காகச் செயல்படுகிற துறைதான் என்பதை யாரும் புரிந்து கொள்ளாத சூழ்நிலையிலே பேசுகிறார்கள் என்றுதான் கருத வேண்டியிருக்கிறது. பொதுப்பணித் துறையால் கட்டப்படுகிற அணைகள், தூர் வாரப்படுகிற பணிகள், இவையெல்லாம் யாருக்கு என்று சொன்னால், விவசாயிகளுக்குத்தான்.

தஞ்சை மாவட்டத்திலே சென்ற ஆண்டு 57 கோடி ரூபாயிலே தூர் வாரப்பட்டது. இந்த ஆண்டு 50 கோடி ரூபாயிலே தூர் வாரப்படுகிறது என்று சொன்னால், இந்தப் பணிகள் யாருக்காகச் செய்யப்படுகின்றன என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதுமட்டுமல்ல; இப்போது ஆயிரம் கோடி ரூபாய்க்குமேல் இலவச மின்சாரம் தருகிறோம் என்று சொன்னால், அந்த ஆயிரம் கோடி ரூபாய்க்குமேல் செலவிடப்படுவது யாருக்காக என்பதை நீங்கள் எல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அது மட்டுமல்ல; நெல் கொள்முதலிலே மானியம் வழங்குகிறோமே அந்த மானியம் யாருக்காக வழங்கப்படுகிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்க்காதவர்கள், விவசாயிகள், விவசாயிகள் என்று சொன்னால், அந்த

[திரு. மா. இராமச்சந்திரன்] [1999 மார்ச் 22

vote bank என்று சொல்லக்கூடிய அந்த வாக்காளர்கள் தங்களை ஆதரித்து விடுவார்கள் என்ற எண்ணத்திலே இருக்கலாம். ஆனால், அந்தமாதிரிச் சூழ்நிலையில் விவசாயப் பெருங்குடி மக்கள் இல்லை. இன்றைக்கு ஏழை எளிய மக்களைப் பாதுகாக்கக்கூடிய ஓர் அரசு இந்த அரசு என்பதில் யாருக்கும் ஐயம் இருக்க முடியாது. மத்திய அரசு விலைவாசியை ஏற்றியது. அரிசி விலையை ஏற்றியது; கோதுமை விலையை ஏற்றியது. Urea-வுக்கெல்லாம் விலையை ஏற்றினார்கள். இந்தியாவில் இருக்கிற அனைத்து முதலமைச்சர்களும் வாயே திறக்கவில்லை; விலையை ஏற்றியிருக்கிறார்களே, அரிசியினுடைய விலையை ஏற்றியிருக்கிறார்களே, நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று நம்முடைய முதலமைச்சரைப் பார்த்துப் பத்திரிகையாளர்கள் கேட்டார்கள். அப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள், பத்திரிகையாளர்களுக்கு எங்களுக்கு ஏழைகளைத் தெரியும் என்று சொன்னார்கள். ஏழைகளைப் பார்த்திருக்கிற, ஏழைகளினுடைய இறைவனாக விளங்குகிறவர் நம்முடைய முதலமைச்சர் என்கிற முறையிலே, அந்தப் பத்திரிகையாளர்களுக்கு சொன்ன ஒரு வார்த்தையில் பதில் அடங்கியிருக்கிறது. எங்களுக்கு ஏழைகளைத் தெரியும் என்று சொன்ன முதலமைச்சர், இந்த நாட்டிலே, நம்முடைய தமிழகத்திலேதான் இருக்கிறார்கள். அத்தனை முதலமைச்சர்களும் இவரைப் பின்பற்ற வேண்டும்; நடைமுறைப்படுத்த வேண்டும் என்கிற முறையிலே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இந்தியாவிலே இருக்கிற அத்தனை முதலமைச்சர்களுக்கும் வழிகாட்டியாக இருக்கிறார் என்பது குறித்து நாங்கள் எல்லாம் பெருமைப்படுகிறோம்.

அதுமட்டுமல்ல; கல்விக்காக நான்காயிரம் கோடிக்கு மேற்பட்ட தொகையை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். ஆரம்பப் பள்ளிகள் இல்லாத இடமே இருக்கக்கூடாது என்பதை ஒரு கொள்கையாகக் கொண்டு நிறைவேற்றி வருகிறார்கள். அப்படி ஆரம்பப் பள்ளிகள் ஒவ்வொரு கிராமத்திலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதுபற்றிச் சொல்லும்போதுகூட ஒன்றைச் சொன்னார்கள். 50 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்கிற நடைமுறையை இந்த அரசு பின்பற்ற வேண்டுமென்று சொன்னார்கள். அதுவும் இப்போது மாற்றப்பட்டிருக்கிறது. 40 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் வேண்டும் என்கிற கொள்கை. இதை எதற்காக இந்த அரசு சொல்கிறது என்பதனுடைய ஆழமான கருத்தை குறை சொல்ல அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. ஓர் ஆசிரியர் 40 மாணவர்களைக்கூட அந்த வகுப்பிலே வைத்துக்கொள்ள முடியவில்லை என்று சொன்னால், அவர்கள் நடத்துகிற பாடம், செயல்படுகிற முறை



1999 மார்ச் 22] [திரு. மா. இராமச்சந்திரன்]

சரியில்லை என்றுதான் அர்த்தம். அவர் சரியாகச் செயல்படுகிறார்; மாணவர்களுக்குச் சரியாகக் கல்வி கற்றுத் தருகிறார் என்று சொன்னால், அந்தப் பள்ளியிலே அதிகமாக மாணவர்கள் சேர்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால், அவர்கள் சரியாகச் செயல்படவில்லை என்று சொன்னால், மாணவர்கள் வேறு பள்ளியிலே சேர்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகையினாலேதான், 40 மாணவர்களை உங்களால் வைத்துக்கொள்ள முடியவில்லை என்று சொன்னால், அந்தப் பள்ளிக்குக்கூடுதல் ஆசிரியர்கள் எதற்கு என்ற கருத்திலேதான் 40 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற விகிதத்தை நம்முடைய அரசு ஏற்படுத்தியிருக்கிறது என்பதை இந்த அவையின் சார்பாக மக்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல, வரி விதிப்பிலேயும் ஒவ்வொன்றாகக் குறைத்து வருவதையும் பார்க்கிறோம் Cellular Phone-க்கு ஏன் வரியைக் குறைத்திருக்கிறார்கள்; அது பணக்காரர்களுக்கு இல்லையா என்ற கருத்து வருகிறது. அது எதற்காகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், நான்கூட வெளிநாட்டிலே இருப்பவர்கள் இங்கே வந்தார்கள்; அவர்களைப் பார்த்துப் பேசினேன். அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். Cellular Phone மிக அவசியமானது. Hand Phone மிக முக்கியமானது. வியாபாரத்தைப் பெருக்குவதற்கு வழிவகுப்பது. ஒருவரை ஒருவர் வியாபாரத்திலே தொடர்பு கொண்டு பேசுவதற்குத் தகுதியானது. ஆகையினாலே, அதற்கு ஒரு குறைவான விலையை உருவாக்கினால்தான், வியாபாரத்தை நாட்டிலே பெருக்குவதற்கு வாய்ப்பு உள்ளது என்ற காரணத்தினால்தான் இந்த Phone-க்குக் கூடுதலாக வரிவிதிப்புச் செய்வது நல்லதல்ல என்ற கருத்தை அவர்கள் சொன்னார்கள். அந்தவகையிலேதான் இது குறைக்கப் படவேண்டும் என்பதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிந்து கொண்டு, வாணிப முன்னேற்றத்திற்கு இது அவசியம் என்பதைக் கருத்திலே கொண்டுதான் குறைத்திருக்கிறார்கள் என்பதை, நாட்டு மக்கள் உணர வேண்டும். எந்த வரியும் போடக்கூடாது; நிதிநிலை அறிக்கையும் வர வேண்டும் என்றால் எப்படி?

இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறதே, இது ஒரு சாதாரண மனிதனும் புரிந்துகொள்கிற நிதிநிலை அறிக்கை. இதனைத் தந்திருக்கிற நம்முடைய முதலமைச்சர் அவர்களைப் பாராட்ட வேண்டும். ஒவ்வொன்றாகப் பாராட்டிக் கொண்டே இருக்கலாம். 12 வந்திருக்கிறது, 17 வரப்போகிறது, 20 வரப்போகிறது. இன்னும் வரப் போகிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தரப்போகிறார்கள். இந்த நாட்டிலே ஒன்று, இப்படிப்பட்ட முதலமைச்சர், இந்த நாட்டை ஆளுகிற முதலமைச்சரை, யாராவது

[திரு. மா. இராமச்சந்திரன்] [1999 மார்ச் 22

குறை சொல்ல வேண்டும் என்ற கருத்திலே சொல்வார்களேயானால், குறை சொல்பவர்கள், மக்கள் மத்தியிலேயிருந்து நீக்கப்படுவார்களே தவிர, அவர்கள் அந்த மக்கள் மத்தியிலே எடுபடுவார்கள் என்கிற கருத்து யாருக்கும் வேண்டாம்.

பிற்பகல் 12-15

சுதந்திரப் போராட்ட வீரர், இந்த நாட்டிலே எத்தனையோ தடவை நிதிநிலை அறிக்கையை மத்தியிலும், மாநிலத்திலும் தந்திருக்கிற அமைச்சர், இப்போது ஓய்வு பெற்றிருக்கிறார் நம்முடைய சி. சுப்பிரமணியம் அவர்கள். அவர்கள் நம்முடைய தலைவர் அவர்களைப் பாராட்டுகிற வகையிலே, அவரே தன்னுடைய பேனாவினால் ஒரு கடிதத்தை எழுதித் தந்திருக்கிறார்கள். அதாவது, மிகச் சிறப்பாக இந்த நிதிநிலை அறிக்கையைத் தந்திருக்கிறார்கள் என்று பத்திரிகைகளிலே வெளியாகி இருக்கிறது. அப்படி இந்தியாவிலே சிறந்த மனிதர், நேருவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனிதர், நிதித் துறையில் நல்ல முறையில் மத்தியிலும் பணியாற்றிய ஒரு மனிதர், தலைவர் அவர்களைப் பாராட்டுகிறார்கள் என்று சொன்னால், எப்படிப்பட்ட சிறந்த முதலமைச்சரை இந்த நாடு பெற்றிருக்கிறது என்பதை நாம் எல்லாம் உணர வேண்டுமென்று சொல்லி, இப்படிப்பட்ட முதலமைச்சர் காலத்திலே நாமும் வாழுகிறோம், அவர் வாழ வேண்டுமென்று சொல்லி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையில் ஏழையெளிய மக்களுக்குப் பயன்தரும் வகையில், நாட்டை வளப்படுத்தும் திட்டங்கள் எதுவுமில்லை. பற்றாக்குறை Budget ஆக அமைந்திருக்கிறது. விண் உயர உயர்ந்துவரும் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த எந்தவித நடவடிக்கையும் இல்லை. இந்த அரசு பொறுப்பேற்று மூன்று வருடங்களில் இதுவரையில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கி, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கான முயற்சிகள் எதுவும் எடுக்கப்படவில்லை. தற்போது விவசாயிகள் கசக்கிப் பிழியப்பட்ட நிலையில் இருந்து வருகிறார்கள். காரணம், சமீபத்தில் பெய்த மழை வெள்ளத்தால் ஏற்பட்டச் சேதாரங்களுக்கு வெள்ள நிவாரணம் யாருக்கும் கொடுக்கப்படவில்லை. தற்போது விவசாயிகளின் பயிர்கள், குறிப்பாக தென்னை, கடலை, பருத்தி போன்ற விவசாயப் பயிர்கள் எல்லாம் கொடிய நோய்களால் தாக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில்



1999 மார்ச் 22] [திரு. சொ. கருப்பசாமி]

மனவேதனையோடு இருக்கின்ற விவசாயிகளுடைய கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று விவசாயிகள் சார்பில் கேட்டுக்கொள்கின்றேன். கரும்பு விவசாயிகளுக்கு இந்த ஆண்டில் பலாபலன் எதுவுமில்லை என்ற நிலை உருவாகிவிட்டது. மேலும், இந்த மூன்று ஆண்டுகளில் போக்குவரத்துத் துறையில் 400 கோடி ரூபாய் இழப்பு என்று கணக்கு காட்டி போக்குவரத்துத் துறை மிகவும் சீர்கெட்ட நிலையில் தள்ளப்பட்டுவிட்டது. இனி புதிய பேருந்துகள் என்ற பேச்சுக்கே இடமில்லை என்ற நிலை உருவாகிவிட்டது. நீங்கள் கொண்டு வந்த திட்டத்தில் பணியாற்றுகின்ற மக்கள் நலப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது. அதே போல புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்த சத்துணவுத் திட்டப் பணியாளர்களுக்கு எந்தவித சலுகையோ, ஊதிய உயர்வோ வழங்கப்படவில்லை. காரணம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்த திட்டம் என்பதால்; தான் கொண்டு வந்த திட்டத்திற்கு, தான் என்ற பாகுபாடு. அனைத்து பணியாளர்களுக்கும் சம.... (மணியடிக்கப்பெற்றது)

***மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், முன்னாள் முதலமைச்சராக இருந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள் என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆனால், அதற்கு முன்னதாகவே, சர். பிட்டி தியாகராயர் அவர்கள் சென்னை மாநகராட்சிப் பள்ளிகளிலே, இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தது பற்றிய விவரம் அரசுக் குறிப்பிலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்லாமல் அந்தச் சத்துணவு திட்டப் பணியாளர்களுக்கு எந்த நன்மையும் செய்யவில்லையென்று உறுப்பினர் அவர்கள் தவறான கருத்தைச் சொல்லுகிறார்கள். இந்த ஆட்சி ஏற்பட்ட உடனே சத்துணவுப் பணியாளர்கள் மத்தியிலே இருந்த வேறுபாட்டை நீக்கி, சரிசமமாக ஆக்கித் தந்திருக்கிறது என்பதையும், மேலும் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் எம்.ஜி.ஆர். அவர்களுடைய சிறந்த நண்பர் என்பதையும், அவர் கொண்டு வந்த திட்டத்திலே மாற்றம் செய்ய விரும்பியிருந்தால், அதற்கு வேறு பெயர்கூடக் கொடுத்திருக்கலாம். ஆனால், தொடர்ந்து அந்தப் பெயரையே நிலைநாட்டி வருவதிலேயிருந்து பழிவாங்கும் உணர்ச்சியோ அல்லது சிறந்தவற்றை ஏற்றுக்கொள்ளாத மனப்பக்குவமோ நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பணியாளர்கள் எல்லோருக்கும் சம உரிமை, சம ஊதிய

உயர்வு வழங்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். எனது சங்கரநயினார்கோவில் தொகுதியில் குருவிக்குளம் ஒன்றியம், மேலநீலிதநல்லூர் ஒன்றியம், சங்கரன்கோவில் ஒன்றியம், சங்கரன்கோவில் நகரப்பகுதி ஆகிய நான்கு பகுதிகளும் வானம் பார்த்த பூமியாக இருந்து வருகிறது. நான் சட்டமன்ற உறுப்பினரானவுடன், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புத் தர வேண்டும் என்ற நோக்கத்தில், கூட்டுறவு நூற்பாலை ஒன்று அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். ஆனால், தற்போது சங்கரன்கோவிலில் T.N.H. 139 விசைத்தறிக் கூடத்தை மூடிவிட்டார்கள். அங்கு பணி செய்த கிட்டத்தட்ட 300 தொழிலாளர்கள் குடும்பங்கள் இப்பொழுது வேலைவாய்ப்பு இல்லாமல் தெருவில் நிற்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டு வருகிறது. உடனடியாக அந்த நூற்பாலையைத் திறக்க வேண்டும், தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக புரட்சித் தலைவியின் ஆட்சிக் காலத்தில், அந்த விசைத்தறிக் கூடத் தொழிலாளர்கள் நலமோடு தொழில் செய்து வந்தார்கள். ஆனால், இப்போது தமிழ்நாடு முழுவதும் தொழிற்சாலைகள் மூடப்பட்டு வருகின்றன. தொழிலாளர்கள்மீது அக்கறை இல்லாமல் இந்த அரசு, தொழிலாளர்கள் வயிற்றில் அடிக்கிற நிலைக்கு இப்போது தள்ளப்பட்டுவிட்டது.

குறிப்பாக, தைப் பொங்கலுக்கு வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்கின்ற ஏழை எளிய மக்களுக்கு இலவச வேட்டி, சேலை முறையாக வழங்கப்படவில்லை. மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, எங்களுடைய புரட்சித் தலைவி காலத்தில் சங்கரன்கோவில் தாலுகாவிற்கு மட்டும் 1,45,000 இலவச வேட்டி, சேலைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். ஆனால், இந்த ஆண்டு சங்கரன்கோவில் தாலுகா அலுவலகத்திற்கு மட்டும் மூன்று ஆண்டுகள் கழித்து, சுமார் ஓர் இலட்சத்திற்கும் குறைவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை சரியான முறையில் கொடுக்க முடியாமல், வறுமைக் கோட்டிற்குகீழே வாழ்கின்றவர்களுக்கு சிகப்பு நிற அட்டை, வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கு மஞ்சள் நிற அட்டை என்று சொல்லி, அந்தச் சிகப்பு நிற அட்டைகள் அனைவருக்கும் கொடுக்காமல், அதிலே P, Y, G என்று போட்டு P போட்டவர்களுக்கு மட்டும் இலவச வேட்டி, சேலைகள் கொடுக்க வேண்டும், Y போட்டவர் களுக்கும், G போட்டவர்களுக்கும் கிடையாது என்று பல குளறுபடிகளைச்





செய்ததன் காரணமாக, மக்கள் இப்போது மிகுந்த ஏமாற்றத்தில், குறிப்பாக வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற ஏழை எளிய மக்கள் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில், இலவச வேட்டி சேலைகள்கூட கொடுக்க முடியாத அரசாக இந்த அரசு அமைந்திருக்கிறது என்ற நிலை இப்போது உருவாகிவிட்டது. மேலும் என்னுடைய தொகுதியில்...

***மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த இடத்திலும் பங்கீடு அட்டைகளை வைத்து, இலவச வேட்டி சேலைகள் வழங்கக்கூடாது என்று அரசு அறிவிக்கையே தந்திருக்கிறது. பங்கீடு அட்டையிலே இருக்கின்ற P, Y, G என்பதெல்லாம் Computer Code. இதிலே வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள், மத்திய தர வருவாய் உள்ளவர்கள் என்பதெல்லாம் இல்லை. அது Computer Code. அது அட்டை நிறத்துக்காகப் பிரித்ததே தவிர, வறுமைக்கோட்டிற்குக் கீழ், மத்திய தரம் என்று சொல்லவில்லை. இலவச வேட்டி சேலைகள் அரசின் வருவாய்த் துறையின் சார்பாகக் கணக்கெடுக்கப்பட்டு, அதன் மூலமாகத்தான் வழங்கப்பட்டதே தவிர, பங்கீடு அட்டையை வைத்து வழங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இலவச வேட்டி சேலையைப் பற்றி, நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கி விட்டார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தன்னுடைய தொகுதியிலே இருக்கின்ற விசைத்தறிச் சங்கம் மூடப்பட்டிருக்கிறது என்ற செய்தியைத் தெரிவித்தார்கள். விசைத்தறியாளர் சங்கங்களிலே இரண்டு விதமான சங்கங்கள் இருக்கின்றன. 25 உறுப்பினர்களையோ, 50 உறுப்பினர்களையோ சேர்த்து, விசைத்தறியாளர் சங்கத்தை உருவாக்கி, அதை அவர்களே தொழிலாக நடத்திக்கொண்டு வருகின்ற சங்கம் ஒன்று. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த சங்கம், தொழிலியல் விசைத்தறி நெசவாளர் சங்கம் என்ற அடிப்படையிலே, அது செயல்படுகின்ற நிலை ஏற்பட்டது. 1982, 1983 ஆம் ஆண்டு வாக்கில் தமிழகத்திலே இதுபோன்ற 22 விசைத்தறி நெசவாளர் சங்கங்கள், தொழிலியல் நெசவாளர் சங்கங்களாக உருவாக்கப்பட்டன. ஆனால், அதிலே ஏற்பட்ட மிகப் பெரிய பிரச்சினை தறியிலே ஒருவர் நின்றால், தறிக்குப் பணிபுரிவதற்காக 2 பேர் கூடிவருகின்ற அளவிற்கு அந்தத் திட்டம் இருந்த காரணத்தினால், அந்த 22 சங்கங்களுமே நட்டத்திற்கு, பெரும் சுமைக்கு ஆளாக்கப்பட்டு, குறிப்பாக சங்கரன்கோவில் விசைத்தறித் தொழிலியல் சங்கம் இப்பொழுது நட்டத்தில் இயங்குகிறது என்பதை

இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஒரே ஒரு காரணம், அது தொழிலியல் சங்கமாக இருந்த காரணத்தால் Industrial Act என்ற அடிப்படையிலே வந்த காரணத்தினால், E.P.F. மற்றும் மின் இணைப்பு போன்றவற்றிற்கெல்லாம் அதிக செலவு செய்ய வேண்டிய காரணத்தினால், அந்த 22 சங்கங்களுமே நட்டம் அடைந்து, அதிலே இப்போது 6 சங்கங்கள் மாற்றி அமைக்கப்பட்டு, விசைத்தறியாளர் சங்கங்களாக அவை செயலாற்றி வருகின்றன.

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லோரும் பதில் சொல்லிவிட்டார்கள். ஒரேயொரு கருத்து. அவர் சொல்லி இருக்கக் கூடிய அந்த ஆலைகள், ஜெயலலிதா அம்மா ஆட்சியில்தான் மூடப்பட்ட ஆலைகள்; அவர் மூடியதைத் திறப்பதற்கு முயற்சி செய்கிறோம்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சபைக்குத் தவறான புகார்களை அமைச்சரவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'P' Card, 'Y' Card என்பது `P' என்றால் Pink, `Y' என்றால் Yellow, `G' என்றால் Green Colour என்று அந்த நிறத்திலேயே, அந்த அளவிற்கு வட்டாட்சியர் அவர்கள் சொல்லி, நீங்கள் இப்போது இந்த மாமன்றத்திலே பேசிக் கொள்ளலாம். மக்கள் மத்தியில் நீங்கள் உள்ளே நுழைய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) இங்கே ஒன்றும் முடியாது. உட்காருங்கள். நான் சொல்வதைக் கேட்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கருப்பசாமி, நீங்கள் இங்கே பார்த்துப் பேசுங்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகள் முழுவதும் குண்டும் குழியுமாய் இருந்து வருகின்றன. குறிப்பாக, சங்கரன்கோவிலிலிருந்து நடுவக்குறிச்சி, வீரசிகாமணி, ரங்கநாதபுரம், சேந்தபுரம், பேபி ஆலங்குளம் வழியாக சுரண்டைக்கும், மற்றும் சங்கரன்கோவிலிலிருந்து சின்னகோவிலாங்குளம், தருமத்தூரணி, ஆண்டார்குளம், வெள்ளாளங்குளம், ஊத்தாங்குளம் போன்ற பகுதிகளுக்கும், பனைநத்தத்திலிருந்து கூவாத்திவட்டி, ஆரால்வெட்டி, முருங்கச்சாவடி, சண்டங்குறிச்சி, பன்னீர்ஊத்து,





வெள்ளத்தநேரி போன்ற பகுதிகளுக்குச் செல்கின்ற சாலைகள் மிகவும் மோசமான சாலைகளாக இருந்து வருகின்றன. பலமுறை நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர் அவர்களிடத்தில் பொதுமக்களால் கொடுக்கப்பட்ட மனுவை வைத்து நான் நேரடியாகச் சொல்லும்போது எங்களிடத்திலே நிதியில்லை என்று ஒரே வார்த்தையில் சொல்லிவிடுகிறார்கள். காரணம், அந்தப் பகுதியில் செல்கின்ற நகரப் பேருந்துகள், குறிப்பாக, தடம் எண் 4, 8A, 9A, 9C, 18, 19 ஆகியவை அனைத்தும் மிகவும் மோசமான நிலையில் இருந்துவருவதால், காலையில் செல்கின்ற பேருந்து நேரடியாக ஒருமுறைகூட அந்தப் பகுதிக்குச் செல்ல முடியாத நிலையில், அந்த பேருந்துகள் இருக்கைகள்கூட இல்லாத நிலைமையில் ஓடிக்கொண்டிருக்கின்றன. ஆகவே அப்பேர்ப்பட்ட சாலைகளை உடனடியாகச் சீர் செய்து பழுதான நிலையில் இருக்கின்ற அந்தப் பேருந்துகளை மாற்ற வேண்டும். இல்லையென்றால் எங்கள் பகுதியிலுள்ள பொதுமக்கள் அனைவரும் போராட்டம் செய்ய வேண்டிய நிலை ஏற்படும் என்று அவர்கள் இப்போது சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பொதுமக்கள் சார்பில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் எங்களுடைய சங்கரன்கோவில் நகராட்சிப் பகுதியில் திருவ நகரம் என்ற பகுதியில் கிட்டத்தட்ட 500 வீடுகள் 30 ஆண்டுகளுக்கு முன்பாகக் கட்டப்பட்டும் இதுவரையிலும் வீட்டு உரிமையாளர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படவில்லை. நான் முந்தைய கூட்டத் தொடரிலேயே வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தேன். இதுவரையிலும் அது வழங்கப்படவில்லை. ஆனால் இப்போது திருவள்ளுர் நகர்ப் பகுதியில் ஒரு மண்ணெண்ணெய் Bunk-க்கு கூட்டுறவுத் துறையின் மூலமாக, licence கொடுத்து, கட்டி முடித்து, மாண்புமிகு அமைச்சரவர்கள்கூட திறந்து வைத்திருக்கின்றார்கள். அந்தப் பகுதியில் அவர்களுக்கு உரிமம் கொடுத்ததுபோல், 30 ஆண்டுகளாகக் குடியிருந்து வரும் அந்த வீட்டு உரிமையாளர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தமிழ்நாட்டில் இப்போது சட்டம்-ஒழுங்கு மிகவும் சீர்கெட்ட நிலையில் தள்ளப்பட்டுவிட்டது. தினசரி கொள்ளை, கொலை, குண்டுவெடிப்பு, இனக் கலவரம், சாதிக் கலவரம் போன்ற பிரச்சினைகள் வெகு விமரிசையாக, அதிகமாக உருவாகி வருகின்றன. எனது தொகுதியில், விசைத்தறி தொழிலை நடத்திவருகின்ற வைரவன் என்பவர் கடத்தப்பட்டு, அதன் காரணமாக கடையடைப்பு, உண்ணாவிரதம் போன்ற நிகழ்ச்சிகள் எல்லாம் நடந்தன. அதுபோல் தமிழ்நாடு முழுவதும் நடந்துவருகின்றன. ஆனால்

221800



[திரு. சொ. கருப்பசாமி] [1999 மார்ச் 22

இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. காரணம், காவல் துறை அதிகாரிகள்; 'எங்களுடைய கைகள் கட்டப்பட்டு விட்டன' என்று ஒரேயடியாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற கருத்துகள் அவருடைய சொந்தக் கருத்துகள். எது வேண்டுமானாலும் பேசலாம். அது வேறு. ஆனால், காவல் துறை அதிகாரிகள் 'எங்களுடைய கைகள் எல்லாம் கட்டப்பட்டிருக்கின்றன' என்று சொன்னதாகச் சொன்னார். எந்தக் காவல் துறை அதிகாரி, எந்த இடத்திலே, எப்போது சொன்னார் என்று சொன்னால், அரசு நடவடிக்கை எடுப்பதற்கு வசதியாக இருக்கும்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோவிலில் வைரவன் என்பவர் விசைத்தறித் தொழில் செய்கின்றவர் கடத்தப்பட்டு, அதைக் கண்டுபிடிக்க முடியாமல் கடையடைப்பு, உண்ணாவிரதம் போன்றவற்றில் ஈடுபட்டார்கள். ஆனால் இதுவரையில் நடவடிக்கை எடுக்கவில்லை. காரணம் என்ன என்பதை.....

*பிற்பகல் 12-30*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வைரவன் என்பவர் கடத்தப்பட்டாரா, பிறகு அவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்களா என்பது வேறு. நான் கேட்க விரும்புவது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அவையிலே இப்போது பேசுகின்ற நேரத்தில், காவல் துறை அதிகாரிகளினுடைய கைகள் எல்லாம் இந்த ஆட்சியிலே கட்டப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். எந்த அதிகாரிகளுடைய கைகள் கட்டப்பட்டிருக்கின்றன. யார் இவரிடத்திலே அந்தத் தகவலைக் கொடுத்தார் என்று சொன்னால், அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக இருக்கும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறை அதிகாரிகளினுடைய கைகள் கட்டப்பட்டு இருக்கின்றன என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பசாமி, அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை மறுத்தார்கள் (குறுக்கீடு)



1999 மார்ச் 22] [திரு. இரா. தாமரைக்கனி]

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

இப்போது நான் அதுகுறித்து சொல்லலாம் இல்லையா? உண்மையைச் சொல்லலாம் இல்லையா? இதே சட்டசபையிலேயே ஒரு சட்டமன்ற உறுப்பினர் மீது F.I.R. போட்டு, charge sheet போட்டு கோர்ட்டுக்கு எல்லாம் அனுப்பியிருக்கிறார்கள். கைது பண்ணமாட்டேன் என்கிறார்கள். கேட்டால், எங்களுக்கு மேலேயிருந்து சொல்லியிருக்கிறார்கள். முதலமைச்சர் சொல்லியிருக்கிறார்கள். அதனாலே கைது பண்ணவில்லை, இப்படி.....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இல்லை, இல்லை. தயவு செய்து,—எதை வேண்டுமானாலும் பேசலாம் என்று பேசக்கூடாது. எப்பொழுது பேசினாலும்.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள், இருங்கள், நீங்கள் உட்காருங்கள். தாமரைக்கனி, கொஞ்சம் உட்காருங்கள். நான் ஒரு வழக்கறிஞர் என்கிற முறையிலே கேட்கிறேன். Police அதிகாரிகளின் கையைக் கட்டியிருந்தால், அந்த வழக்கையே போடாமல் இருந்திருப்பார்கள் இல்லையா? வழக்குப் போட்டார்கள் அல்லவா?

**திரு. இரா. தாமரைக்கனி:** மிரட்டுவதற்கு, தம்மை மீறிப் போகக் கூடாது என்று கைப்பாவையாக பூனைக்கும் காவல், பாலுக்கும் காவல் என்கிற மாதிரி வைத்துக்கொள்வது. இதேமாதிரி பழனிமுத்து என்று சொல்லி சிதம்பரம் கொலை வழக்கிலே கூலிப்படைத் தலைவன் பகலவன் என்று ஒருத்தன் இருக்கிறான். அவன் இராஜபாளையம், ஸ்ரீவில்லிப்புத்தூர் பகுதியில்தான் நடமாடிக் கொண்டிருக்கிறான். அவனைக் கைது பண்ணவேண்டும் என்றால் எங்களுக்கு மேலேயிருந்து கைது பண்ணக்கூடாது நாங்கள் local police கைது பண்ண மாட்டோம். C.B.C.I.D. தான் கைது பண்ண வேண்டும் என்று சொல்கிறார்கள். **

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** இப்போதுகூடத்தான் நீங்கள் Auditor-ஐ அடித்தீர்கள்!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி சொன்ன கருத்து அவைக் குறிப்பிலே இடம் பெறாது. (குறுக்கீடுகள்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1999 மார்ச் 22

**திரு. இரா. தாமரைக்கனி:** *ஏன்? நான் ஏதும்* unparliamentary words *சொன்னேனா? நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன், நான் பேசியதை ஏன் நீக்குகிறீர்கள்?*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *கத்தாதே (குறுக்கீடுகள்), கத்தாதே (குறுக்கீடுகள்), கத்தாதே, கத்தாதே, உட்காருங்கள். நான் எழுந்து நின்றால் எல்லோரும் உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)*

**திரு. இரா. தாமரைக்கனி:** *மரியாதை கொடுத்துப் பேச வேண்டும். ஏன் நீ என்று பேசுகிறீர்கள்? (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *கொஞ்சம் உட்காருங்கள். நான் எழுந்து நின்றால் எல்லோரும் உட்கார வேண்டும்.*

Police *அதிகாரியுடன்* Photo *எடுப்பதில் ஒன்றும் குற்றம் கிடையாது. யாரோடு வேண்டுமானாலும்* Photo *எடுத்துக் கொள்ளலாம். அதை ஒரு குற்றச்சாட்டாக அவையிலே சொல்லக்கூடாது. அதிலே என்ன தப்பு?* Police *அதிகாரியோடு* Photo *எடுத்ததிலே என்ன தப்பு?*

**திரு. இரா. தாமரைக்கனி:** Police *அதிகாரியைச் சொல்லவில்லை. கூலிப்படைத் தலைவனோடு படம் எடுத்திருக்கிறார்கள். அதனாலேதான் கைது பண்ணக் கூடாது என்று சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்) மேலே உள்ளவர்களிடம் பயமாக இருக்கிறது, கைது செய்யக் கூடாது என்று* Police *அதிகாரிகளே சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *யார் உங்களிடம் சொன்னார்கள்? (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள், கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** *இங்கே தலைவரைப் பாருங்கள்.... (கூச்சல்-குழப்பம்)*

**திரு. இரா. தாமரைக்கனி:** *என்னய்யா கத்துறீங்க? (கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. தாமரைக்கனி, உட்காருங்கள்.*

**திரு. இரா. தாமரைக்கனி:** *இவங்க ஏன் கத்துறாங்க? சபாநாயகர் அவர்கள் சொல்லட்டும். கேட்கிறேன். இவர்களுக்கு அந்த வாய்ப்பை யார் கொடுத்தது?*



1999 மார்ச் 22]

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** *ஆமாம், நீங்களும் சபாநாயகரைப் பார்த்துத்தான் சொல்லணும்.*

**திரு. இரா. தாமரைக்கனி:** *அப்புறம் ஏன் அய்யா கத்துறீங்க?*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** *அப்படித்தான் கத்துவாங்க. நீங்கள் உண்மைக்கு மாறான தகவலைக் கொடுத்தால்...*

**திரு. இரா. தாமரைக்கனி:** *என்னய்யா உண்மைக்கு மாறான...*

*(இப்படிச் சொல்லிக்கொண்டே கையை ஓங்கி அசைத்தார்.)*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** *ஒரேயடியாக இப்படி.... (கூச்சல்-குழப்பம்)*

*(திரு. இரா. தாமரைக்கனி, மாண்புமிகு அமைச்சர் திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் கையை வேகமாகத் தட்டியதுடன், அமைச்சர் முகத்திலும் ஓங்கிக் குத்தினார். திரு. சொ. கருப்பசாமி வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு முன்பக்கம் வேகமாகப் பாய்ந்து வந்தார்.) (கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. கருப்பசாமி, தாமரைக்கனி ஆகியோரை அவையிலிருந்து வெளியேற்ற உத்தரவிடுகிறேன்.*

*பிற்பகல் 12-35*

*(திரு. சொ. கருப்பசாமி, திரு. இரா. தாமரைக்கனி ஆகியோரை சட்டப் பேரவையின்* Sergeant *சபைக்கு வெளியே அழைத்துச் சென்றார்.)*

*(மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் அவர்கள் தனது மூக்கின் மேலிருந்து வழிந்துகொண்டிருந்த இரத்தத்தினை, தனது கைக்குட்டையால் துடைத்துக் கொண்டிருந்தார்கள்.) (கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *எல்லோரும் உட்காருங்கள், உட்காருங்கள்.*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) தயவுசெய்து அனைவரும் உட்காருங்கள், தயவு செய்து உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) மாண்புமிகு தலைவர் அவர்களே,—*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *எல்லோரும் உட்காருங்கள், உட்காருங்கள்.*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொ. கருப்பசாமி அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, இந்த ஆட்சியிலே காவல் துறை அதிகாரிகளுடைய கைகள்*

எல்லாம் கட்டப்பட்டிருக்கின்றது என்று ஒரு குற்றஞ்சாட்டினார். அதற்கு நான், ஆதாரம் இருந்தால் தாருங்கள், இந்த அரசு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது என்று சொன்னேன். (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள். ஆனால், அதற்கு விளக்கம் தருவதற்குப் பதில், சம்பந்தம் இல்லாமல் திரு. தாமரைக்கனி இங்கே எழுந்து, அவர் விளக்கம் தருவதாகச் சொல்லி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலிலே மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரை என்னுடைய அறைக்கு அழைத்துக் கொண்டு போய் டாக்டரை வரவழைத்து காண்பியுங்கள்.

## 7. அரசினர் தீர்மானம்

*திரு. இரா. தாமரைக்கனி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரைப் பேரவையில் தாக்கியதாலும், திரு. சொ. கருப்பசாமி அவை மரபுகளை மீறி நடந்துகொண்டதாலும் திரு. இரா. தாமரைக்கனி மற்றும் திரு. சொ.கருப்பசாமி ஆகியோர் கூட்டத் தொடர் முடியும் வரை பேரவைப் பணிகளினின்றும் தற்காலிக நீக்கம் செய்யப்படுதல்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. இரா. தாமரைக்கனி விளக்கம் தருவதாகச் சொல்லி, பிறகு, சபையிலே திட்டமிட்டு ஒரு கலவரத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில், வேண்டுமென்றே மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைத் தாக்கியிருக்கிறார். உறுப்பினர் திரு. சொ. கருப்பசாமி அவை மரபுகளை மீறி வேட்டியை மடித்துக்கட்டிக் கொண்டு முன்பக்கம் வேகமாகப் பாய்ந்து வந்தார். எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் எழுந்து பதில் சொல்கின்ற நேரத்திலே திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் அமைச்சரைத் தாக்கிய காரணத்தாலே, அவருடைய முகத்திலே அடிபட்டு இரத்தம் வழிந்துகொண்டிருக்கிறது. இப்படி இந்த அவையிலே ஏதாவது ஒரு களங்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்று அவர் திட்டமிட்டு தொடர்ந்து இத்தகைய நடைமுறைகளைப் பின்பற்றுகின்ற காரணத்தாலும் திரு. சொ. கருப்பசாமி அவர்கள் அவை மரபுகளை மீறி நடந்து கொண்டுள்ள காரணத்தாலும், திரு. இரா. தாமரைக்கனி மற்றும்





திரு. சொ. கருப்பசாமி ஆகியோரை இந்த அவை நடைபெறுகின்ற இந்தக் கூட்டத்தொடர் முழுவதும் அவர்களை நீக்கி வைக்க வேண்டும்"

என்ற ஒரு தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் அவரவர்களுடைய இருக்கைகளிலே உட்காருங்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய அறைக்கு அழைத்துச் செல்லப்பட வேண்டும். அங்கே மருத்துவரை வரச்சொல்லவும்.

*(மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் இரத்தக் கறை பட்ட கைக்குட்டையைக் காட்டினார்கள்.)*

எதிர்க்கட்சித் தலைவர், ஏதாவது சொல்கிறீர்களா?

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற நடைமுறைகளில் திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் நடந்துகொள்கிற முறை மிக அநாகரிகமாக இருக்கிறது என்பதை மட்டும் நான் சொல்லிக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவாதங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் கடுமையாக இருக்கலாம். விவாதங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் கடுமையாக இருக்கலாம். இந்த ஆளும் கட்சி, எதிர்க்கட்சிகளினுடையே வாக்குவாதம் என்பது இந்த அவையினுடைய கண்ணியத்தைப் பொறுத்து இருக்கிறது. இருந்தாலும் அமைச்சர் பெருமக்கள் எல்லாம் ஒவ்வொரு தடவையும் குறுக்கிட்டு பதில் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள், சந்தேகங்களை, விளக்கங்களைக் கேட்கிறபோது. அப்படிக் கேட்கிறபோது ஒருவரை யொருவர், எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிற நாங்களே அநேகமாக கைநீட்டும் தூரத்திலே இருந்துகொண்டு நெருக்கமாகப் பேசிக் கொண்டிருக்கிறோம். ஒரு பக்கம் இப்படியெல்லாம் அடித்துக்கொண்டு பண்ணுகிற செய்கைகளை எல்லாம், திரு. இரா. தாமரைக்கனி போன்றவர்கள் இந்த அவையிலே தொடர்ந்து இதுபோன்று பண்ணுகிற மோசமான செயல்களை வன்மையாகக் கண்டிக்க வேண்டும் என்று சொல்லி, இதன்மீது தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

[1999 மார்ச் 22

*பிற்பகல் 12-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** பேரவைத் தலைவரவர்களே, மிகவும் அருவருக்கத்தக்க ஒரு நிகழ்ச்சி இது. சபையிலே நான் பல்லாண்டுகள் இருந்திருக்கிறேன். எவ்வளவோ கொந்தளிப்பான சூழ்நிலைகள் உருவாகியிருக்கின்றன. ஆனால் எதிரிலே அமைச்சர் இருக்கிறார் என்பதற்காக முதல் வரிசையிலே இருக்கக்கூடியவர் அமைச்சரையே தாக்கி இரத்தக் களறி ஏற்படுத்தியது மிக அநாகரிகமானது; மிக வெறுக்கத் தக்கது, கண்டிக்கத்தக்கது. எனவே, நம்முடைய மின்சாரத் துறை அமைச்சரவர்கள் முன்மொழிந்த தீர்மானத்திற்கு நான் என்னுடைய ஆதரவைத் தெரிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) அதுகுறித்து சபைத் தலைவரவர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய அருமை நண்பர் அண்ணார் பழனிசாமி அவர்கள் சொன்னதுபோல, வாதங்கள் எவ்வளவு எதிரும் புதிருமாக இருந்தாலும், கை நீட்டுவது என்பது மாபெரும் அநாகரிசமான ஒரு செயல்; இதற்குப் பா.ம.க. துணை போகாது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செல்வி ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது இதே மன்றத்திலே, அப்பொழுது சட்டமன்ற உறுப்பினராக இருந்த முன்னாள் அமைச்சர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் இங்கே தாக்கப்பட்டார். அதை நான் இப்பொழுது நினைவுகூர்வது என்னுடைய கடமையாகும். அப்பொழுதாவது ஆளுங்கட்சியாக இருந்தார்கள். இப்பொழுது எதிர்க்கட்சி வரிசையிலே 2, 3 பேர் இருந்து கொண்டு, இவ்வளவு பேர் இங்கேயிருக்கிறபொழுது, பேசுவதற்குப் பதிலாக கை நீட்டுவது, அடிப்பது, அமைச்சருடைய முகத்திலே இரத்தம் சொட்டச் சொட்டத் தாக்கியிருப்பது என்பது, ஏதோ இந்த இரண்டு பேருமே இதைச் செய்தார்களா அல்லது ஏற்கெனவே Auditor விவகாரம் மாதிரி, அடித்ததற்குப் பின்னாலே - அடிப்பது, பூச்செண்டு அனுப்புவது, பிறகு—இதற்கு நான் காரணம் அல்ல; வேறு யாரோ செய்துவிட்டு என்னைப் பழி சொல்கிறார்கள் என்று அறிக்கை விடுவது, இதெல்லாம் அந்தக் கட்சியினுடைய தலைவராக இருக்கிற செல்வி ஜெயலலிதா அவர்களுக்கு வழக்கமான, வாடிக்கையான



1999 மார்ச் 22] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

கதையாகிவிட்டது. இப்பொழுது நான் கேட்டுக்கொள்வேன், உடனடியாக அமைச்சரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று, அவர் தாக்கப்பட்டு இருப்பதற்குச் சிகிச்சை செய்வதோடு, சட்டமன்றத்திலே தாக்கி அடித்தாலும் அடிதான், அதற்கும் சட்டபூர்வமான நடவடிக்கையும் எடுக்க வேண்டும். இல்லையென்றால், வெளியேயிருந்து இன்றைக்கு மாலையே நீங்கள் இன்னொரு அறிக்கையை எதிர்பார்க்கலாம். எங்கள் கட்சியிலே இரண்டே இரண்டு உறுப்பினர்கள்தான், கடுமையாகத் தாக்கப்பட்டார்கள் என்று ஜெயலலிதா தரப்பிலே ஓர் அறிக்கையோ அல்லது இவர்களைக் கொண்டு போய் மருத்துவமனையிலே - முன்னாள் மத்திய அமைச்சர் ஆர்.கே. குமாரைப் படுக்க வைத்த மாதிரி—இந்த இரண்டு பேரும் அடி தாங்காமல் படுத்துக்கிடக்கிறார்கள் என்று சொல்லி கண்டிப்பாக ஏதாவது ஒரு setup சாயங்காலம் இருக்கும். அதனாலே அதற்கு முன்னாலே சட்டபூர்வமான முறையிலே நீங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது மிகுந்த அவசியமாகும். எனவே, மாண்புமிகு அமைச்சர் வீராசாமி அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை நான் நிச்சயமாக ஆதரிக்கிறேன். இது மற்றவர்களுக்கும் முன்னுதாரணமாக இருக்க வேண்டும். இதுபோன்ற காட்டுமிராண்டித்தனமான, கண்டனத்திற்குரிய, ஜனநாயகத்திற்குப் புறம்பான செயல்கள் சட்டமன்றத்திற்கு உள்ளே இருந்தாலும் சரி, வெளியே இருந்தாலும் சரி, கண்டிக்கப்பட வேண்டியவை என்று கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே நண்பர் தாமரைக்கனி மூலமாக நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் தாக்கப்பட்டு, இரத்தக் காயம் வரக்கூடிய அளவில் ஒரு நடவடிக்கையை மேற்கொண்டார் என்று சொன்னால், அதை வன்மையாகக் கண்டிக்காமல் இருக்க முடியாது. ஏனென்றால் இதற்கு முன்னால், ஏற்கெனவே கடந்த 1980-84 காலகட்டத்திலே இப்படிப்பட்ட சில நடவடிக்கைகளை நண்பர் தாமரைக்கனி அவர்கள் அன்றும் நிகழ்த்திய நிகழ்ச்சிகள் என்னுடைய நினைவில் இருக்கின்றன. எனவேதான் இதிலே சட்டபூர்வமான நடவடிக்கை என்பது மிக முக்கியமாகத் தேவைப்படுகின்றது. அந்த வகையிலே ஒரு சட்டபூர்வமான நடவடிக்கை இதில் தேவை. ஒரு சட்டமன்றத்திற்குள்ளே எந்தவகையில் வேண்டுமானாலும் வார்த்தைகளைப் பரிமாறிக் கொள்ளலாம், ஆனால் கையை, காலை நீட்டக்கூடிய அளவுக்கு, நம்முடைய உணர்ச்சிகள் செல்வதனுடைய விளைவுதான் இது. ஆக, அந்த அடிப்படையிலே இந்த நிலைக்கு ஆளான நண்பர் தாமரைக்கனி எடுத்துக்கொண்ட

[திரு. டி. மணி] [1999 மார்ச் 22

நடவடிக்கைகள், அவர் செய்த அந்த நடவடிக்கைகள் முழுவதும் கண்டனத்திற்கு உரியது மட்டுமல்ல; அதன்மீது உரிய சட்டபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை முழுமனதாக ஆதரிக்கிறேன்.

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்தினுடைய கண்ணியத்தைக் கெடுக்கின்ற வகையில், கருத்துக்களைப் பேசிக்கொண்டிருக்கும்போதே, கொஞ்சம்கூட எதிர்பாராத வகையிலே, உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள், அமைச்சரைத் தாக்கியிருப்பதைப் பார்க்கும்போது இதற்கென்றே அப்படிப்பட்ட ஒரு மோதிரத்தை அணிந்து வந்திருக்கிறாரோ என்று கூட எண்ணத் தோன்றுகிறது, அப்படிக் கடுமையாக அமைச்சரைத் தாக்கி, இரத்தம் சிந்தவைத்து இருப்பது, உண்மையிலேயே மிகமிகக் கேவலமானது மட்டுமல்ல, இதை இந்த மாமன்றமும், அத்தனை உறுப்பினர்களும், பத்திரிகையாளர்களும், பார்வையாளர்களும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, இவ்வளவு அராஜகமாக அவர் நடந்து கொண்டிருக்கிறார் என்று சொன்னால், இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கின்ற வகையிலே தங்கள் மூலமாகக் கடுமையான நடவடிக்கைகளை இந்த அவை மேற்கொண்டாக வேண்டும். இல்லையென்று சொன்னால், அடாவடி அரசியலை நடத்துவதையே வாடிக்கையாகக் கொண்டிருப்பவர்கள் கொஞ்சம்கூடத் திருந்தமாட்டார்கள் என்ற காரணத்தாலே இதற்குக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை ஆதரித்து, நடவடிக்கை எடுக்க மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. தாமரைக்கனி அவர்கள், நீண்ட அனுபவமுள்ள ஒரு சட்டமன்ற உறுப்பினர். அவரே இப்படி நடந்துகொண்டு, அமைச்சர் பதில் சொல்கிறபோது, உறுப்பினர் கையில் மோதிரம் போட்டிருக்கிறாரா

2218



1999 மார்ச் 22] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

அல்லது ஓர் ஆயுதமே வைத்திருக்கிறாரா என்று சந்தேகப்படுகிற அளவுக்கு, ஒரு கோரமான மோதிரத்தை வைத்துக்கொண்டு, அமைச்சரின் முகத்திலே குத்தியதன் காரணமாக, இரத்தம் வந்துவிட்டது. அது வேதனைக்குரியது, கண்டிக்கத்தக்கது. ஆகவே, தாமரைக்கனி அவர்களுக்கு, தாங்கள் என்ன தண்டனை கொடுத்தாலும், இந்த அவையில் உள்ள எதிர்க்கட்சிகள் சார்பாக நாங்கள் ஏற்றுக்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சற்று நேரத்திற்கு முன்பு நடந்த மிக அநாகரிகமான செயலை மாண்புமிகு உறுப்பினர்கள் மட்டுமல்ல, இங்கே இருக்கின்ற பத்திரிகையாளர்கள், அரசு அதிகாரிகள், பார்வையாளர்கள் எல்லோருமே பார்த்திருப்பீர்கள். மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்களுடைய அரசியல் வரலாற்றில் இது ஒரு தொடர்கதை. இந்தச் சட்டமன்ற ஆரம்பத்திலேயே நான் பல முறை அவரை அழைத்துச் சொன்னேன். கடந்தகால வரலாற்றைப் பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால், உறுப்பினர்கள்மீது கை வைக்கும் நடவடிக்கையை எந்தக் காரணத்தைக் கொண்டும் நான் அனுமதிக்க முடியாது என்று சொல்லிக்கொண்டேயிருந்தேன். அன்பாகத் தட்டினேன் என்று கூடச் சொன்னார்கள். ஆனால், இன்று என்ன நடந்தது என்று எல்லோரும் பார்த்திருப்பீர்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்குப் படுகாயம் ஏற்பட்டது. இரத்தக் காயம் ஏற்பட்டு, அவர்கள் வைத்திருந்த கைக்குட்டை முழுவதும் இரத்தமாகிவிட்டது என்பதைப் பார்த்திருப்பீர்கள். ஆகவே, அந்த வகையிலே, எல்லாக் கட்சிகளின் தலைவர்களும் இந்தக் காட்சியைப் பார்த்து, இது நடந்த உண்மை என்று எல்லோருக்குமே தெரியும்.

ஆகவே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை அவையின் முடிவிற்கு விடுகிறேன்.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

D V24/3/99 N99.661

மாண்புமிகு உறுப்பினர்கள் தாமரைக்கனி அவர்களுக்கும், கருப்பசாமி அவர்களுக்கும் இந்தக் கூட்டத் தொடர் முடிகின்றவரையில் இந்த

அவையிலே கலந்துகொள்ள அனுமதியில்லை என்பதை அறிவிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

## 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) திரு. இரா. தாமரைக்கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் தங்குவதற்குத் தடை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல, இந்த கொடுமையான செயலைச் செய்த திரு. தாமரைக்கனி சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலும் இருப்பது முறையில்லை. அதிலே பல பிரச்சினைகள் வரும். இது தொடர்பாக, அடுத்த உறுப்பினர்கள் அச்சுறுத்தப்படுவார்கள் அல்லது தனக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துகிறார்கள் என்று அவரே பொய்ப்புகார் கூட கொடுக்கலாம். ஆகவே, இந்தக் கூட்டத்தொடர் முடிகிறவரை, திரு. தாமரைக்கனி அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் தங்கக்கூடாது என்ற உத்தரவையும் இப்போது நான் பிறப்பிக்கின்றேன்.

*பிற்பகல் 12-50*

## 8. திரு. இரா. தாமரைக்கனி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரைப் பேரவையில் தாக்கியதற்காகக் குற்றவியல் நடவடிக்கை எடுத்தல்.

**திரு. ஆ. இராசேந்திரந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் எடுக்கின்ற நடவடிக்கையானது, அவர்மீது criminal நடவடிக்கை எடுப்பதற்குப் பரிந்துரைத்து, அந்தவகையில் அது அதிகாரபூர்வமான நடவடிக்கையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தங்களுக்கு அதற்கு அதிகாரம் இருப்பதாகவே நான் கருதுகின்றேன். எனவே, criminal நடவடிக்கை எடுத்தால்தான், அவருக்கு ஒரு பாடமாக இருக்கும், மற்றவர்களுக்கும் ஒரு படிப்பினையாக அது அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** criminal நடவடிக்கையைப் பொறுத்தவரையில், இதிலே சட்டரீதியாக என்ன நடவடிக்கை எடுக்கமுடியும் என்பதை நான் பரிசீலனை செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. முன்மாதிரியைப் பார்க்கவேண்டும். நேரடியாக,



நீதிமன்றமாக நம்முடைய மன்றத்தை மாற்றி தண்டனை கொடுக்க முடியுமா என்று பார்க்க வேண்டும். அதற்கு மாறாக, நீதிமன்றத்திலே போய் வழக்குத் தொடருவதிலே, என்ன சட்டச் சிக்கல் இருக்கிறது என்பதைப் பின்னால் பரிசீலனை செய்து, என்னுடைய முடிவை அறிவிப்பேன் என்று சொல்லி, தொடர்ந்து நம்முடைய சபையின் நடவடிக்கையை...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பொறுத்துக்கொள்ள வேண்டும். அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் தாக்கப்பட்டதிலே, படுகாயம் அடைந்து, மருத்துவர்கள் இப்போது சிகிச்சை அளித்துக் கொண்டிருக்கிறார்கள். பயங்கரமான வெட்டு விழுந்திருக்கிறது. திரு. தாமரைக்கனி, அவர் அணிந்திருந்த மோதிரத்தினால் அடித்ததால்தான் வெட்டு விழுந்திருக்கிறது. எனவே, தாங்களே இதிலே Police-ல் புகார் கொடுத்து—ஏனென்றால், அனைவருமே சாட்சியாக இருக்கிறோம். நீங்களே ஒரு புகார் மனுக் கொடுத்து—காவல் துறையிலே Criminal வழக்கு ஒன்று பதிவு செய்தால்தான், எதிர்காலத்திலே யாராக இருந்தாலும், அவர்களுக்குப் பாதுகாப்பு இருக்கும். எனவே, இதற்கு முன்மாதிரி இருக்கிறதா, இல்லையா, சட்டம் அனுமதி தருகிறதா, இல்லையா என்பதைவிட—இந்த அவையிலே, உங்கள் கண் முன்னாலேயே ஒருவன் கொலை செய்ய வந்தால், அதற்குக்கூட நாம் முன்மாதிரியைப் பார்த்துக் கொண்டிருப்பது சரியல்ல. எனவே, இதையே முன்மாதிரியாக எடுத்துக்கொண்டு, நீங்களே காவல் துறைக்குப் புகார் செய்து, சட்டமன்றத்தின் தலைவர் என்ற முறையில், நிச்சயமாக அவர் மீது Criminal நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சம்பவத்திலே ஈடுபட்ட இருவரையுமே சட்டமன்றத்திற்குள்ளே வரக்கூடாது என்று சொல்லும் அதேநேரத்தில், சட்டமன்ற விடுதியிலும் தங்கக்கூடாது என்ற அந்தத் தீர்ப்பையும் நீங்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருவரும்தான்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அப்துல் லத்திப், கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் பேசுகிறார், உங்களைப் பிறகு அழைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்தில் Criminal நடவடிக்கையில் ஈடுபட்டவர்களைத் தண்டிக்கின்ற உரிமை இந்த அவைக்கு இருக்கிறதா என்பது இப்போது முக்கியமான பிரச்சினையாகும். அதைப்பற்றி நீங்கள் பின்னால் பரிசீலிப்பதாகச் சொன்னீர்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால், என்னுடைய கருத்து என்னவென்றால், சட்டமன்ற நிகழ்ச்சியில், இந்த அவைக்குள் Criminal நிகழ்ச்சி ஒன்று நடைபெறுமானால், அதைக் கண்டிப்பதற்கு உங்களுக்கு முழு உரிமை இருக்கிறது. காவல் நிலையத்திற்குச் சென்று பதிவு செய்து, அதன் அடிப்படையில்தான் இருக்க வேண்டுமென்பது அவசியம் இல்லை. இதுதான் என்னுடைய தாழ்மையான கருத்தாகும். எனவே, நீங்கள் பரிசீலிப்பதாகச் சொன்னீர்கள். நன்கு பரிசீலியுங்கள். என்னுடைய தாழ்மையான கருத்தை உங்களின் மேலான கவனத்திற்குச் சொல்கிறேன். இந்த மன்றத்திற்கு, Criminal நடவடிக்கையை அவைக்குள் செய்தவர்களைத் தண்டிப்பதற்கு உரிமை, அதிகாரம் இருக்கிறது என்பது என்னுடைய பணிவான கருத்தாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சபாநாயகர். உங்களுக்குள்ள அதிகார வரம்பும் தெரியும். சட்டசபைக்குள்ளே, நம்முடைய சட்டத் துறை அமைச்சர் எடுத்துச் சொல்லியதைப்போல, Criminal குற்றம் நடைபெறுமானால், suomotu, prima facie case ஆக, புகார் இல்லாமல் நீங்கள் முடிவு எடுத்து சிறைக்கு அனுப்பலாம். முன் உதாரணங்கள் ஏராளமாக இருக்கின்றன. இந்தச் சபையிலும் இருக்கின்றன.

*பிற்பகல் 12-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்திப்.

**THIRU M. ABDUL LATHEEF:** Hon. Speaker, Sir, it is learnt that lot of constitutional and legal implications and the basic question of separation of powers and the sovereign authority of the Legislature are involved in this matter. A suggestion has been made that we should prefer a criminal complaint



to a Police authority - to an outside authority. But within the Assembly, the Hon. Speaker is the full-fledged sovereign authority and he will have every right to initiate such step or steps as are essential and warranted in the circumstances. So, we cannot compromise our authority to any other authority, which is another constitutional entity. Therefore, the Hon. Speaker is fully empowered to take such action - criminal or otherwise - as are essential and warranted in the circumstances. We cannot go and prefer a criminal complaint before the Police. The Hon. Speaker cannot do so and he need not do so. This incident has taken place in the presence of all members inside the House and it is a very very important constitutional question. Therefore, Hon. Speaker can take any action. I request the Hon. Speaker to initiate such proceedings as are deemed proper, essential and appropriate, which is within the discretionary power of the Hon. Speaker. This cannot be sent elsewhere. Therefore, I request you to take any decision; you are already entitled and you are empowered. This body is a sovereign body and this sovereignty cannot be bartered away for an incident that took place in the presence of lot of people and all the members. This patent criminal act has been perpetrated. We cannot ignore; we cannot in any way belittle the sovereign authority of the Hon. Speaker and the authority of this Legislature. I request you to take such action according to your discretion to which you are entitled. But at the same time, taking the inner deep feelings, as has been expressed by Hon. Minister for Health, which is the expression - silent expression - of this entire House, I request you to take such action as you feel necessary at this hour.

*பிற்பகல் 12-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே ஒவ்வோர் உறுப்பினருடைய நலன்களையும் முழுமையாகப் பாதுகாக்கின்ற பொறுப்பு மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு இருக்கின்றது. எனவே, இறையாண்மை மிக்க, இதில் முழு அதிகாரம் படைத்த தாங்கள், suomotu என்ற அடிப்படையில், தாங்களே முடிவு எடுத்து உடனடியாகத் தீர்ப்பளித்துக் கடுமையாகத் தண்டிக்க வேண்டுமென்று இந்த அவையின் சார்பில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் ஒரு தெளிவான விளக்கத்தைக் கொடுக்க விரும்புகிறேன். இந்த அவைக்கு அதிகாரம் உண்டு, இந்த அவையின் காவலன் என்ற முறையிலே எனக்கு அதிகாரம் உண்டு என்பதிலே எனக்குக் கருத்து வேறுபாடு கிடையாது. காவல் துறைக்குப் புகார் கொடுப்பதை, பேரவைத் தலைவர் பெயரிலே கொடுக்க முடியாது; அது நம்முடைய சட்ட விதிகளிலே இல்லை. அப்படிப் புகார் கொடுப்பதாக இருந்தால், பேரவைச் செயலாளர் மூலமாகக் கொடுக்க வேண்டும். ஆனால், அப்படிப் புகார் கொடுப்பதிலே பல பிரச்சினைகள் உண்டு. சாட்சியாக யார்; யாரை அழைப்பது, எப்படிச் சொல்வது என்றெல்லாம் பிரச்சினை உண்டு. அதற்கு மாறாக, இந்த அவையையே நீதிமன்றமாக மாற்றி (மேசையைத் தட்டும் ஒலி) குற்றம் செய்தவரை எப்படி நீதிமன்றத்திலே நிறுத்துகிறோமோ, அதைப்போலவே இந்த மன்றத்திலே நிறுத்தி அவருடைய விளக்கத்தைக் கேட்டு, தீர்ப்புக் கூறுவதற்கு எனக்கு அதிகாரம் இருக்கிறது. இதைத்தான் நான் தெளிவாகச் சொல்ல விரும்பினேன். ஒருவேளை நான் சொன்னது தெளிவாக இல்லையென்று கருதுகின்றேன். ஆகவே, இதிலே நாம் மிகவும் ஜாக்கிரதையாகப் போக வேண்டும் என்பதற்காகத்தான், நான் மற்ற உதாரணங்களையெல்லாம் பார்த்துவிட்டு, நாளைக்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறேன் என்பதைச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மன்னிக்க வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவரைக் குறுக்கிடுவதற்காக. இந்த மன்றத்திற்கு வெளியிலே அரசியல் சட்டத்தைக் கொளுத்தினார்கள், அதனுடைய பிரதியை, நகல் எடுத்துக் கொளுத்தினார்கள் என்பதற்காக இந்த மன்றத்தின் உறுப்பினர்கள் பதவியைக்கூட இரத்து செய்து இந்த மன்றம் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் உள்பட பல சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே உட்கார்ந்திருக்கிறார்கள். முன்பு உறுப்பினர்கள் பதவியையே இரத்து செய்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு இவ்வளவு பெரிய நிகழ்ச்சி நடந்திருக்கிறது. மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் கண்டித்த பிறகு, இங்கேயிருக்கிற பார்வையாளர்களும், பத்திரிகை நிருபர்களும் பார்த்ததற்குப் பிறகு, இந்த அவையைப் பொறுத்து நீங்கள் அத்தகைய நடவடிக்கைகூட ஒட்டுமொத்தமான எங்கள் ஆதரவோடு எடுப்பதற்கு உங்களுக்கு அதிகாரம் உண்டு. இதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்பதற்காக நான் சொல்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப் போகின்றேன். ஆனால், சட்ட முன்னுதாரணங்களை எல்லாம் பார்த்துவிட்டு, இதற்கு முறையாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அவசரத்திலே நாம் எல்லோரும் சேர்ந்து நடவடிக்கை எடுத்து விட்டோம் என்று நாளைக்கு ஒரு புகார் வரக்கூடாது. நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப் போகின்றேன் என்பதைத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். இன்னும் ஒருபடி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குச் சொல்கின்றேன். நடவடிக்கை பின்னாலேகூட வரலாம். நான் இப்போதேகூட அந்த உறுப்பினரைக் கைது செய்யச் சொல்லி காவல் துறைக்கு உத்தரவு போடலாம். அதைக்கூட இப்போதே நான் பரிசிலனை செய்யப் போகின்றேன்.

## 6. வரவு-செலவுத் திட்டம், 1999-2000, பொது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, நிதிநிலை அறிக்கைமீது விவாதம் தொடரும். திரு. குழந்தை தமிழரசன் அவர்களைப் பேச அழைக்கின்றேன். (குறுக்கீடு) அவையையெல்லாம் நாம் ஒத்திவைக்கக் கூடாது.

*பிற்பகல் 1-00*

***திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் இந்த மாமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 12-வது நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு தங்களுக்கு நான் முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களால் இருபதாம் நூற்றாண்டினுடைய இந்த இறுதிப் பகுதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த நிதிநிலை அறிக்கை இருபத்தியோராம் நூற்றாண்டில் இந்த உலகத்தில் என்ன நிகழும், என்ன தேவைப்படும், எவை இந்தச் சமுதாயத்தை வாழ வைக்கும் என்பதை தீர்க்கதரிசனமாக உணர்ந்து, பட்டியலிட்டு அதற்கேற்ப திட்டங்களை வகுத்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

[*மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி) தலைமை*]

அனைத்துத் தரப்பினராலும், அனைத்துப் பத்திரிகைகளாலும், அனைத்துப் பொது மக்களாலும் மிக ஆரவாரமாக ஆதரிக்கப்பட்ட

[திரு. குழந்தை தமிழரசன்] [1999 மார்ச் 22

நிதிநிலை அறிக்கையை தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் தாக்கல் செய்த காரணத்தால், மக்களிடையே அது மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றுவிட்ட காரணத்தால், தமிழக முதல்வர் அவர்கள் தாக்கல் செய்துள்ள இந்த நிதிநிலை அறிக்கையினுடைய நல்ல வரவேற்பை சீர்குலைக்க வேண்டுமென்ற நோக்கத்தில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள், இந்த மாமன்றத்திலே கலவரம் செய்து, அந்தக் கலவரத்தின் மூலமாக இந்த நாட்டு மக்களுடைய கவனத்தை - நல்ல நிதிநிலை அறிக்கையிலிருந்து தங்களுடைய பக்கம் ஈர்ப்பதற்கு முயற்சி செய்கிறார்கள். அதற்கு நான் ஒரு முன்னுதாரணத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அண்ணா தி.மு.க. உறுப்பினர்கள் இங்கு நடந்து கொண்ட விதத்திற்கு அந்தக் கட்சியினுடைய தலைவியே இந்த மாமன்றத்திலே ஏற்கெனவே நடந்து கொண்ட முறைதான் வழி வகுத்திருக்கிறது என்பதையும் நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். 25-3-1989 அன்று நம்முடைய முதல்வர் அவர்கள் இதே மாமன்றத்திலே நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்தார்கள். அந்த நேரத்திலே, எதிர்க்கட்சியில் இருந்த முந்தைய முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் தன்னுடைய சேலையைத் தானே கிழித்துப்போட்டுக்கொண்டும், தன்னுடைய தலையை விரித்துப்போட்டுக் கொண்டும் நாடகமாடி, கலைஞர் அவர்கள் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்யமுடியாமல் கலகம் விளைவித்தது நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த அடிப்படையிலேதான் முந்தைய முதலமைச்சரைத் தலைவராக ஏற்றுக்கொண்டிருக்கிற இன்றைய அதிமுக சட்டமன்ற உறுப்பினர்கள், தொடர்ந்து காலித்தனம் செய்ய வேண்டுமென்று இந்த நாட்டினுடைய கவனத்தைத் தங்கள் பக்கம் சிதறடிக்க வேண்டுமென்ற நோக்கத்திலே ஒரு மிகப் பெரிய நாடகத்தையே ஆடி அமைச்சரையே தாக்கி இருக்கிறார்கள் என்றால், அவர்களுக்கு இந்த மாமன்றம் தகுந்த தண்டனை வழங்க வேண்டுமென்று ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக நான் இந்த மன்றத்திலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தமிழகத்தினுடைய முதல்வர் கலைஞர் அவர்கள், 21 ஆம் நூற்றாண்டில், தமிழகத்தினுடைய எல்லா மக்களையும் வாழ வைப்பதற்காக அடித்தளம் போடுகின்ற விதத்திலே இந்த Budget-ஐத் தாக்கல் செய்துள்ளார்கள். 20ஆம் நூற்றாண்டில் தமிழகத்தினுடைய மக்கள் வாழ்க்கை மேம்பாடு அடைவதற்கு, எப்படி தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் இல்லாமல் 20 ஆம் நூற்றாண்டினுடைய வரலாற்றை எழுத முடியாதோ அதுபோலதான் 21 ஆம் நூற்றாண்டினுடைய வரலாற்றையும்



1999 மார்ச் 22] [திரு. குழந்தை தமிழரசன்]

தலைவர் முதல்வர் கலைஞர் இல்லாமல் எழுத முடியாது என்பதற்கு அடையாளமாக அடித்தளமிட்டு இந்த நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்திருக்கிறார்கள். ஒரு பொருளாதார நிபுணரைப்போல தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் இந்த Budget-ஐ அனைத்துத் தரப்பு மக்களுக்காகத் தயார் செய்து அளித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், 47 பக்கங்கள் கொண்ட, 170 பத்திகள் கொண்ட நிதிநிலை அறிக்கையை இந்த மாமன்றத்திலே 78 மணித்துளிகள் வாசித்துக் கொடுத்தார்கள். அந்த 78 மணித்துளிகளும் தமிழகத்தினுடைய அனைத்துத் தரப்பு மக்களுடைய நல்வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாகவே அவருடைய நிதிநிலை அறிக்கை இருந்தது என்பதை நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது தமிழகத்திலே பிரபலமான ஒரு பாடல் வரியுண்டு. 'கண்ணோடு காண்பதெல்லாம் கண்களுக்குச் சொந்தமில்லை' என்ற ஒரு வரி இந்தத் தமிழகத்திலே உலவி வருகிறது. ஆனால் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தாக்கல் செய்துள்ள இந்த நிதிநிலை அறிக்கையில், நம்முடைய கண்களால் பார்ப்பதெல்லாம் உண்மையாகவே இருந்து தமிழக மக்களுக்கு நல்ல பயனை அளிக்கிறது என்பதைப் பெருமையோடு இந்த மன்றத்திற்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையை தலைவர் கலைஞர் அவர்கள் தாக்கல் செய்த அடுத்த நாள், தமிழகத்திலே இருக்கிற அத்தனை பத்திரிகைகளும் அதை வரவேற்று தலையங்கம் எழுதின. முதல் பக்கத்தில் செய்திகளை வெளியிட்டன. The Hindu பத்திரிகையிலே முதல் பக்கத்திலே செய்தி வெளியிட்டிருந்தார்கள்.

பிற்பகல் 1-05

Liberal Sales Tax concessions mark TN Budget என்று குறிப்பிட்டிருந்தார்கள். அதுபோல Looking to push for a growth-oriented Budget for Tamil Nadu, the Chief Minister Mr. M. Karunanidhi today unpacked a variety of sales tax concessions, imposed no fresh burdens on the poor... ஏழைகளைத் தாக்காமல், காக்கின்ற ஒரு நிதிநிலை அறிக்கையை அறிவித்தார்கள் என்று 'The Hindu' பத்திரிகையிலே முதல் பக்கத்திலே செய்தியை வெளியிட்டிருந்தார்கள். அதே, The Hindu பத்திரிகையிலே அன்றே ஒரு தலையங்கமும் எழுதியிருந்தார்கள். Continuity in development வளர்ச்சியை நோக்கி இந்த நிதிநிலை அறிக்கை போகிறது என்று எழுதியிருந்தார்கள். The Tamil Nadu Budget for 1999-2000, which the Chief Minister Mr. Karunanidhi presented to the State Assembly on Wednesday, is

[திரு. குழந்தை தமிழரசன்] [1999 மார்ச் 22

largely an exercise in extending the development schemes which are already in different stages of implementation என்று, வளர்ச்சியை நோக்கிப் போகின்ற நிதிநிலை அறிக்கை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் தமிழ்நாட்டிலே இருக்கின்ற அத்தனை வணிக நிறுவனங்களும் அதை வரவேற்று இருக்கின்றன. Madras Chamber of Commerce and Industry, South Indian Chamber of Commerce and Industry, Andhra Chamber of Commerce, National Chamber of Commerce, Hindustan Chamber of Commerce, All India Manufacturers Organisation, Tamil Nadu Chamber of Commerce Jewellers Federation, வணிகர்கள் நல சங்கம், இப்படி அனைத்துத் தரப்பினுடைய வணிகச் சங்கங்களும் தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் அறிவித்துள்ள இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்றுப் பாராட்டியிருக்கின்றன. அதிலேகூட அவர்கள் குறிப்பிடுகின்றபோது நல்ல வார்த்தைகளைச் சொல்லிப் பாராட்டியிருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கை trend setter என்றும் 'Done well என்றும், People's Budget என்றும் அதிலே குறிப்பிட்டு எழுதியிருக்கிறார்கள்.

அதேபோன்று Indian Express பத்திரிகையினுடைய முதல் பக்கத்திலே 'Karunanidhi's industry—friendly Budget spares poor-ஏழைகளைப் பாதுகாத்து, வளர்ச்சியை நோக்கிப் போகின்ற நிதிநிலை அறிக்கையை முதல்வர் அவர்கள் தாக்கல் செய்திருக்கிறார்கள்—என்று மிக அற்புதமாகக் குறிப்பிட்டு, 'Tamil Nadu Chief Minister Karunanidhi today presented what could be termed as a pro-poor and industry friendly budget for Tamil Nadu... என்று குறிப்பிட்டுக் கூறியிருக்கிறார்கள்.

அதைத் தொடர்ந்து தினமணி பத்திரிகையிலே, இருக்கின்ற பொருளாதார சூழ்நிலைகளை அனுசரித்து ஒரு நல்ல தலையங்கம் போட்டிருந்தார்கள். வளர்முக Budget என்று குறிப்பிட்டிருந்தார்கள். "ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்த நேரிட்டதனால் பல மாநில அரசுகளுக்கு நிதி நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. பொருளாதார சுணக்கத்தினால் வரி வருவாய் குறைந்துவிட்டது. மாநிலங்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டிய வருவாயும் மைய அரசின் சில முரணான அணுகுமுறைகளால் குறைந்துவிட்டன. இதுபோன்ற சிக்கலான பொருளாதாரச் சூழ்நிலையில் அனைத்து தரப்பினரையும் திருப்திபடுத்தும் வகையிலும், சமுதாயத்தின் பொருளாதார மாற்றத்தை ஊக்குவிக்கும் வகையிலும் இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரிப்பது மிக மிகக் கடினமான பணிதான். இருந்தாலும், 1999-2000 ஆண்டுக்கான தமிழக அரசினுடைய நிதிநிலை அறிக்கையை, ''குறைந்த



1999 மார்ச் 22] [திரு. குழந்தை தமிழரசன்]

வரி விதிப்பு, அதிக வருவாய் என்ற சந்தைப் பொருளாதார சித்தாந்தத்தைக் கருத்தில்கொண்டு தயாரித்து இருக்கிறார்கள்" என்று அவர்கள் பாராட்டி எழுதியிருக்கிறார்கள்.

பாரத ரத்னா விருதுபெற்ற, இந்தியாவினுடைய முந்தைய தொழில் துறை அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் வளர்பிறை Budget என்று நம்முடைய தமிழக முதல்வர் Budget-ஐப் பாராட்டியிருக்கிறார்கள். இப்படி எல்லோரும் பாராட்டிய, தமிழக மக்கள் அனைவரும் பாராட்டிய இந்த நிதிநிலை அறிக்கையை, முந்தைய முதலமைச்சர் அவர்கள் ஒரு செய்தி அறிக்கையிலே இது ஏமாற்றத்தை அளிக்கக்கூடிய நிதிநிலை அறிக்கை என்று சொல்லியிருக்கிறார்கள்.

கிராமத்திலே சொல்வார்கள். 8 பிள்ளைகள் பெற்றவளைப் பார்த்து, எதிர்வீட்டுக்காரி வயிற்றெரிச்சலிலே அம்மிக் குழவியை எடுத்து அடிவயிற்றிலே குத்திக்கொள்வாளாம். அதைப்போல, 12 நிதிநிலை அறிக்கைகளை தேர்ந்த அனுபவத்தோடு, அறிவின் முதிர்ச்சியோடு தமிழக முதல்வர் அவர்கள் இந்த மன்றத்திற்கு, மக்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். வயிற்றெரிச்சல் தாங்காமல் அம்மிக் குழவியை எடுத்துக் குத்தியது போல, முந்தைய முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய மடியிலே எடுத்துக் குத்திக்கொண்டு, இதிலே ஒன்றும் இல்லை, ஒன்றும் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அது எல்லாவற்றையும் உள்ளடக்கி இருக்கிறது என்பதை நான் சொல்லவிரும்புகிறேன்.

ஓர் உறுப்பினர் இங்கே பேசும்போது தொழில் துறையிலே வளர்ச்சி இல்லையென்று சொன்னார். தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், பொறுப்பேற்ற பிறகு, இந்த 2½ ஆண்டு காலத்திலே மிகக் கடுமையாகப் பணியாற்றியதற்குப் பின்புதான் இந்தியாவிலேயே தமிழகத்தை இரண்டாவது இடத்திற்கு தொழில் வளர்ச்சியிலே கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். Ford தொழிற்சாலை, Hyundai தொழிற்சாலை, கண்ணாடி நார்த் தொழிற்சாலை என்று மாதத்திற்கு ஒரு தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டுவது அல்லது மாதத்திற்கு ஒரு தொழிற்சாலை திறப்பது என்ற அடிப்படையில் தலைவர் கலைஞர் அவர்கள் தொழிற்சாலைகள் வளர்ச்சியை தமிழகத்திலே கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த ஆட்சியில்தான் வேலைவாய்ப்பு அதிகமாக உருவாக்கி கொடுக்கப்பட்டது. காவல் துறையிலே S.I.-கள் இந்த ஆட்சியிலே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 10 ஆயிரம் காவலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 10 ஆயிரம் சாலைப் பணியாளர்கள்

[திரு. டி. மணி] [1999 மார்ச் 22

மாநிலங்களுக்கான நிதி ஆதாரத்தை அதிகப்படுத்த மத்திய அரசு மறுத்து வரும் நிலையில், மத்திய அரசு உரம், டீசல், சமையல் Gas, Ration பொருட்கள் உள்ளிட்ட பொருட்களுக்கு அதிக விலை உயர்த்தி இருக்கும் நிலையில், அதிக வரிகள் இல்லாத ஒரு வரவு-செலவுத் திட்டத்தை தமிழக அரசு கொண்டுவந்து இருப்பதை மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி முழுமையாக வரவேற்கிறது. அதே நேரத்தில் கிராமப்புற மக்களின் ஏழ்மை நிலையை நீக்க அவர்கள் பொதுவான முன்னேற்றம் காண்பதற்கு அடிப்படையான நிலச் சீர்திருத்தம்பற்றி இந்த வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்படாதது ஓர் ஏமாற்றத்தை அளிப்பதாக உள்ளது. குறிப்பாக, நம்முடைய மாநிலத்தினுடைய பல்வேறு பகுதிகளில் நாம் பார்ப்போமேயானால், கிராமங்களில் இருக்கின்ற விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் கையில் நிலம் இல்லை. அவர்களுடைய கையிலே இருக்கிற 5 அல்லது 10 சென்ட் அல்லது 1/2 ஏக்கருக்கு உள்ளே இருக்கின்ற அந்த நிலத்திலேதான் அவர்கள் தங்களுடைய வருவாயைப் பெருக்கிக் கொள்ள வேண்டிய ஒரு கட்டாயச் சூழ்நிலை இருக்கின்றது. எனவேதான், அவர்களுடைய வருமானத்தைப் பெருக்கிக்கொள்ளாமல், ஒட்டுமொத்தமாக தமிழகத்தினுடைய கிராமப்புற மக்களின் வளர்ச்சி என்பதை, அந்த அடிப்படையிலே நாம் பார்க்க வேண்டும். அந்த வகையிலே ஓர் அடிப்படையான நிலச் சீர்திருத்தத்தை இந்த அரசு கொண்டுவர வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, மின் உற்பத்தியை தனியாருக்குக் கொடுப்பது என்பது மத்திய அரசின் புதிய பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றி எடுக்கப்பட்டுள்ள தவறான ஒரு நடவடிக்கை என்பது என்னுடைய கருத்தாகும். இதனால், மின் கட்டணத்தை பல மடங்கு உயர்த்துவதற்கான நிலை உருவாக்கப்படும் என்ற ஓர் அச்சம் பொதுவாகவே உருவாகி உள்ளது. ஆகவே, தனியாருக்கு இந்த மின் உற்பத்தியைக் கொடுக்கக் கூடாது என்ற என்னுடைய கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-15*

அடுத்து, mini பேருந்துகள். போக்குவரத்துத் துறையை பொறுத்தமட்டில் இந்த mini பேருந்துகள் என்றாலே அதைத் தனியாரிடத்தில் கொடுக்கக்கூடிய ஒரு நிலை உருவாகி இருக்கிறது. mini பேருந்துகள் இயக்குவதை தனியாரிடம் விடாமல் மாநில அரசே நடத்துவதற்கு முன்வர வேண்டும். ஏற்கெனவே இதற்கு முன்னால் 1980-84 ஆம் ஆண்டுகளிலே திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சி வரிசையில் இருந்த காலத்தில், தனியாரிடத்தில் இந்தப் பேருந்துகளை வழங்கக் கூடாது என்று இந்த



1999 மார்ச் 22] [திரு. டி. மணி]

அவையிலே சொன்ன விவரங்களை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.
எனவே, இந்த mini பேருந்துகளை அரசே நடத்த வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

10-ஆவது, 12-ஆவது படிக்கும் மாணவர்களுக்கு சாதிச் சான்றிதழ்
கிடைக்க அரசு எடுத்திருக்கிற முடிவைப் பாராட்டுகிறேன். ஆனால், அந்த
முடிவு காகிதத்திலே இருந்து விடாமல் அமல்படுத்துவதில் கறாரான
தன்மை, கண்காணிக்கும் தன்மை நம்முடைய அதிகாரிகள் மட்டத்திலே
வேண்டும் என்பதையும் வலியுறுத்த விரும்புகிறேன்.

ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தனியாரிடம் ஒப்படைப்பது என்பது
கிராமப்புற ஏழையெளிய மக்களுக்குப் பெரிதும் பாதிப்பை உண்டாக்கும்
என்பது எல்லோரும் அறிந்த உண்மை. ஏனென்றால், ஒரு சாதாரண
ஏழை விவசாயியோ, விவசாயத் தொழிலாளியோ, சாதாரண நடுத்தர
மக்களோ நோய்வாய்ப்பட்டு, தனியார் மருத்துவமனைக்குச் சென்றால்
எந்த அளவுக்குப் பணம் அவர்கள் கையிலிருந்து பிடுங்கப்படுகிறது
என்பதை நாம் எல்லோரும் அறிவோம். ஆகவே, கிராமப்புறத்தில் இருக்கிற
மக்களை பாதுகாக்கின்ற வகையில், கிராமப்புறங்களில் இருக்கின்ற ஆரம்பச்
சுகாதார நிலையங்களை, எந்தக் காரணத்தைக் கொண்டும் தனியாருக்கு
வழங்காமல், அரசே அதைச் சீரும் சிறப்புமாக நடத்துவதற்கு நடவடிக்கை
மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன்.

மாநிலத்தினுடைய தொழில் வளர்ச்சி என்பது எல்லா
மாவட்டங்களிலும்—குறிப்பாக, தொழில் வளர்ச்சியிலே நம்முடைய
மாநிலத்தின் மையப் பகுதிகள் வளர்ச்சி அடைகின்றன என்பது ஒரு
பக்கத்திலே இருந்தாலும் ஒரே சீராக தமிழ்நாட்டின் பொருளாதார
நிலையை மேம்படுத்த வேண்டுமென்றால் எல்லா மாவட்டங்களின் மையப்
பகுதிகளிலும், புதிய தொழில் வளர்ச்சியை உருவாக்குவதற்குரிய
நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இது ஒருபுறம் இருக்கும்போது,
மறுபக்கத்திலே தொழில் வளர்ச்சிக்கான சில ஏற்பாடுகளை மாண்புமிகு
முதல்வர் அவர்கள் இன்று செய்து வருகின்ற நேரத்தில், இருக்கின்ற
ஆலைகள் பல மூடப்படக்கூடிய ஒரு சாபக்கேடான நிலையையும்
நம்முடைய மாநிலத்தின் மையத்திலே பார்க்கிறோம். அதற்கு இடம் தராத
வகையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோன்று மூடப்படக்
கூடிய அந்த ஆலைகளிலே பணியாற்றக்கூடிய ஆயிரக்கணக்கான
தொழிலாளர்களுக்கு மாதந்தோறும் ஓர் allowance தருகின்ற ஏற்பாட்டை
மாநில அரசாங்கம் செய்ய முன்வர வேண்டுமென்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. டி. மணி] [1999 மார்ச் 22

கன்னியாகுமரி மாவட்டத்தில் தொழில் வளர்ச்சி என்பது 2 பொருள்களைக் அடிப்படையாக கொண்டது. இரப்பர் தொழிற்சாலை மூலமாக சில ஆயிரம் பேர்களுக்கு பணிகளைத் தரமுடியும். இப்போது ஓர் ஆபத்தான நிலை தமிழகம் பூராவிலும் இருக்கிறது. தமிழ்நாட்டில் இயங்கிக் கொண்டிருக்கின்ற முந்திரி ஆலைகளுக்குத் தேவையான முந்திரிக்கொட்டையை இறக்குமதி செய்யும்போது, அந்த முந்திரிக் கொட்டைக்கு நாம் வரி விதித்திருக்கிறோம். பாண்டிசேரியிலும், ஆந்திராவிலும் அதற்கு வரி இல்லை. இதன் காரணமாக, இங்கிருக்கின்ற முதலாளிகள் பாண்டிச்சேரியை நோக்கியும், ஆந்திராவை நோக்கியும் செல்லுகின்ற ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, முந்திரிக் கொட்டைக்கு சுமத்துகின்ற அந்த வரியை குறைக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

நம்முடைய வரவு-செலவு திட்டத்திலே பார்த்தோமேயானால் நலிவுற்ற ஆலைகளைப் புனரமைத்தல் திட்டம் உள்ளிட்ட தொழில் துறை முன்னேற்றத்திற்கான புதிய ஆலோசனைகள் எதுவும் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. குறிப்பாக, சென்னை ஏற்றுமதி வளாகம் என்று சொல்கின்ற நம்முடைய மாநிலத்தினுடைய மையத்திலே, தாம்பரத்திற்கு அருகிலே இப்படிப்பட்ட ஒரு வளாகம் இருக்கிறது. 5 ஆண்டுகளாக அதே வளாகத்திலே 30,000-க்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அந்தத் தொழில் வளாகத்தை நடத்துகின்றவர்களுக்கு மத்திய அரசு மற்றும் மாநில அரசு மானியமாகவும், கடனாகவும் இலட்சக்கணக்கான பணத்தை ஏராளமாகக் கொடுக்கின்றார்கள். ஆனால், 4-வது ஆண்டைத் தாண்டுகிறபோது, அந்தக் Company-யின் பெயர் மாற்றப்பட்டுவிடுகிறது. Company-யினுடைய பெயர் மாற்றப்படுவது மட்டுமல்லாமல், அவர்கள் மறுபெயரிலே மீண்டும் அங்கே ஒரு தொழிற்சாலை நடத்துகின்ற வாய்ப்பினைப் பெறுகிறார்கள். அங்கே பணி செய்கின்ற ஆயிரக்கணக்கான பெண் தொழிலாளர்களுக்கு அடிப்படைச் சம்பளம், குறைந்தபட்ச சம்பளச் சட்டம் இருந்தும்கூட தருவதில்லை. Computer-க்குத் தேவையான உதிரி பாகங்களை உற்பத்தி செய்கின்ற அந்தத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச சம்பள சட்டதிருத்தத்தை அரசு நிர்ணயித்திருந்தாலும்கூட, அதை அமல்படுத்த அதிகாரிகள் தயாராக இல்லாத சூழ்நிலையில்—அவர்களுடைய சம்பளப் பிரச்சினையோடு Bonus வழங்குவதில்லை; பஞ்சப்படி வழங்குவதில்லை, சம்பள உயர்வு வழங்குவதில்லை. பெண்களை மிக அதிகப்படியாக சுரண்டல் செய்கின்ற ஒரு வளாகமாக அந்தத் தொழில் வளாகம் அமைந்திருக்கிறது என்பதை



1999 மார்ச் 22] [திரு. டி. மணி]

அரசாங்கத்தினுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வந்து—இந்தத் தொழில் வளாகத்திலே பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கெல்லாம் நியாயமான சம்பளம் கிடைக்கவும், அவர்களுடைய உரிமைகளை பாதுகாத்துக்கொள்ளவும் அரசு தக்க நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாக ஏராளமான தனியார் மூலதனம் பொதுவாகக் குவியப் போகிறது என்று மாநிலங்களில் மட்டுமல்லாமல், தேசம் பூராவிலும் பேசப்பட்டு வந்தாலும்கூட, நம்முடைய அனுபவத்தில் நம்முடைய மாநிலத்தில்கூட, அந்த வகையில் தனியார் மூலதனங்கள் குவியாத சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

அதுபோன்று, 60 வயதுக்கு முன் இறக்கும் கைத்தறி நெசவாளர்களுடைய வாரிசுகளுக்கு வழங்கும் காப்பீட்டுத் தொகையை ரூபாய் 40 ஆயிரமாக உயர்த்தி இருப்பதை வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். அதேநேரத்தில் இந்தத் தொகை பாதிக்கப்பட்ட அனைத்து கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கும் கிடைக்கக்கூடிய அளவில் வழிவகைகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, 10 ஆயிரம் ஹெக்டேர் தரிசு நிலம் மேம்பாட்டிற்கென திட்டம் தீட்டியிருப்பதை வரவேற்று, இந்த நிலம் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கும், நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கும் வழங்குகின்ற வகையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதை நான் கூறும்போது, ஒரு கிராமத்தில் ஒரு களியல் வருவாய் கிராமத்தில் மட்டும் ஏற்கெனவே முந்தைய அரசாங்கத்தினுடைய காலத்தில் இங்கே இருக்கின்ற வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இரண்டு ஏக்கர் வரையில் புறம்போக்கு நிலத்திற்கு இலவசமாக பட்டா வழங்கினார்கள். ஆனால் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை இரப்பர் தோட்ட முதலாளிகள் கையகப்படுத்தி வைத்திருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கத்தினுடைய தேவைகளுக்காக 1 ஏக்கரா, 2 ஏக்கரா வேண்டுமென்று சொன்னால், அதை நம்மாலே கையகப்படுத்த முடியவில்லை. எனவேதான், இந்த ஏழை விவசாயிகளுக்கு ½ ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களுக்கு, 1 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களுக்கு பட்டா வழங்குவதற்கு களியல் கிராமத்திலும், மாங்கோடு கிராமத்திலும், அதேபோன்று பொன்மலை கிராமத்திலும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள

[திரு. டி. மணி] [1999 மார்ச் 22

வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, விவசாயத் தொழிலாளர்களுடைய முன்னேற்றத்திற்காக அறிக்கை கொடுத்துள்ள திரு. கோலப்பன் குழுவினுடைய பரிந்துரையை உடனே அமல்படுத்த வேண்டும் என்று இந்த மாநில அரசாங்கத்தை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

தமிழக பொதுத் துறை நிறுவனங்களுக்கு எதிராகப் பரிந்துரைகளைக் கொண்டுள்ள திரு. ராகவன் குழுவினுடைய அறிக்கையை அரசு நிராகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேலையின்மையைப் போக்க உறுதியான நடவடிக்கை எடுக்கவும், வேலையில்லா காலத்தில் நிவாரணம் போன்ற திட்டங்களுக்கு முன்னுரிமை தரவும், இதற்கான நிதியாதாரங்களை மத்திய அரசிடமிருந்து வலியுறுத்திப் பெறவும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, திருமண உதவித் திட்டம் என்று 10-வது வகுப்பு வரை படித்தவர்களுக்கு இருப்பதை, 8-வது வகுப்பு வரை படித்தவர்களுக்கும் நீட்டிக்க வழிவகை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். உள்ளாட்சிக்கான அதிகாரங்களை பரவலாக்க இந்த மன்றத்திலே அது பற்றி விவாதிக்கப் பட்டு முடிவு எடுக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப் பட்டு இருக்கிறது. ஆனால் அதிலே வருகின்ற முக்கியமான பிரச்சினை என்னவென்றால் அந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு முழுமையான அதிகாரம் என்று சொன்னால்—மாவட்டத்தினுடைய பஞ்சாயத்து தலைவர்தான் அதனுடைய Planning Commission-னுடைய தலைவராகச் செயல்படக்கூடிய அளவில் அந்த அதிகாரங்களை நாம் பூராவும் வழங்கி நம்முடைய அதிகாரிகள் அதற்கு சில கருத்துக்களைச் சொல்கின்றவர்களாக மட்டும் இருக்க நடவடிக்கை மேற்கொள்வதோடு அந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கியிருக்கின்ற அதிகாரம் போன்று அதிகப்படியான நிதியையும் தர வேண்டுமென்றும் இந்த மாமன்றத்திலே நாம் ஒருமுடிவுக்கு வர வேண்டுமென்று கேட்டு, கடைசியாக, பற்றாக்குறை Budget என்று சொல்கிற நிலை உருவாக்கப்பட்டு இருக்கிறது. ஏற்கெனவே இந்தியாவினுடைய தாராள பொருளாதாரக் கொள்கை என்ற தவறான கொள்கையின் விளைவுதான் இன்று மாநிலத்திலே ஒரு பற்றாக்குறை Budget-ஐ நாம் கொண்டு வரும் சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. இதைப் போக்குவதற்கு கடைசி நேரத்தில் அதிகப்படியான வரியை சுமத்தாமல் நாம் அதை வழி நடத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.



1999 மார்ச் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. மணிமாறன்.

*பிற்பகல் 1-25*

* **திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1999-2000ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பேசுகின்ற வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிதிநிலை அறிக்கை மீதான உரையை தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ஆரம்பிக்கின்றபோதே மாநில சுயாட்சித் தத்துவத்தை வலியுறுத்தி தன்னுடைய கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே அவர் சொல்லியிருப்பது, சமூக நீதிக் கொள்கைக்கு ஏற்ப இடஒதுக்கீட்டை அந்தந்த மாநிலங்களே நிர்ணயித்துக் கொள்ள உரிமை பெற்றிட வேண்டும் என்கின்ற வாசகம் பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட, மக்கள் மத்தியிலே சொல்லப்பட்ட அந்த மாநில சுயாட்சித் தத்துவத்திற்கு மேலும் உயிரூட்டி, சிறப்பிக்கும் அந்த வாசகம் சிறப்பாக அமைந்து இருக்கின்றது. மற்ற மாநிலங்களில் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்கின்றபோது அந்தந்த மாநிலங்களின் உரிமைகளுக்குக் குரல் கொடுக்கிறார்களோ, இல்லையோ, ஆனால் தமிழகத்தில், அதுவும் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்தில், ஒவ்வொரு காலகட்டத்திலேயும் மாநில சுயாட்சியை அந்தந்த மாநிலங்கள் பெற்றிட உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு, மாநாடுகளும், மாநாட்டுத் தீர்மானங்களும், சட்டமன்றத்திலே தீர்மானங்களும் நிறைவேற்றி அனுப்புவது ஓர் உயிர்க் கொள்கையாக திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தி வந்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்டத்தான் சட்டமன்றத்திலே, நிதிநிலை அறிக்கையிலே அவர் கூறுகின்றபோது அந்த வாசகத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தை 3-ஆகப் பிரிக்கிறார்கள். ஒன்று மாநிலத் தொகுப்பு, இன்னொன்று மத்தியத் தொகுப்பு, இன்னொன்று கூட்டுத் தொகுப்பு, தொடர்ந்து இந்த சுதந்திர இந்தியாவில் மாநிலங்களுக்கு இருக்கக்கூடிய அதிகாரங்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைக்கப்பட்டு கூட்டுத் தொகுப்புக்கும், மத்திய அரசுத் தொகுப்புக்கும் சென்றுவிடுவதை பல்வேறு கால கட்டங்களிலே நாம் எடுத்துக்காட்டி மாநில அதிகாரங்கள் அதிகப்படுத்தப்பட வேண்டும் என்ற தத்துவத்தை நாம் வலியுறுத்தி வந்திருக்கிறோம். அந்த உயிர்க் கொள்கைக்குத்தான் மிகச் சிறந்த நிதிநிலை அறிக்கையை அளித்திருக்கக்கூடிய தமிழக முதல்வர், கலைஞர் அவர்கள் முதலிடம் கொடுத்திருக்கிறார்கள் என்பது நமக்குப் புரிகிறது.

இந்த நிதிநிலை அறிக்கை மூலமாக ஏழை எளிய மக்களுடைய, இன்னும் சொல்லப்போனால் நடுத்தர மக்களுடைய அன்றாட வாழ்க்கை உயிரூட்டப்பட்டிருக்கிறது என்றுதான் இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு கணக்கினை அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இங்கே நண்பர்கள் சொன்னதைப் போல 1993-94ஆம் ஆண்டு 35.03 ஆக இருந்த வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுடைய சதவிகிதம், சிறப்பான ஆட்சி நிர்வாகத்தால், சிறந்த நிதிநிலைக் கொள்கையின் காரணமாக 27.58 என்ற அளவுக்குக் குறைந்திருப்பது இந்த நாட்டில் கடந்த 3 ஆண்டு காலமாக, தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் அளித்த நிதிநிலை அறிக்கையின் காரணமாகத்தான். இதற்குக் காரணம், தமிழக முதல்வர் அவர்களுடைய சீரிய சிந்தனையும், பாராட்டத்தக்க செயல் ஆற்றலும்தான் என்பதை இந்தப் புள்ளிவிவரம் நமக்கு அளிக்கிறது.

இன்னொன்று, சமீபத்தில் பத்திரிகையிலே வந்த செய்தி. மகாராஷ்டிர மாநிலத்தினுடைய ஆளுநராகவும், தமிழக அமைச்சரவையில் நிதியமைச்சராகவும் மத்திய அமைச்சரவையில் நிதியமைச்சராகவும் இருந்த பெரியவர் சி. சுப்பிரமணியன் அவர்கள் தன்னுடைய பாராட்டுக் கடிதத்தில் இதைப்போல ஒரு சிறந்த நிதிநிலை அறிக்கையை எவரும் தாக்கல் செய்திட முடியாது என்று சொல்லியிருப்பது அவர்களுடைய உயிரோட்டமான நடவடிக்கைகளுககு மேலும் வலுவூட்டுகின்ற ஒரு செய்தியாகத்தான் அந்தச் செய்தியை நாம் பார்க்கிறோம். இது எப்படி இருக்கிறது என்றால் 'வசிஷ்டர் வாயால் பிரம்ம ரிஷி பட்டம் பெற்றதைப் போல' என்றுகூடச் சொல்லலாம். அந்த அளவுக்கு ஒரு முதுபெரும் தலைவர் தன்னுடைய கருத்தைத் தெரிவிக்கின்றபோது ஆற்றல் மிக்க ஒரு தலைவரால் உருவாக்கப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கை தமிழகத்திலே இருக்கக்கூடிய ஏழையெளிய, நடுத்தர மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்து இருக்கிறது என்று சுட்டிக்காட்டுவதை ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்கச் செய்தியாகத்தான் நாம் கொள்ள முடியும்.

கடந்த கால நிதிநிலை அறிக்கையில் தொழில் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அது பல்வேறு தொழிற்சாலைகளை தமிழகத்திலே உருவாக்குவதற்கு வாய்ப்பாக இருந்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் நாளை தொடருங்கள்.





## 3. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

### (இ) மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரை அவையில் தாக்கியதற்காக திரு. இரா. தாமரைக்கனியை கைது செய்து காவலில் வைத்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையை ஒத்திவைப்பதற்கு முன்னால் ஓர் அறிவிப்பு. நான் ஏற்கெனவே சொன்னதுபோல, மாண்புமிகு உறுப்பினர்கள் தாமரைக்கனி, கருப்பசாமி ஆகியோர் விடுதியிலே தங்கக்கூடாது என்கின்ற உத்தரவை அமல்படுத்தப் போகிறேன்; அதை அவைக்கு அறிவிக்கிறேன். இன்று நடந்த கொடூரச் சம்பவம் குறித்து காவல் துறைக்கு ஓர் ஆணை பிறப்பித்து, தாமரைக்கனி அவர்களைக் கைது செய்து காவலிலே வைக்க உத்தரவிடுகிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (23-3-1999) செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

72. படங்களுக்கான வார்னிஷ் பூச்சு ஒப்பந்தப் பணிகளைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டப் பிரிவு 3-B-ன்கீழ் வணிகர் ஒருவர் செலுத்தத்தக்க வரியைப் பொறுத்தமட்டில் மேற்சொன்ன பணி ஒப்பந்தத்தில் மேற்கொள்ளப்படும் பணிகளில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் மாநிலத்திற்குள்ளேயே கொள்முதல் செய்யப்பட்டிருந்து அத்தகைய பொருட்களுக்கு செலுத்த வேண்டிய வரி ஏற்கெனவே விதித்து வசூலிக்கப்பட்டிருக்கும் நேர்வில் வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 15-05-1998 ஆம் நாளிட்ட 150 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

[1999 மார்ச் 22

73. 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்குதல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 26-11-1998-ஆம் நாளிட்ட 249ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

74. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் 1997-98ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 323(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

75. 1997-98ஆம் ஆண்டிற்கான சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனத்தின் நாற்பத்தொன்றாவது ஆண்டறிக்கை. (1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் [மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

76. 1996-97 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் இருபத்தாறாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

77. 1997-98ஆம் ஆண்டிற்கான அண்ணா பல்கலைக் கழகத்தின் ஆண்டுக் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. [1979ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

21.3.1999

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

35. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் 1997-98 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை-ஆண்டு கணக்குகள். (தமிழ், ஆங்கிலம்).

N99-66-1

—0—

221800

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280
and 283 of the Tamil Nadu
Legislative Assembly Rules and
printed by the Director of
Stationery and Printing,
Chennai-600 002.